விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 மாசி 25 ஞாயிற்றுக்கிழமை (09.03.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 080

## 'நெருக்கடியிலும்! மகிந்த கூல்!!'



நேற்று நடைபெற்ற இலங்கை – பாகிஸ்தானுக்கிடையிலான ஆசியக் கிண்ண இறுதிப் போட்டியினை ஜெனிவா நெருக்கடிகளுக்கு மத்தியிலும் அலரிமாளிகையில் மகனுடன் சேர்ந்து ஜனாதிபதி பார்த்து மகிழ்கின்ற காட்சி...

# யாழ்தேவி ரயில் மோதி தந்தை, மகன் பரிதாபப் பலி


(யாழ்ப்பாணம்)

யாழ்தேவி புகையிரதம் மோதியதில் தந்தையும் மகனும் உடல் சிதறுண்டு பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

பளையிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்துக் கொண்டிருந்த யாழ்தேவி புகையிரதம் வவுனியா புளியங்குளம் விளக்கு வைத்த குளம் பகுதியில், மோட்டார் சைக்கிளில் பாதுகாப்பற்ற புகையிரதக் கடவையை கடந்த போது தந்தையையும் மகனையும் மோதித்தள்ளியுள்ளது.

இவ் விபத்து சம்பவம் நேற்றுக்காலை 6.30 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக ஓமந்தை பொலிஸார் தெரிவித்தனர்.

இவ் விபத்தில் வவுனியா சுந்தரபுரத்தைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் சத்தியசுதன், அவருடைய மகனான சத்தியசுதன் டினோஜன் ஆகியோரே 24 ஆம் பக்கம் பார்க்க..



## இந்தியா ரஷ்யா போல் செயற்பட வேண்டும் - வைகோ

(சென்னை)

இந்திய மத்திய அரசாங்கம் ரஷ்யாவை பின்பற்ற வேண்டுமென மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

உக்ரேய்னில் வாழும் ரஷ்ய மொழி பேசும் மக்களுக்காகவே அந்நாட்டு விவகாரத்தில் ரஷ்யா தலையீடு செய்வதாகவும் இதே வழியை இந்திய மத்திய அரசாங்கம் இலங்கைத் தமிழர் விவகாரத்தில் பின்பற்ற வேண்டு 24 ஆம் பக்கம் பார்க்க..

# அமெரிக்க தீர்மானத்திற்கு ஒருபோதும் அஞ்சேன்

## கவலை கிடையாது என்கிறார் ஜனாதிபதி

ஐ.நா.வில் அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானத்தைப் பற்றி எனக்கு கவலையோ அச்சமோ கிடையாது என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

காணொலி வாயிலான கேள்வி-பதில் நிகழ்ச்சியில், இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கேட்கப்பட்டது.

இதற்கு பதிலளித்த ஜனாதிபதி, தேர்தல் ரீதியாக போட்டியிட்டு வெற்றி பெற முடியாத எதிர்க்கட்சிகள் மற்றும் என்.ஜி,ஓ.க்கள் இதைப்போன்ற பொய் கதைகளைக் சர்வதேச சமுதாயத்திற்கு கொண்டு சென்று வெற்றி பெற முயற்சிக்கிறாரகள் என்று குற்றம் சாட்டினார்.

ஐ.நா. மனித உரிமை ஆணையத் தலைவர் நவிபிள்ளை தொடர்பான கேள்வி ஒன்றுக்குப் பதில் அளித்த அவர், "நான்கு நாட்கள் இங்கு முகாமிட்டிருந்து தவறான தகவல்களை கொண்டு சென்று, அந்த தவறான தகவலின் அடிப்படையில் அவர்கள் முன் வைத்திருக்கும் அறிக்கையை 23 ஆம் பக்கம் பார்க்க..

## துணைவேந்தர் பதவி தேர்தலில் வசந்திக்கு அதிக வாக்கு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவிக்கான தேர்தல் நேற்றைய தினம் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற நிலையில் 24 வாக்குகள் பெற்று தற்போதைய துணைவேந்தர் , பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் 23 ஆம் பக்கம் பார்க்க..

## மும்மொழி கொள்கை ஜப்பான் நிதியுதவி

இலங்கையின் மும்மொழி கொள்கை உட்பட அடையாளம்காணப்பட்டுள்ள இரண்டு அபிவிருத்தித் திட்டங்களுக்கு 100 மில்லியன் ரூபாவை வழங்க ஜப்பான் முன்வந்துள்ளது.

இலங்கையில் ஆசிரியர்களின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளை கற்பிக்கும் தரத்தை மேம்படுத்தவும் திறனை அபிவிருத்தி செய்யவும் இந்த நிதியில் 23 ஆம் பக்கம் பார்க்க..

## 239 பேருடன் பயணித்த மலேசியன் விமானம் கடலில் வீழ்ந்தது

(கோலம்பூர்)

இரு குழந்தைகள், 12 விமானப் பணியாளர்கள் உள்ளிட்ட 239 பேருடன் சீனாவின் பீஜிங் நோக்கி மலேசிய தலைநகர் கோலாலம்பூரிலிருந்து பயணமாகிய மலேசியன் எயார்லைன் விமானம் வியட்னாம் கடற்பரப்பில் விபத்துக்குள்ளாகியுள்ளதாக அந்நாட்டு கடற்படை தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை, மலேசிய நேரம் 2.40 (இலங்கை நேரம் அதிகாலை 5.10) மணிக்கு 227 பயணிகளை ஏற்றிக்கொண்டு பீஜிங் நோக்கி விமானம் புறப்பட்டது. புறப்பட்டு இரண்டு மணி நேரத்தின் பின்னர், வியட்னாம் வனப்பகுதியில் 35ஆயிரம் அடி உயரத்தில் விமானம் பறந்துகொண்டிருக்கும் போது, விமானக்கட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பு முற்றாக துண்டிக்கப்பட்டமையால் விமானம் காணாமல் போயுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் வியட்னாம் கடற் 23 ஆம் பக்கம் பார்க்க..

## இராணுவ மயமாக்கலால் பெண்களுக்கு அச்சுறுத்தல்

### சி.வி குற்றச்சாட்டு



வட மாகாணத்தில் இராணுவ மயமாக்கல் காணப்படுவதால் பெண்களின் பாதுகாப்பு கேள்விக்குரிய விடயமாகியுள்ளதாகவும், பெண்கள் மீது மேற்கொள்ளப்படும் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் காவல்துறை அசண்டயீனமாகச் செயற்படுவதாகவும் வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

சர்வதேச மகளிர் தினமான நேற்று, விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மகளிர் தின நிகழ்வு நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே முதலமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

முதலமைச்சர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

"வட மாகாணத்தில் யுவதிகள் வலுக்கட்டாயமாக இராணுவத்தில் 23 ஆம் பக்கம் பார்க்க..



SISIL WORLD

உங்கள் மனதிற்கு பிடித்த ஆடைகளை உங்கள் கைவண்ணத்தில் நீங்களே தைத்து கொள்வதற்கு

SINGER, ZOJE, REGNIS தையல் இயந்திரங்கள் இப்போது எம்மிடம் இருந்து

கடன் அட்டைகளுக்கு
விசேட விலை கழிவு மற்றும்
வட்டி இல்லாத கொடுப்பனவு முறை

No106, K.K.S Road Jaffna. 021-2210291
No125, K.K.S Road, Chunnakam. 021-2242335
No17/3, Kandy Road, Kilinochchi 021-2283755

(C-6695)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவை

- சமையலாளர் (ஆண்/பெண்)
- உணவு பரிமாறுபவர்
- அறை பராமரிப்பாளர் (Room Boy)

விடுதி, உணவகத்துக்கு மேற்குறிப்பிட்டோர் தேவைப் படுகின்றனர். (5789)

**தொடர்பு: 0777352165**

## Vacancy opportunity for the Management

DMI Multinational கம்பனியில் முகாமைத்துவ துறையில் தொழில் புரிய ஓர் அரிய சந்தர்ப்பம் இதோ...

- அனுபவம் தேவையற்றது
- O/L அல்லது A/L
- குறுகிய காலப் பயிற்சி
- நிரந்தர தொழில் வாய்ப்பு

+Customer service
+Administrative
+Marketing Trainee
+Management

(5787)

எம்முடன் இணையும் உங்களுக்கு பயிற்சியின் போது 12,000/= பின் 40,000/= மேல் தங்குமிட வசதி இலவசம் வெளி மாவட்டத் தாரும் விரும்பத்தக்கது.

தொடர்பு:- 0777009820, 0771908997

## Vacancy in Jaffna

எதிர்காலத்தை வெற்றிகொள்ள நிரந்தரதொழில். சர்வதேச முன்னணி நிறுவனத்தின் New Office 4 இற்கு 18 வயதுக்கு மேற்பட்ட O/L தோற்றிய 30 பேர் வீதம் இணைத்துக் கொள்ளப் படுகின்றனர்.

குறிப்பு:- பயிற்சி, தங்குமிட வசதிகள் இலவசம். பயிற்சியின் போது 12,000/= பின் 35,000/= + (5788)

அழைக்கவும்:- 0772302795, 0775566226

NORTH LEAD Computer & Accessories Wholesaler, Computer Repairing & Services
Computer & Language Classes, Computer Printing & Designing

ALL LAPTOPS, DESKTOP REPAIRS ONE DAY SERVICE

QUICK REPAIR & SERVICE QUICK PICK-UP AND DELEVERY
Laptop & Desktop Accessories Available
Laptop Accessories :
Battery Packs
LCD & LED Screens
Hard Disk, Ram, DVD R/W
Power Adapters, Keyboards.



கணனிகளின் அனைத்து உதிரிப்பாகங்களையும் குறைந்த விலையில் கூடிய உத்தரவாதத்துடன் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம் (வியாபாரிகளுக்கு விஷேட விலைக்கழிவில்)

No: 328, Stanley Road, Jaffna. (Near to Ariyakulam Junction) Tel: 021-222 4459, 0774192275 (C-6708) Branch: No:12, Kanagapuram Road, Kilinochchi (Near to Barathi Hotel) Tel/Fax: 021-206 0909, 0772533390

## ஓடுகள், செங்கற்கள் விற்பனைக்குண்டு.



தரமான ஓடுகள், செங்கற்கள் யாழ்,வன்னி போன்ற பிரதேசங்களுக்கு விநியோகம் செய்து தரப்படும்

தொடர்புகளுக்கு-077-3818799 (C-6705)

பிரணவன் என்ரபிறைசஸ்
இல:635, பருத்தித்துறை வீதி நல்லூர், யாழ்ப்பாணம்.

## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
- கடிதங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமி ருந்து

Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும். (C-6697)

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392
WESTERN UNION MONEY TRANSFER

## உடனடி வேலைவாய்ப்பு வட மாகாணம்

மாதம் 60000.00 இற்கு மேல் உழைத்து எதிர்கால வாழ்வை சிற்பாக அமைத்துக் கொள்ள விருப்பமா?

USA - CALIFORNIA வை தலைமை அலுவலகமாகக் கொண்டு சர்வதேச ரீதியில் செயல்படும் அதன் இலங்கையின் வட மாகாணத்திற்கு (யாழ்ப்பாணம்/வவுனியா/கிளிநொச்சி/மன்னார்/முல்லைத்தீவு) சந்தைப் படுத்தல் (Advertising) முகாமைத்துவத்திற்கு ஆட்கள் தேவை (Management)

ஆர்வமுள்ள O/L, A/L படித்த 18 - 30 வயதுக்கு உட்பட்ட ஆண்/பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளவும். (C-6707)

**0777274795/0215686466**
(73, st. Annes Church Road, Chundikuly, Jaffna.



# 15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 1922 - 01 - 01
மறைவு 1999 - 02 - 23

ஸ்ரீமான்
**சின்னையா நல்லையா**
(6-ம் வட்டாரம், மண்டைதீவு)

ஐயா! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

21/3A, இந்து மகளிர் ஒழுங்கை, கந்தர்மடம்.
- குடும்பத்தினர் -

## தற்போது புதிய இடத்தில் வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை



தற்போது எமது கிளை புதிய இடத்துக்கு மாற்றப்பட்டுள்ளது இல. 30 கனகபுரம் வீதி, கிளிநொச்சிக்கு மாற்றப்பட்டுள்ளது.

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், அன்பளிப்புப் பொருட்கள் உணவுப் பண்டங்கள் என்பவற்றை மிகவிரைவாக அனுப்பிட. 220ற்கு மேற்பட்ட நாடுகளுக்கான மிகக் குறைந்த கட்டணம்.

11Kg மேற்பட்ட பொதிகளுக்கு 1Kg க்கான மிகக் குறைந்த கட்டணம்

- லண்டன் - 650/=
- பிரான்ஸ் - 750/=
- கனடா - 900/=
- டென்மார்க் - 800/=
- அவுஸ்திரேலியா - 750/=
- சுவிஸ்- 850/=
- நெதர்லான்ட் - 850/=
- நோர்வே - 900/=
- இத்தாலி - 875/=
- ஜேர்மனி - 700/=

உங்கள் இல்லங்களில் இருந்தவாறே பொதிகளை அனுப்பிட தொடர்பு கொள்ளவும்
0770569642



(C-6709)

**திருமுருகன் கொம் நெற்**
இல. 271A, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (ஆல் சிலோனிற்கு முன்பாக அமைந்துள்ளது.)
பிரதான வீதி, சங்கானை. 021 222 7835
இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
இல.18, பிரதான வீதி, நெல்லியடி. (HNP வங்கிக்கு அருகாமையில்)
இல. 30,கனகபுரம் வீதி, கிளிநொச்சி
TCN EXPRESS இல. 2B, நெல்சன் பிளேஸ், கொழும்பு- 6

3-5 வேலை நாட்களில் உரிய முகவரியில் ஒப்படைக்கப்படும்

## union assurance வேலைவாய்ப்பு

இலங்கையில் முன்னணி வகிக்கும் கம்பனிகளில் ஒன்றானதும் மற்றும் 25 வருடங்களை பூர்த்தி செய்துள்ளதுமான யூனியன் அசூரன்ஸ் கம்பனியின் சுன்னாக பிராந்திய கிளைக்கான பதவி வெற்றிடங்கள்.

★ காப்புறுதி ஆலோசகர் (I.A)
★ சிரேஷ்ட தனிப்பட்டோர் நிதி ஆலோசகர் (S.P.F.I)
★ சிரேஷ்ட தனிப்பட்ட நிதி முகாமையாளர்



**மேற்படி பதவிக்கான தகைமைகள்**
- க.பொ.த சா/தரத்தில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி
- 20 வயதிற்கு மேற்பட்ட ஆண்/பெண் இருபாலாரும்
- விளையாட்டுத்துறையில் திறமை உள்ளவர்கள்
- உங்கள் இலக்கை அடைவதற்கான உறுதியான மனோநிலை உள்ளவர்கள்

★ முகவர் அபிவிருத்தி உத்தியோகத்தர் (A.D.O)
★ முகவர் அபிவிருத்தி முகாமையாளர் (A.D.M)

**மேற்படி பதவிக்கான தகைமைகள்**
- எந்தவொரு காப்புறுதி நிறுவனத்திலும் குறைந்தது ஒரு வருட காலம் அல்லது அதற்கு மேல் வேலை செய்தவர்கள், செய்து கொண்டிருப்பவர்கள் நேர்முகத் தேர்வுக்குத் தோற்றலாம்.
- சந்தைப்படுத்தல் துறையில் (Marketing) முன் அனுபவமுள்ளவர்களும், குழு முகாமைத்துவம் செய்யக் கூடியவர்களும் நேர்முகத் தேர்வுக்கு தோற்றலாம்.

(5785)

காலம் :- (11/03/2014) செவ்வாய்க்கிழமை
இடம் :- யூனியன் அசூரன்ஸ்
நேரம் :- மு.ப - 10.00 மணி

தொடர்புகளுக்கு: 0772417007

இல. 160 1/6. கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.


# பாம்புக்கடி

## சிகிச்சை பலனின்றி ஒருவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவில் பாம்புக்கடிக்கு இலக்கானவர் சிகிச்சை பலனின்றி யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு முள்ளியவளையைச் சேர்ந்த யோசேப் செல்வநாயகம் (வயது-68) என்பவரே இவ்வாறு பாம்புக்கடிக்கு இலக்காகி உயிரிழந்தவராவார்.

கடந்த வாரம் பாம்பு தீண்டிய நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் சிகிச்சை பலனளிக்காமல் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாம்பு தீண்டிய வேளையில் முதலில் முல்லைத்தீவு மாஞ்சோலை பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.இந்நிலையில் அங்கு அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவரது சடலம் தற்போது யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (செ-4-6)

## யுவதியைக் கடத்தி பாலியல் துன்புறுத்தல்

(கரவெட்டி)

பதினெட்டு வயது யுவதியை கடத்திச் சென்று பாலியல் துஷ்பிரயோகம் புரிந்த மூன்று இளைஞர்களைத் பொலிஸார் வலை வீசி தேடி வருகின்றனர்.

இச் சம்பவம் தொடர்பாக தெரியவருவது, வரணி இடைக்குறிச்சி பகுதியை சேர்ந்த யுவதி ஒருவர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை வடமராட்சி வல்லிபுர ஆலயத்துக்கு வழிபட சென்று விட்டு வடமராட்சி முள்ளியாக்கரு வெளிப்பகுதியில் பயணித்துக் கொண்டிருந்துள்ளார்.

அப்போது முச்சக்கரவண்டியில் வந்த மூன்று இளைஞர்கள் அவரை கடத்திச் சென்று பாலியல் பலாத்காரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த யுவதி அவர்களிடம் இருந்து போராடி தப்பிக்க முற்பட்ட போதும் அது பயனளிக்காமல் போயிற்று.

இதேவேளை இச் சம்பவத்தை தடுக்க முற்பட்ட அப்பகுதி இளைஞர் ஒருவரையும் அப் பாதகர்கள் கடுமையாக தாக்கி காயப்படுத்தியுள்ளனர்.

படுகாயமடைந்த இளைஞன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதோடுபிரஸ்தாப யுவதி யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பாக நெல்லியடிப் பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து அம் மூவரையும் பொலிஸார் தேடி வருகின்றனர்.

இதேவேளை யுவதியை கடத்த பயன்படுத்திய முச்சக்கர வண்டியையும் நபர் ஒருவருடைய அடையாள அட்டையையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-24)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் தேசிய கலை இலக்கியப் போட்டிகள்

கலாசார அலுவல்கள் திணைக்கத்தின் ஏற்பாட்டில் தேசிய கலையிலக்கியப் போட்டிகள் வடமராட்சி வடக்கு பிரதேச மட்டத்தில் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிகளாகவும் திறந்த போட்டிகளாகவும் நடைபெறவுள்ளதாக பருத்தித்துறை பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார்.

இதில் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிகளாக கட்டுரைப்போட்டி(கனிஷ்ட,சிரேஷ்ட பிரிவு), கவிதைப்போட்டி(கனிஷ்ட,சிரேஷ்ட பிரிவு), கவிதைப் பாடல் (கனிஷ்ட,சிரேஷ்ட,பாலர் பிரிவு), கையெழுத்துப்போட்டி(பாலர்பிரிவு), பாடல் நயத்தல் போட்டி(சிரேஷ்ட பிரிவு) என்பனவும் நடைபெறவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இப்போட்டிகள் யாவும் பாடசாலை மாணவர்களுக்கு மட்டுமே உரியது. இப் போட்டிகளில் பாலர் பிரிவு 6 தொடக்கம் 10 வயது வரையுள்ள மாணவர்கள், கனிஷ்ட பிரிவு 11 தொடக்கம் 15 வரையுள்ள மாணவர்கள், சிரேஷ்ட பிரிவு 16 தொடக்கம் 19 வரையுள்ள மாணவர்கள் யாவரும் பங்குபற்றலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

19 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான திறந்த போட்டியில் தனி நபர்கள் எவரும் பங்குபற்றலாம்.

இப்போட்டிகளில் பாடல் ஆக்கம் மற்றும் நாட்டார் கலை கற்றல் போட்டி, இலக்கிய விவரணப் போட்டி, சிறுகதைப் போட்டி, கவிதைப் போட்டி, சிறுவர் கதை, ஆக்கப் போட்டி என்பனவும் நடைபெறவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இப் போட்டிகளில் பங்கு பற்ற விரும்பும் போட்டியாளர்கள் விண்ணப்பப் படிவத்தினையும் மேலதிக விபரங்களையும் பருத்தித்துறை பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் பெற்று எதிர்வரும் ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் பருத்தித்துறைப் பிரதேச செயலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு பருத்தித்துறை பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (2)

## பந்துமனம்பெரியின் ஆற்றுகை மற்றும் கருத்துரை

சமகாலக்கலை, கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக் காப்பகத்தினால் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் தொடரின் இரண்டாவது நிகழ்வாக "மொழியாக உடல்" (Body as language) எனும் தொனிப்பொருளில் பந்துமனம் பெரி ஆற்றுகை ஒன்றை நிகழ்த்திக்காட்டுதலுடன் தொடர்ந்து கருத்துரையும் செய்யவுள்ளார்.

இலங்கையின் முதலாவது ஆற்றுகை கலைஞரும் அதேவேளை சிற்பம், தாபனக்கலை, வரைதல் போன்றவற்றிலும் படைப்பாளுமையை வெளிப்படுத்துபவருமாவார்.

இவருடைய ஆற்றுகையின் தொடர் நிகழ்வில் "ஸ்திரிபோடுபவன்" (Iron Man) நிகழ்த்திக் காட்டப்பட்ட இருப்பதுடன், இது இலங்கையின் தற்போதைய பிந்திய முரண்பாட்டுச் சூழலை எதிர்கொள்வதன் சிக்கலை வெளிப்படுத்துவதுமாகும்.

மேற்படி நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை சமகாலக் கலை, கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக்காப்பகம் இல. 199, கோவில் வீதி, நல்லூரில் இடம்பெறவுள்ளது. (2)

## அன்புக்கரங்கள் நூல் வெளியீட்டு விழா

வ/மதியாமடுவிவேகானந்தாவித்தியாலயத்தின் தமிழ்மன்றத்தின்ஏற்பாட்டில்அன்புக்கரங்கள்எனும் நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு பாடசாலைமண்டபத்தில் அதிபர் கி.சிவசோதிதலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நூல்வெளியீட்டுவிழாவிற்குபிரதமவிருந்தினராக வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் க.பரந்தாமன், விசேட விருந்தினராக வவுனியா வடக்கு பிரதிக் கல்வி பணிப்பாளர் திருமதி மாலதி மிகுந்தன் ஆகியோர் கலந்து கொண்டு, சிறப்பிக்கவுள்ளனர்.

சிறப்பு விருந்தினராக வவுனியா வடக்கு கலாசார உத்தியோகத்தர் திருமதி விஜிதா செல்வகுமார், கௌரவ விருந்தினர்களாக மருதோடை அ.த.க.பாடசாலை அதிபர் க.நாகராசா, நெடுங்குளம்முத்துமாரிவித்தியாலயத்தின் அதிபர் ந.நவரட்ணம்ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந் நூல் வெளியீட்டு உரையினை இந்து சமய ஆசிரிய ஆலோசகர் திருமதி.எஸ். முருகேசம்பிள்ளை ஆற்றுவார். ஏற்புரையினை நூலாசிரியர்க.ஸ்ரீநந்தகோபன்நிகழ்த்துவார். (2)

## ஜெயந்தி விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்உரும்பிராய்சந்தியில்அமைந்துள்ள இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலையத்தில், பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் 179 ஆவது ஜெயந்தி விழா இன்று ஞாயிற்றுக்கி ழமை நடைபெறவுள்ளது. (2)

## மாசிமக விரதகால சிறப்பு சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் மாசிமக விரதகால விசேட சிறப்பு சொற்பொழிவு எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 7மணிக்கு உடுவில் மல்வம் பிரதேசத்தில் உள்ள இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் மேற்படி திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.தர்ப்பணா சுதர்சன் தலைமையில் நடை பெறும்.

இதன் போது ஓசை ஒலியெல்லாம் ஆனாய் நீயே எனும் தொனிப்பொருளில் சைவப் புலவர் கா.கமலநாதன் ஆற்றும் சிறப்புச் சொற்பொழிவு நடைபெறும். (2)

## வாரம் ஒரு தகவல்

### சத்தம் இல்லாத யுத்தம்

"சரசு உன் வீட்டுக்காரர் எங்கே?"

"அரசியல்வாதியானதிற்குப் பின் அவர் எங்கே வீட்டில் தங்குகி றார்? எந்த ஊரில் எந்த மேடையில் பேசிக் கொண்டிருக்கிறாரோ?"

"பேசட்டும் பரவாயில்லை. ஆனால் சத்தம் போட்டுப் பேசச் சொல்லாதே"

"ஏன்?"

"சத்தம் போட்டுப் பேசுபவர்களுக்கு குரல்வளை பாதிக்கப்படு வதாக டாக்டர்கள் சொல்கிறார்கள்."

"அப்படியா?"

"ஆமாம். 16 விதமான நோய்கள் குரல்வளையைப் பாதிக் கிறதாம். முக்கியமாக பாதிப்புக்குள்ளாகிறவர்கள் யார் தெரியுமா?"

"யார்?"

"ஆசிரியர்கள், பாடகர்கள், அரசியல்வாதிகள்"

"அப்படியானால் இவர்களெல்லாம் பாடம் நடத்தினாலும் பாடி னாலும் பேசினாலும் அதிக சத்தம் போடாமல் இருப்பது நல்லது என்கிறாயா?"

"ஆமாம், அதனால் தான் எனது வீட்டுக்காரரிடம் கூடச் சொல்லி வைத்திருக்கிறேன்."

"என்ன சொல்லி வைத்திருக்கின்றாய்?"

"என்னைத் திட்டுவதென்றால்கூட மெதுவாகத் திட்டுங்கள் என்று சொல்லி வைத்திருக்கின்றேன்".

"உங்களுக்குள் சண்டை வருமா?"

என்ன அப்படி கேட்டு விட்டாய்? தினமும் சண்டை சச்சரவுதான் இருந்தாலும் பக்கத்து வீட்டுக்கு கூட கேட்காது."

"ஆச்சரியமாக இருக்கிறதே!"

"இருந்தாலும் அடுத்த ஜென்மத்திலும் அவரே என் கணவராக வரவேண்டும் என்று வேண்டிக்கொண்டிருக்கிறேன்."

"அப்படியா?"

"ஆமாம். போடவேண்டிய சண்டை இன்னும் பாக்கி இருக்கிறது.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## இராசி பலன்

09.03.2014

(மாசி 25, ஞாயிற்றுக்கிழமை )

சூரிய உதயம் காலை 6.22 மணிக்கு

அட்டமி முற்பகல் 11.19 மணிவரை

மிருகசீரிடம் முன்னிரவு 11.18 மணிவரை

இராகுகாலம் 4.54-6.24 மணிவரை

சுபநேரம் 9.24-10.54 மணிவரை

அட்டமி-நவமி

கச்சியப்ப சிவாச்சாரியார் குருபூசை

**மேடம்** சகோதரர்கள் ஆதரவால் நல்ல காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவமொன்று இடம்பெறலாம், பகையொன்று நட்பாகலாம்.

**இடபம்** தொலைபேசி வழித்தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், வார்த்தைகளால் பிறரைக் கவர்வீர்கள்.

**மிதுனம்** ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் செலவுகள் ஏற்படலாம், வியாபார நலன் கருதி புது முயற்சி எடுப்பீர்கள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும்.

**கடகம்** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், மாற்றங்களால் ஏற்றம் உருவாகலாம், சுப செலவுகள் அதிகமாகும், சயனசுகக் குறைவான நாள்.

**சிங்கம்** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, உறவினர் வருகையுண்டு, புதிய பொருட்சேர்க்கையுண்டு, கௌரவமான நாள்.

**கன்னி** கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், புதிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், அந்நியர்களின் உதவிகள் கிடைக்கலாம்.

**துலாம்** வெளியூர்ப் பயணங்களால் ஆதாயமுண்டு, தந்தை வழி உறவினரால் மனநிறைவான செய்தியொன்று வந்து சேரலாம், சில கட்டுப்பாடுகள் ஏற்படலாம்.

**விருச்சிகம்** பிரயாண பயமுண்டு, குடும்பத்தில் தேவையற்ற மனஸ்தாபங்கள் ஏற்பட இடமுண்டு, எடுத்த காரியத்தை முடிக்க அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், போசன சுகமுண்டு.

**தனுசு** பால்ய நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், காரிய அனுகூலமுண்டு, பொருளாதார நிலை மேம்படும், போசன சுகமுண்டு, குடும்ப மகிழ்ச்சி கூடும்.

**மகரம்** உடல் ஆரோக்கியம் சீராகும், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவ முன்வரலாம்.

**கும்பம்** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், இறைவழிபாட்டில் ஈடுபாடு கூடும், சொந்தங்களால் ஆதாயமுண்டு, தொழில் போட்டிகளை முறியடித்து வெற்றி காண்பீர்கள்.

**மீனம்** புதிய நபர்களின் சந்திப்பால் நன்மையுண்டு, தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும், சுப செலவுகள் அதிகமாகும், உடல்நலனில் கவனம் தேவை, ரோக பயமுண்டு.

வளவன்

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 20 | 50 | 20 |
| உருளைக்கிழங்கு | 90 | 60 | 90 |
| பச்சைமிளகாய் | 70 | 80 | 80 |
| தக்காளி | 20 | 40 | 50 |
| மரவள்ளிக் கிழங்கு | 40 | 30 | 40 |
| கோவா | 30 | 60 | 40 |
| கரட் | 90 | 80 | 100 |
| பூசணி | 30 | 30 | 40 |
| புடோல் | 50 | 40 | 50 |
| வாழைக்காய் | 30 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 30-90 | 80 | 80 |
| பெரிய வெங்காயம் | 50-65 | 60 | 70 |
| பாகற்காய் | 90 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 30 | 80 |
| கருணைக் கிழங்கு | 20 | 50 | 50 |
| பயற்றங்காய் | 110 | 130 | 70 |
| லீக்ஸ் | 50 | 80 | 80 |
| பீற்றூட் | 20 | 30 | 40 |
| கறிமிளகாய் | 60 | 80 | 80 |
| முருங்கைக்காய் | 300 | 120 | 400 |
| போஞ்சி | 50 | 80 | 100 |
| கத்தரிதம்புள்ள | 15 | 40 | -- |
| கீரை - 1 பிடி | 5-15 | 10 | 25 |
| தேசிக்காய் | 90 | 80 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50 | 40-45 |
| இராசவள்ளி | 70 | 80 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருட்டு முயற்சி பலனளிக்கவில்லை

(மானிப்பாய்)

உடுவில் அம்பலவாணர் வீதியிலுள்ள வீடொன்றில் களவெடுப்பதற்காகச் சென்ற திருடர்கள், திருட்டு முயற்சி பலனளிக்காமையினால் வீட்டிலிருந்த நபரை வாளால் வெட்டி விட்டுச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 7.15 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,


உடுவில் அம்பலவாணர் வீதியிலுள்ள வீடொன்றில் களவெடுப்பதற்காக திருடர்கள் சென்றுள்ளனர்.

அவ்வேளை, வீட்டிலிருந்த ஒருவர் திருடர்களைக் கண்டதும் கூக்குரல் எழுப்பி அயலவரை அழைத்துள்ளார்.

இதனால் திருட்டு முயற்சி தோற்கடிக்கப்பட்டதையடுத்து திருடர்கள் அவரை வாளால் வெட்டி விட்டுச் சென்றுள்ளனர்.

வாள்வெட்டுக்கு இலக்காகிய சாமிநாதன் தபேந்திரன் (வயது 50 என்பவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவத்தை தொடர்ந்து ஸ்தலத்திற்கு வந்த சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (2-9-23)







## அலங்கார உற்சவம்

(தும்பளை)

வடமராட்சி கற்கோவளம் பருத்தித்துறை பரந்தாளடி ஐயனார் கோவில் வருடாந்த அலங்கார உற்சவம் நேற்று கொடியேற்றதுடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும்.(2-19)

# வீதியோரங்களில் அகழப்பட்டு கொட்டப்படும் மண்குவியல்களால் பயணிப்பதில் சிரமம்

(மானிப்பாய்)

மானிப்பாய் வீதியில் கொட்டப்பட்டுள்ள மண்குவியலினால் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக பயணிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

வீதி அபிவிருத்தி அதிகாரசபையினரால் யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதி அகலப்படுத்தப்பட்டு வருகின்றது.

இதில் சுடுகாட்டாலடிச் சந்தியிலிருந்து பள்ளங்காட்டு சந்தி வரையான வீதிப் பகுதி முதற்கட்ட புனரமைப்பிற்குட்படுத்தப்பட்டுள்ளது.

கனரக வாகனங்களின் உதவியுடன் வீதியோரங்களில் மண் அகழப்பட்டு வீதியின் நடுப்பகுதியில் கொட்டப்படுகின்றது. இவ்வாறாக கொட்டப்படும் மண் குவியல்களாக வீதியின் கரையோரத்திலும் வீதியிலும் அப்படியே விடப்படுகின்றது.

இந்நிலையில் வீதியினால் வாகனங்கள் செல்லும் போது தூசி எழுவதனால் எதிரில் வரும் வாகனங்களை இனமறிய முடியாதநிலை ஏற்படுவதுடன் விபத்துக்கள் நிகழவும் வாய்ப்புள்ளது.

அத்துடன் வீதியில் மண்ணுடன் சிறு கற்களும் காணப்படுவதால் வாகனங்களின் சமநிலை குலைந்து சில விபத்துக்கள் ஏற்பட்டுள்ளன.

அத்துடன் மண் குவியல்கள் வீதிக்கரையோரமாக காணப்படுவதால் போக்குவரத்து சிக்கல்கள் ஏற்பட்டுள்ளநிலையில் , இவ்வீதியில் பயணிக்கும் வாகனங்கள் தமது பாதுகாப்பு கருதி முன்புற விளக்கினை ஒளிர விட்டபடி பயணிக்கின்றன.

அத்துடன் சுவாசப்பை சம்பந்தமான நோய்களும் ஏற்படலாம் என்றும் வீதிக்கருகில் உள்ள வீடுகளில் இருக்க முடியாதளவிற்கு தூசு வெளிப்படுவதாகவும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே இது சம்பந்தமாக உரியவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டு மென பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதற்கு முன்பாக ஆனைக்கோட்டை குளப்பிட்டி வீதியிலும் இதே மாதிரியான சம்பவங்கள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.(2-9-23)




தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் கிட்டினன் சிவநேசனின் ஆறாவது ஆண்டு நினைவு தினம் நேற்றுமுன்தினம் திக்கம் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் அரசியல் பிரமுகர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் உரையாற்றுவதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- எஸ்.செல்வதீபன்)

# பாரவூர்தி உரிமையாளர்கள் போராட்டம் நடத்த ஏற்பாடு

(மானிப்பாய்)

யாழ்.மாவட்ட பாரவூர்தி சங்கத்திலுள்ள பாரவூர்தி உரிமையாளர்கள் தாங்கள் தொழிலில்லாமல் இருக்கும் உண்மை நிலைமையை வெளிக்கொண்டு வரும் வகையில் கவனயீர்ப்பு ஊர்வலம் ஒன்றை நடத்துவதற்கு பாரவூர்திச் சங்க உரிமையாளர்கள் ஏகமனதாகத் தீர்மானம் எடுத்துள்ளதாக பாரவூர்தி சங்கத்தின் தலைவர் எஸ். ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

கோண்டாவில் கிழக்கு புகையிரத நிலைய வீதியில் அமைந்துள்ள யாழ்.மாவட்ட பாரவூர்தி சங்கத்தின் அலுவலகத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற பாரவூர்தி உரிமையாளர்களுக்கிடையிலான கூட்டத்திலேயே குறித்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்திலுள்ள பாரவூர்திகளுக்கு தொழிலில்லாமல் இருப்பதால் பாரவூர்தி உரிமையாளர்களின் குடும்பங்கள் மிகவும் கஷ்டமான நிலையினை அனுபவிப்பதாக உரிமையாளரகள் கவலை வெளியிட்டனர்.

அத்துடன், தங்களின் பாரவூர்திகளுக்குத் தொழில் தருவதற்கு அரசாங்க அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் எவ்விதமான நடவடிக்கைகளும் எடுக்காமல் காலம் தாழ்த்தி வருவதாகவும் அவர்கள் இக்கூட்டத்தில் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இதன்படி, மேற்படி தொழிலின்மையினை வெளிப்படுத்தும் முகமாக எதிர்காலத்தில் கவனயீர்ப்பு ஊர்வலமொன்றை நடத்துவதற்கு பாரவூர்தி உரிமையாளர்கள் அனைவரும் ஏகமனதாக தீர்மானித்துள்ளதாக தலைவர் தெரிவித்தார். (2-9-23)

# வீட்டின் பின்கதவு உடைக்கப்பட்டு பெறுமதியான பொருட்கள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

இலங்கை மின்சார சபையின் சாரதியாக பணிபுரியும் ஊழியர் ஒருவரின் வீட்டில் திருட்டு இடம்பெற்றுள்ளது.

இத்திருட்டுச் சம்பவம் கடந்த 4 ஆம் திகதி வீரகத்திபிள்ளையார் கோவிலடி இமையாணன் உடுப்பிட்டியினைச் சேர்ந்த தங்கவடிவேல் உதயகுமார் என்பவரது வீட்டிலேயே திருட்டு இடம்பெற்றுள்ளது.

இத்திருட்டில் டிஜிற்றல் கமரா, கிறைன்டர் உட்பட பல பெறுமதிமிக்க மின்சாதன பொருட்கள் களவு போயுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 3 ஆம் திகதி மின்சார சபையில் பணிபுரிந்து விட்டு மறுநாள் இரவு தனது வீட்டிற்கு சென்ற போது வீட்டின் பின்கதவு உடைக்கப்பட்டு திருட்டு இடம்பெற்றுள்ளமை தனக்கு தெரிய வந்ததாக வீட்டு உரிமையாளர் தெரிவித்தார்.

இச் சம்பவம் தொடர்பில் வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (2-4)

# வருத்தப்படாத வாலிபர் சங்க கட்டடத்தில் ஆயுர்வேத வைத்தியசாலை ஆரம்பிப்பு

வலி.வடக்கு பிரதேச சபையினரால் இளவாலைப் பிரதேச மக்களின் வேண்டுகோளிற்கேற்ப ஆயுர்வேத வைத்தியசாலை அமைத்துக் கொடுக்ககப்பட்டுள்ளது.

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினரால் ஆயுர்வேத வைத்தியசாலையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி அப்பகுதியிலுள்ள மக்களின் கையொப்பங்கள் பெறப்பட்ட கடிதமொன்று வலி.வடக்கு பிரதேச சபையினருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இதன்பிரகாரம் பிரதேச சபையினரால் நேற்று முன்தினம் குறித்த வாலிபர் சங்கத்தின் கட்டடத்தில் [illegible] இளவாலை சித்திரமேளி பகுதியில் ஆயுர்வேத வைத்தியசாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தற்காலிகமாக சங்கத்தினரின் கட்டடத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இவ் வைத்தியசாலைக்கான நிரந்தர கட்டடம் வெகுவிரைவில் அமைக்கப்படுமெனவும் தற்போது வைத்திய சேவைகள் இக்கட்டடத்தில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய கிழமைகளில் நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வில் வலி.வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சுகிர்தன், பிரதேச சபை உறுப்பினர் [illegible] உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (2-9-23)

## குடும்ப பங்கீட்டு அட்டையுடன் சமுகம் தரவும்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்து வலிகாமம் கிழக்கு- கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் தற்காலிகமாக வசிக்கும் பொது மக்களை நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு தாம் தற்போது வசிக்கும் கிராம அலுவலர் பணிமனைக்கு குடும்ப பங்கீட்டு அட்டையுடன் சமுகமளிக்குமாறு கோப்பாய் பிரதேச செயலாளர் கோரிக்கை விடுத்துள்ளார். (2-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதவுரிமை ஆணைக்குழு ஜெனீவா பயணம்

பொதுநலவாய நாடுகளின் அழைப்பையேற்று இலங்கை மனித வுரிமை ஆணைக்குழுவினர் இன்று ஞாயிற்றுக்கிழமை ஜெனீவா பயணமாகவுள்ளனர்.

மனித உரிமை ஆணைக்குழு உறுப்பினர்களுக்கான பயிற்சிப் பட்டறையொன்று இன்று முதல் எதிர்வரும் 14ஆம் திகதி வரை ஜெனீவாவில் நடைபெறவுள்ளது.

பொதுநலவாய நாடுகளிலிருந்து இப்பட்டறைக்கு பங்கு பற்றுநர்கள் வருகை தரவுள்ளனர்.

இலங்கையிலிருந்து செல்லும் குழுவனர் ஜெனீவாவில் தற்போது நடை பெற்றுக் கொண்டிருக்கும் மனித உரிமைகள் பேரவை மாநாட்டில் நாளை மறுதினம் செவ்வாய்க்கி ழமை வரை கலந்து கொள வார்கள.

மனிதவுரிமை ஆணைக்குழு தவிசாளர் பிரியந்த பெரேரா தலை மையிலான குழுவில் 10 பிரதிநி திகள் இடம்பெறுகின்றனர்.

வடக்கு மாகாணத்திலிருந்து ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட இணைப்பாளர் த.கனகராஜஸ பொது நலவாய நாடுகளின் அழைப்பை யேற்று இலங்கை மனிதவுரிமை ஆணைக்குழுவினர் நாளை மறுதினம் 9ஆம் திகதி. ஞாயிற்றுக்கிழமை ஜெனீவா பயணமாகவுள்ளது.

மனிதவுரிமை ஆணைக்குழு உறுப்பினர்களுக்கான பயிற்சிப் பட்டறையொன்று 9ஆம் திகதி முதல் 14ஆம் திகதி வரை ஜெனீவாவில் நடைபெறவுள்ளது.

பொதுநலவாய நாடுகளிலிருந்து இப்பட்டறைக்கு பங்கு பற்றுநர்கள் வருகை தரவுள்ளனர்.

இலங்கையிலிருந்து செல்லும் குழுவினர் ஜெனீவாவில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் மனிதவுரிமைகள் பேரவை மாநாட்டில் 11ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கலந்து கொள்வார்கள்.

மனித உரிமை ஆணைக்குழு தவிசாளர் பிரியந்த பெரேரா தலை மையிலான குழுவில் 10 பிரதிநிதிகள் இடம்பெறுகின்றனர்.

வடக்கு மாகாணத்திலிருந்து ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட இணைப்பாளர் த.கனகராஜ°ம், கிழக்கு மாகாணத்திலிருந்து கல் முனை பிராந்திய இணைப்பாளர் இஸ்ஸதீன் லத்தீப்பும் கலந்து கொள்கின்றனர்.

ஏனைய எண் மரும் தலைமையகம் சார்பில் கலந்து கொள்ளும் அதிகாரிகளாவர். 'ம், கிழக்கு

மாகாணத்திலிருந்து கல் முனை பிராந்திய இணைப்பாளர் இஸ்ஸதீன் லத்தீப்பும் கலந்து கொள்கின்றனர். ஏனைய எண்மரும் தலைமையகம் சார்பில் கலந்து கொள்ளும் அதிகாரிகளாவர். (2)


## உடனடியான வேலைவாய்ப்பு

நீங்கள் 18-50 வயதுடையவரா? (ஆண்-பெண்) சம்பளம் 18000/=, 25000/= , 32000/= உணவு+ தங்குமிடம் குறைந்த விலைகளுடன் உடனடியான வேலைவாய்ப்புக்கள். கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் ஜேம்/ கோடியல்/ நூடில்ஸ்/ தண்ணீர் போத்தல் /PVC/ கோழி இறைச்சி/ தேயிலை/ காமென்ட்/ பெயின்ட் மற்றும் பல தொழிற்சாலைகளில் உற்பத்தி/ லேபல்/ தரம்பிரித்தல்/ களஞ்சிய பிரிவுக்கும் ஆட்கள் தேவை. (நண்பர்கள், குழுக்கள் ஒரே தொழிற்சாலைகளில்) வருகை அன்றே வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்படுவீர்கள்.

உடன் தொடர்பு (விசேடம் வடக்கு/ கிழக்கு தமிழ்/ முஸ்லிம் மக்களுக்கு)

தொடர்பு: 0778430179 (சி-6702)

## நிரந்தர தொழில்

தனியார் கப்பல் துறைமுகம்/விமான நிலையத்தில் தொழில் வாய்ப்புக்கள் கப்பல் துறைமுகத்தில் கப்பல் புனர்நிர்மாணத் துறையில் சாதாரண ஊழியர்கள்/ வெல்டர் தச்சு/ மற்றும் விமான நிலையத்தில் சுத்திகரிப்பாளர்/ கேட்டரீர்ஸ் போன்ற பிரிவுக்கு 18-45 ஆண்- பெண் தேவை. உணவு+ தங்குமிடம்+ சகாய விலைகளில் சம்பளம் 17000/- 38000/- வருகை அன்றே தொழில் வாய்ப்பு

0775561883 (சி-6700)

## வலம்புரியின் விளம்பரத் தொடர்புகளுக்கு...

0213210815,0215671532

valampurii@yahoo.com



## யாழ் நகரில் ஆடைகளில் அச்சுக்கலை பயிற்சி
## FABRIC PRINTING TRAINING
## 2 நாட்கள் மட்டுமே நடைபெறுகின்றது

இடம்.: ஜெரோம் மண்டபம் Jerom Hall

4ஆம் குறுக்குத்தெரு , OLR ஆலய வளாகம், யாழ்ப்பாணம்.

காலம்: மார்ச் மாதம் 15, 16 (சனி, ஞாயிறு) காலை 10மணி முதல் 4 மணி வரை இந்தியாவின் புகழ் பெற்ற அர்ச்சனா அக்கடமியின் ஸ்தாபகரும், ஆடைகளில் அச்சுக்கலை நிபுணரும், விஜய் டிவி மற்றும் பொதிகை டிவி புகழ் திரு.ஆர். பரதராஜா அவர்களின் பயிற்சிப் பட்டறையில் நீங்களும் கற்றுக்கொள்ள அரிய வாய்ப்பு .

சாறிகள், பட்டுசாறிகள், கைத்தறிசாறிகள் மற்றும் சுடிதார், ரிசேர்ட், பெட்சீட் முதல் அனைத்துவகை துணிகளிலும் நாம் விரும்பிய டிசைன்களை மிக இலகுமுறையில் வீட்டிலிருந்தவாறே குறைந்த முதலீட்டில் 28 முறைகளில் இயந்திரம் இல்லாமல் பிரிண்டிங் செய்யும் முறைகளை 25 வருட துறைசார் அனுபவமுள்ள திரு.ஆர். பரதராஜா தலைமையில் உங்களுக்கு செய்முறைப்பயிற்சியும், சுய பயிற்சியும் அளிக்கப்படுகின்றது.

பயிற்சி நெறி முடிவில் இந்திய அர்ச்சனா அக்கடமியின் சான்றிதழ் வழங்கப்படும்.

உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

தொ.இல. 0778904131 , 0777283192, 0779382868

(பயிற்சியின்போது மாணவர்கள் மூலப்பொருட்கள் கொண்டுவரத்தேவையில்லை)



(5690)

## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 1<br>கி.பா: 81 செவ் 1 இல்<br>தகைமை/தொழில்: BA, MA / அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>தொ.இ: B/1129 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 2<br>கி.பா: 68<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/1639 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 4<br>கி.பா: 7.75 செவ் 12 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: O/L / வியாபாரம்<br>தொ.இ: B/1131 | பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 11.25<br>தகைமை/தொழில்: A/L / சுகாதார ஊழியர்<br>தொ.இ: G/1640 |
| பிறப்பு: 1979<br>நட்சத்திரம்: பரணி 2<br>கி.பா: 84 சூரி செவ் 8 ல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L / சாரதி<br>தொ.இ: B/1134 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 4<br>கி.பா: 43 செவ் 7 ல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L, NCAT<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: G/1645 |
| பிறப்பு: 1982 கிறிஸ்தவம்<br>நட்சத்திரம்: ரேவதி 3<br>கி.பா: 10.75<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L / கடை (UK – Student Visa)<br>தொ.இ: B/1135 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 3<br>கி.பா: 26.25<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BA / அரச பட்டதாரி உத்தியோகம்<br>தொ.இ: G/1646 |

## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு:- 021 720 1005

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

1717 FOLLOW US




ரூ.100 இற்கு ரீலோட் செய்து 2 IDD நிமிடங்களை 50 சதம் வீதம்

விஷேட அழைப்புமுறை தேவைப்பட மாட்டாது.

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் 433

Sri Lanka Telecom Mobitel

(சி-6703)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தமிழின அழிப்பை நிறுத்தக் கூடிய தீர்மானமே ஐ.நா.அமர்வில் வரவேண்டும்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

ஐ.நா. அமர்வில் அமெரிக்கா தலைமையிலான மேற்கு நாடுகளினால் முன்வைக்கப்படவுள்ள இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான இறுதித் தீர்மானம் தமிழின அழிப்பு மற்றும் மனிதவுரிமை மனிதாபிமான சட்ட மீறல்கள் என்பனவற்றை நிரந்தரமாக நிறுத் தப்படக் கூடியவாறானதாக இருக்க வேண்டுமென தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள அக்கட்சியின் அலுவலகத்தில் நேற்று பிற்பகல் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அக்கட்சியின் தலைவரான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் ஆகியோரினால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த 2012, 2013 ஆம் ஆண்டுகளில் ஜெனீவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் தமிழ் மக்களின் வாழ்வியலில் எந்தவித முன்னேற்றத்தையும் ஏற்படுத்தாததோடு, தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு எத்தகைய முற்றுப் புள்ளியையும் ஏற்படுத்திவிடவில்லை. மாறாக கடந்த இரண்டு தீர்மானங்களும் ஜெனீவாவில் நிறைவேற்றப்பட்ட போதும் இலங்கை அரசாங்கமானது தமிழ் மக்களுக்கு எதிரான தனது இன அழிப்பு நிகழ்ச்சி நிரலை திட்டமிட்டு தீவிரப்படுத்தியே வருகின்றது.

நிலைமைகள் இவ்விதமிருக்க இம் முறையும் வெளிவந்துள்ள உத்தேச தீர்மான வரைபானது வடமாகாண சபைக்கு 13 ஆம் திருத்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் அதிகாரங்களை முழுமையாக வழங்க வேண்டுமென்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் மனிதஉரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்ட மீறல்கள் தொடர்பிலான விசாரணையை இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளவேண்டுமெனவும் கோருகின்றது.

13 ஆம் திருத்தச் சட்டத்தின் கீழான வடமாகாண சபை என்பது தமிழ் மக்களது இனப்பிரச்சினைக்கு தீர்வாகாது என்பதாலும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் மிகப் பிரதானமாக தமிழ் தேசத்தின் இருப்பை இல்லாது ஒழிக்கும் சரத்துக்களும் காணப்படுவதனாலும் நல்லிணக்க ஆணைக் குழுவானது அரசாங்கமானது சர்வதேச சமூகத்தின் அழுத்தங்களில் இருந்து தம்மைக் காப்பாற்றுவதற்காக கண்துடைப்பிற்காக உருவாக்கப்பட்ட ஆணைக்குழு என்பதனாலும் உள்ளக விசாரணை என்பதும் குற்றம் சாட்டப்பட்ட நபர்களையே அவர்கள் செய்த குற்றங்களை விசாரிக்க கோரும் அடிப்படை நியாயமற்ற இயற்கை நீதிக் கோட்பாட்டிற்கு மாறான செயல் என்பதனாலும் நாம் ஏற்கனவே நிராகரித்திருந்தோம்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானமானது தமிழ் மக்களினுடைய அரசியல் பிரச்சினைக்கு நிரந்தர முற்றுப்புள்ளி வைக்கக்கூடிய வகையில் அவர்களது சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தல், இலங்கைத்தீவில்தமிழ் மக்களுக்கு எதிராக நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இனப் படுகொலைக்கு சர்வதேச பக்கச் சார்பற்ற விசாரணை ஒன்றை நடத்துதல், தொடர்ந்து கொண்டிருக்கின்ற கட்டமைப்பு சார் இன அழிப்பை தடுத்து நிறுத்துவதற்காக ஓர் இடைக்கால நிர்வாக்க கட்டமைப்பை ஐ.நா. சபையின் கண்காணிப்பின் கீழ் உருவாக்குதல் போன்ற தீர்மானங்களை உள்ளடக்க வேண்டும் என்ற கோரிக்கையினை நாம் விடுத்திருந்தோம்.

கடந்த 65 ஆண்டுகால இனப் பிரச்சினையினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட தமிழர்களது தரப்பிலிருந்து விடுக்கப்பட்ட தொடர்ச்சியான கோரிக்கைகள் சிறிதளவேனும் கருத்தில் எடுக்கப்படாமல் தமிழ் மக்களின் அபிலாசைகளையோ நலன்களையோ எந்தவிதத்திலும் பிரதிபலிக்காத ஓர் தீர்மான வரைபானது மனிதஉரிமைகள் பேரவையில் முன்வைக்கப்பட்டிருப்பதானது எம்மை ஆழ்ந்த வேதனை அடையச் செய்துள்ளதுடன் கடும் ஏமாற்றத் தினையும் தந்துள்ளது.

எனவே அமெரிக்கா தலைமையிலான மேற்கு நாடுகளினால் ஐ.நா. சபையில் முன்வைக்கப்படவுள்ள இறுதித் தீர்மானமானது தமிழ் மக்களின் அபிலாசைகளை பிரதிபலிக்கக் கூடியவாறும் அவர்களின் நலன்களை பேணக்கூடியவாறும் இலங்கை அரசாங்கத்தினால் தமிழ் தேசத்தின் மீது தொடர்ந்தும் புரியப்படுகின்ற இனவழிப்பு மனிதஉரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்ட மீறல்கள் என்பவற்றை நிரந்தரமாக நிறுத்தப்படக் கூடியவாறானதுமான ஓர் தீர்மானமாக அமைய வேண்டுமென்று நாம் கோருகின்றோம்.

மேலும் இத்தகைய கோரிக்கைகள் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைத் தீர்மானத்தில் உள்ளடக் கப்படுவதற்காக தொடர்ந்தும் தாயகத்தில் வாழும் உறவுகளும் தமிழக உறவுகளும் புலம்பெயர் தமிழ் உறவுகளும் போராட வேண்டு மென்று அழைப்பு விடுக்கின்றோம் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

# இராணுவ மயப்படுத்தலால் பாதுகாப்பின்றி அஞ்சுகின்றோம்

## குடும்பத் தலைமைப் பெண்கள் ஒன்றியத்தால் முதலமைச்சருக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

எமது பிரதேசங்கள் இராணுவ மயப்படுத்தப்பட்டதனாலும் இராணுவப் படைகளின் அதிகரித்த நடமாட்டத்தினாலும் பாதுகாப்பு குறித்து அஞ்சுகின்றோம் என்பதை வெளிப்படுத்திவடக்கில்வாழும்பெண்களைத் தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்கள் சார்பில் அமரா குடும்பத் தலைமைப் பெண்கள் ஒன்றியத்தினால் சர்வதேச மகளிர் தினமான நேற்று வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனிடம் கையளிக்கப்பட்ட மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் சர்வதேச மகளிர் தினம் நல்லூர் ஸ்ரீதுர்க்காதேவி மணிமண்டபத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட முதலமைச்சரிடம் கையளிக்கப்பட்ட மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

**பாதுகாப்பு**

எமது பிரதேசங்கள் இராணுவ மயப்படுத்தப்பட்டதனாலும் இங்கு இராணுவப் படைகளின் அதிகரித்த நடமாட்டத்தினாலும் நாம் எமது பாதுகாப்பு குறித்து அஞ்சுகிறோம்.

பௌதீக ரீதியான பாதுகாப்பின்மையால் எமது சுதந்திர நடமாட்டம் தடைப்படுகின்றது. இதனால் கல்வி, தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதிலும் சுகாதார சேவைகள் போன்ற சேவைகளை நாடுவதிலும் நாம் தடைகளை எதிர்நோக்குகின்றோம்.

எமக்கு பாதுகாப்பான நிரந்தர வீட்டு வசதிகள் அளிக்கப்படாமையானது எமது பாதுகாப்பின்மையை இன்னும் அதிகரிக்கின்றது.

இராணுவத்தினரின் பிரசன்னமானது விசேடமாக பொதுவிடங்களில் பாலியல் வன்முறைகளுக்கும் பாலியல் தொந்தரவுகளுக்கும் சந்தர்ப்பங்களை உருவாக்குகின்றது.

எம்மைப் பாதுகாக்க வேண்டிய கடமையிலுள்ள பொலிஸாரும் எமக்கெதிரான வன்முறைகள் அதிகரிப்பதற்கான காரணிகளாக இருக்கின்றனர்.

**நாம் கோருவதாவது**

எமது பிரதேசங்களில் இராணுவத்தினரின் பிரசன்னம் குறைக்கப்பட வேண்டும், எமக்கான நிரந்தர வீட்டுத்திட்ட வசதிகள் ஏற்படுத்தித் தரப்பட வேண்டும், எம்மைப் பாதுகாக்கக் கடமைப்பட்டவர்கள், உதாரணமாக பொலிஸார், தமது கடமைகளைச் சரிவர மேற்கொள்ள வேண்டும்.

**வாழ்வாதாரமும் சமூகப் பாதுகாப் பும்**

கூலி வேலைகளுக்கு நாம் போனால் எங்களுக்கு சில சமயங்களில் நாளொன்றுக்கு 300 ரூபா வழங்கப்படும் அதே நேரத்தில் ஆண்களுக்கு நாளொன்றுக்கு 500 ரூபா தொடக்கம் ஆயிரம் ரூபா வரை வழங்கப்படுகின்றது.

புதிய தொழில்நுட்பம் உபயோகிக்கப்படும் பயிற்சிகள் எமக்குக் கிட்டாத காரணத்தினால் எங்கள் உழைக்கும் ஆற்றல் மட்டுப்படுத்தப் படுகின்றது.

பல அரசாங்க வாழ்வாதார முயற்சிகளுக்கான அல்லது சுயதொழில் வாய்ப்புக்களுக்கான உதவிகள் 50 வருட வயதெல்லை குறித்து தரப்படுகின்றன.

50 வயதுக்கு மேலான பெண்கள் அவற்றில் பயன் பெறமுடியாமலுள்ளனர்.

**சலுகைகளும் உதவித்திட்டங்களும்**

நிலவுரிமையானது எமது வாழ்வாதாரத்திற்கும் பொருளாதாரப் பாதுகாப்பிற்கும் வருமானம் ஈட்டுதலுக்கும் அடிப்படையானது.

காணி உறுதிகள் தொலைந்த காரணத்தினால் வீட்டுத்திட்டங்களைப் பெற்றுக் கொள்ளவோ மலசல கூடங்கள், நீர்வசதிகளைப் பெற்றுக் கொள்ளவோ இயலாதவர்களாக இருக்கின்றோம்.

அரசாங்கம் தற்போது வழங்கும் விவசாய மானிய உதவிகளெல்லாம் உதாரணமாக உரமானியம், நெல் விவசாயிகளுக்கே வழங்கப்படுகின்றது. நாங்கள் பெண்கள் அநேமாக மேட்டுநிலப் பயிர்ச் செய்கை செய்பவர்களாக இருப்பதனால் இச்சலுகைகள் எங்களுக்குக் கிட்டுவதில்லை.

**நாம் கோருவதாவது**

எமது காணி உறுதிகள் போன்ற தொலைந்து போன ஆவணங்களைப் பெறுவதற்குரிய குறித்த அரச உதவிகள் முன்னுரிமைப்படுத்தி வழங்கப்பட வேண்டும்.

சமுர்த்தி, வறுமை முத்திரை போன்ற திட்டங்கள் வழங்கப்படும் போது அத்தீர்மானங்கள் வெளிப்படைத்தன்மையுடனும் பயனாளிகளுக்கு அதனை எப்படி பெற்றுக் கொள்வது என்பது பற்றிய முழு விபரம் தெரியப்படுத்தும் விதத்திலும் செயற்படுத்தப்பட வேண்டும்.

தனித்து வாழும் பெண்களுக்கு வாழ்க்கைக்கான செலவுகளை ஈடு செய்யும் வகையிலான ஓய்வூதியத் திட்டம் வழங்கப்பட வேண்டும்.

**கல்வி**

மேலதிகமான கல்விச் செயற்பாட்டு உதவிகள் வழங்குவதற்கு இயலாமையாலும் யுத்தத்தினால் கல்வி பாதிக்கப்பட்டமையாலும் எமது பிள்ளைகள் பாடசாலைவிட்டு இடைவிலகுகின்றமை அதிகரித்துள்ளது. பாடசாலைக்குச் சென்றாலும் அவர்களது அடைவுகள் குறைவாகக் காணப்படுகின்றன.

எமது வறுமையும் பிள்ளைகள் பாடசாலை இடைவிலகுவதற்கான காரணமாகின்றது.

**சமூக கலாசார விடயங்கள்**

கணவனால் கைவிடப்பட்ட பெண்களின் எண்ணிக்கை எமது பிரதேசங்களில் அதிகரித்து வருகின்றது.

இவ்வாறு கைவிட்டுப் போகும் கணவர்களிடமிருந்து தாபரிப்புப் பணம் மற்றும் பிள்ளைகளுடைய பராமரிப்புக்கான பணம் ஆகியவற்றை எடுப்பதற்கு வெகு நீண்ட காலம் பெரும் சிரமப்பட வேண்டியுள்ளது.

**காணாமற்போனோர், தடுப்பில் வைக்கப்பட்டுள்ளோர்**

காணாமற்போன எமது மகன்மார், மகள்மார், சகோதரர்கள், கணவன் மார்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் ஆற்றல் எமக்கு இல்லை. தடுப்பில் இருப்பவர்களுக்குத் தேவையான சட்ட ஆலோசனை பெறுவதற்கோ அவர்களின் வழக்கைத் தொடரவோ எமக்கு வசதிகள் இல்லை.

**நாம் கோருவதாவது**

எமது குடும்பத்தைச் சேர்ந்த காணாமற் போனோரைப் பற்றிய தகவல்களை அரசு எமக்குத் தர வேண்டும். தடுப்புக் காவலில் இருப்போர் மீது துரித விசாரணைகளை நடத்தி அவர்களை விடுதலை செய்ய வேண்டும்.

காணாமற் போனோர் குறித்து அவர் காணாமற்போனதன் சாட்சியமாக சான்றிதழ் வழங்கப்பட வேண்டும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (2-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் பெண்களை இராணுவத்தில் இணைய அழைப்பவர்கள் ஆண்களை அழைக்காதது ஏன்?

## வடக்கு மாகாணசபை முதலமைச்சர் கேள்வி



போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த இளம் தமிழ் பெண்களை இராணுவத்துக்கு இணைய அழைத்துள்ளவர்கள் ஏன் ஆண்களை அழைக்கவில்லையென கேள்வி எழுப்பியுள்ள வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் வடக்கில் இராணுவத்தினர் சம்பந்தப்பட்ட பாலியல் வன்முறைகள், பாலியல் தொந்தரவுகள் பொலிஸாரினால் அசண்டையீனமாகவே கையாளப்பட்டுவருவதாகவும் குற்றம் சாட்டியுள்ளார்.

யாழ்ப்பாணம் விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் சர்வதேச மகளிர் தினம் நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் நேற்றுக் காலை நடத்தப்பட்டது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

சில நாடுகளில் இந்நாள் விழாவாகக் கொண்டாடப்படுகின்றது. வடக்கு மாகாணத்திலும் இந்நாளை விழாவாகக் கொண்டாட முடியும். ஆனால் அண்மையில் எமக்கு ஏற்பட்டுள்ள அனர்த்தங்களைக் கருத்தில் எடுத்து இந்தத் தினத்தை வெறும் விழாவாகக் கருதாமல் எமக்குப் பயனுள்ளதாக மாற்றி அமைப்பது தலையாய கடமையாக மாறியுள்ளது.

எமது வடமாகாணமானது கிழக்கு மாகாணத்துடன் சேர்ந்து போரில் இருந்து அண்மையில் விடுபட்டு வந்துள்ளது. போரினால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் பெண்களே. எமது அபிவிருத்தி நடவடிக்கைகள் அடிப்படை உட்கட்டுமானங்களைப் பற்றியே இதுகாறும் பொதுவாகச் சிந்தித்து வந்துள்ளது. போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் மேம்பாட்டை வலியுறுத்தும் திட்டங்கள் குறைவாகவே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அந்நிலையைக் கருத்தில் எடுத்து எமது தமிழ் பேசும் பெண்களின் வருங்காலம் பற்றி ஆராய வேண்டியது எமது கடப்பாடாக இன்று மாறியுள்ளது.

யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு போன்ற இடங்களில் போரினால் பாதிக்கப்பட்ட குடும்பத் தலைவிமார்களின் வாழ்க்கை பற்றி ஆராய்ந்தறிவதில் கரிசனை காட்டி வந்துள்ளீர்கள்.

இப்பேர்ப்பட்ட பெண்கள் போரினால் மனோநிலையள்விலும் சமூக நிலையளவிலும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது தெரியவந்துள்ளது. எனவே அப்பெண்களுக்கான வாழ்வாதாரச் சூழலை ஏற்படுத்திக்கொடுக்கவேண்டிய அவசியம் அலசி ஆராயப்பட்டுள்ளது.

தற்போதிருக்கும் கடன் வசதி நிலைகளின் போதாமை குறித்து ஆராய்ந்துள்ளீர்கள். மேலும் பல விடயங்கள் உங்கள் ஆராய்ச்சிகளின்வாயிலாக அறிய வந்துள்ளோம். மேலும் செய்யப்படவேண்டிய விடயங்கள் பற்றியும் எமது கடப்பாடுகள் பற்றியும்ஆராய்ந்துள்ளீர்கள். இவை யாவையும் வடமாகாண நிர்வாகத்தை வழிநடத்திச் செல்ல உதவிபுரிவன என்பதில்உங்களுக்குச் சந்தேகம் இருக்கத் தேவையில்லை.

பெண்கள் பலரின் தேர்தல் கால பெரும் பங்காற்றலே எமது வடமாகாண சபை வெற்றி என்பதில் எமக்கு ஐயமேதுமில்லை. போரினால் பாதிக்கப்பட்ட பெண்களின் வாழ்க்கையை மேம்படுத்துவது எமது தலையாய கடன் என்பதை நாங்கள் உணர்ந்தே வைத்துள்ளோம்.

பெண்கள் தமது வாழ்க்கையை, தம் குடும்ப வாழ்க்கையை இனியாவது செவ்வனே கொண்டு நடத்த அவர்களுக்காவன செய்தல் வேண்டும். அதாவது முதலில் அவர்களின் தற்போதைய நிலையை அவர்களுக்கு உணர்த்த வேண்டும்.

பின்னர் அவர்களின் தன்னம்பிக்கையை ஏற்படுத்தவும் வளர்க்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். எந்தவாறான வாழ்வாதாரப் பணிகளில் அவர்கள் ஈடுபடமுடியும். அவை எவை என்பன பற்றிச் சிந்திக்க வேண்டியுள்ளது. அவற்றுக்கான வளங்களை ஏற்படுத்தி அவற்றை அவர்கள் பெற வழிசமைக்க வேண்டும். இவற்றில் அவர்களுக்கு எதிரான பக்கச்சார்பு பாராட்டப்படாது பார்த்துக்கொள்ள வேண்டும்.

பெண்கள் தமக்குத் தாமே ஆற்றலளிக்கப் பழகிக்கொள்ள வேண்டும். அவற்றை மனதில் வைத்தே கடந்த இடர் காலங்களில் சுழற்சி முறைக்கடன், சுயதொழில் உற்பத்தி போன்றவற்றை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் நடைமுறைப்படுத்தி வெற்றியும் கண்டுள்ளன. சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச் சங்கங்களில் பெண்களை மட்டுமே வைத்து இயங்கி அங்கும் வெற்றியை நாம் கண்டுள்ளதாக அறிகின்றேன்.

அதேநேரத்தில் எங்கள் பெண்களின் சேமிப்புப் பழக்கத்தைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் வகையில் தென்னிலங்கையைச் சேர்ந்த கூட்டுறவுச் சங்கங்கள் வடமாகாணத்திலும் உதவிக்கரம் நீட்டுவதுபோல் உள்நுழைந்து வெளிநாட்டு நிதியுதவிகளைப் பெற்று அதேநேரம் அந்த நிதி வாய்ப்புக்களை தம் வசப்படுத்த எத்தனிப்பதாகவும் எமக்கு அறியத் தரப்பட்டுள்ளது.

இதுபற்றி எமது பெண்கள் விழிப்பாக இருக்கவேண்டும். அதேநேரம் வடமாகாண பெண்கள் அனைவரும் ஒன்றிணைந்து தமக்கென ஒரு கூட்டுறவுச் சங்கத்தை அவர்களே உருவாக்கிக் கொள்ளவேண்டிய காலம் இப்பொழுது கனிந்துள்ளது.



பெண்களால் நிர்வகிக்கப்படும் பல குடும்பங்களில் அவர்கள் தமது வருமானங்கள் அனைத்தையும் தமது குழந்தைகளின் நலனுக்காகவே பாவிக்க வேண்டியுள்ளது. அதனால்தான் அவர்களின் வருமானங்களைக் கூட்ட நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. அவர்களின் வறுமை நிலையைப் போக்க ஆவன செய்யவேண்டிள்ளது.

அதேநேரம் எமது பெண் குழந்தைகளின் கல்வி தடைப்படாமல் நாங்கள் பார்த்துக் கொள்ள வேண்டியுள்ளது. பெண் குழந்தைகள் பொருளாதார காரணங்களின் நிமிர்த்தம் தமது படிப்பை துண்டித்துப் பாடசாலைகளில் இருந்து வெளியேறுவதை நாங்கள் தடுக்க வேண்டும்.

எமது கல்வி அமைச்சர் அன்றொரு நாள் கூறினார் வன்னியில் சில இடங்களில் பாடசாலைக் கட்டடங்கள் அரசாங்கத்தால் அண்மையில் புனருத்தாரணம் செய்யப்பட்டிருப்பினும் அப்பாடசாலைகளுக்கு வரும் மாணவ மாணவியரின் தொகை குறைந்துள்ளதாக கேட்டுப் பார்த்ததில் அன்றாடஞ் சாப்பாட்டுக்குத் தத்தளிக்கும் நிலையில் குழந்தைகளை எப்படிப் பாடசாலைக்கு அனுப்பமுடியும் என்று பெற்றோர்கள் கேட்டார்களாம்.

இந்நிலையை [illegible] நாங்கள் நடவடிக்கைகள் [illegible] வேண்டும்.

தலைமைத்துவத்தினுள் பெண்களுக்கு சம வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதால் சமுதாயத்தில் நன் மாற்றங்களை ஏற்படுத்தலாம். எனினும் யதார்த்தம் எதுவெனப் பார்த்தோமானால் வடமாகாணம் இராணுவமயப்படுத்தப்பட்டுள்ளதால் பெண்களின் பாதுகாப்பு கேள்விக்கிடமாகியுள்ளது.

இராணுவத்தை வெளியகற்ற வேண்டும் என்ற எமது கோரிக்கை ஒரு சில நன்மாற்றங்களைத் தற்பொழுது ஏற்படுத்தி வருவதாக நாம் காணக்கூடியதாக இருந்தாலும் எமது பெண்களின் பாதுகாப்பை உறுதிசெய்யும் அளவுக்கு இம் மாற்றங்கள் முன்னேறியுள்ளதாக நாம் கருத முடியாது இருக்கின்றது.

முக்கியமாக வன்னிப் பெருநிலத்தில் நிலைமை மாற்றமடையவில்லை என்றே கூறலாம். பெண்களுக்கு அங்கு பாதுகாப்பு இல்லாமையினால் அவர்களின் இயற்கையான சுதந்திர நடமாட்டம் தடைப்படுத்தப்பட்டுள்ளது. பல பெண்குழந்தைகள்கல்வி, தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ள இப் பாதுகாப்பின்மை தடையாக இருந்து வருகின்றது. மருத்துவ வசதிகளை நாடிச் செல்வது கூடத் தடைப்பட்டுள்ளது. இராணுவத்தினர் சம்பந்தப்பட்ட பாலியல் வன்முறைகள், பாலியல் தொந்தரவுகள் பொலிஸாரினால் அசட்டையுடனேயே கையாளப்படுகின்றன.

அண்மையில் இராணுவத்திற்குத் தமிழ்ப் பெண் யுவதிகளைச் சேர அழைத்துள்ளார்கள். ஏன் ஆண்களை அழைக்கவில்லை என்ற கேள்வி உடனேயே எழுகின்றது. அது மட்டுமல்ல இளம் பெண்களை வீடுவீடாகச் சென்று வலிந்து இராணுவத்தினர் அழைப்பதாக எமக்குச் செய்திகள் வந்துள்ளன. பயம், வறுமை, பாதுகாப்பற்ற தன்மை போன்ற பல காரணங்கள் எம் பெண்களை இராணுவத்தினுள் உள்ளீர்க்கப்படக் கூடும். ஆனால் மேலிடத்து ஆண்களை நிறைவேற்றுவதே இராணுவக் கீழ்மட்டச் சிப்பாய்களின் கடமை என்பதை இந்த யுவதிகள் தெரிந்திருக்கின்றார்களா என்பது எமக்குத் தெரியாதிருக்கின்றது.

சமூக, கலாசார ரீதியாகப் பெண்கள் போரின் பின்னர் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இளம் விதவைகள் பாடு, அதுவும் குழந்தைகளுடன் இருக்கையில் கணவன்மார்களை இழந்த பெண்களின் பாடு மிகவும் பரிதா[illegible] இருக்கின்றது.

[illegible] பெண் போராளிகளும் பல சமூகப் பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளார்கள் என்பது தெரிய வந்துள்ளது. எமது தமிழ்ச் சமூகமானது இவர்கள் யாவரையும் ஒதுக்கி வாழத்தலைப்படுவது எமது பாரம்பரியத்திற்கு ஒரு பெரும் இழுக்காகவே அமைகின்றது. எனவே எமது சமூகப் பார்வை மாற்றப்பட வேண்டும்.

எவ்வாறு காந்திஜி தாழ்த்தப்பட்ட மக்கள் என்பவர்கள் இறைவனின் குழந்தைகள் என்று அடையாளம் கண்டு அவர்களை ஹரிஜனங்கள் என்று அழைத்தாரோ அதேபோல் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு இடர்பட்டு ஒதுக்கப்பட்டுள்ள எங்கள் சகோதரிகள் அத்துடன் யுத்தத்தில் கலந்து அதன்பின் கைதாகி வெளிவந்துள்ள எமது சகோதரிகள் வீர மகளிர் என்று அடையாளப்படுத்தப்பட்டு எமது மக்களின் மரியாதைக்கும் மாண்புக்கும் உட்படுத்தப்பட வேண்டும்.

காணாமற் போன தமது மகன்மார்களை, சகோதரர்களை, கணவர்மார்களைத் தேடிக் கொண்டிருக்கும் பெண்களின் அவலங்கள் சொல்லில் வடிக்க முடியாதன.

காணாமற் போனதாகக் கூறப்படும் யாராவது ஒருவர் உயிருடன் இருக்கின்றார் என்பது எவரேனும் ஒருவருக்குத் தெரியவந்தால் அதுபற்றி உரியவர்களுக்குத் தெரியப்படுத்த வசதிகள் செய்து கொடுத்தால் என்ன என்றும் நான் சிந்திப்பதுண்டு. இதுபற்றி மக்கள் தான் சிந்தித்து எம்முடன் சேர்ந்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தடுப்புக் காவலில் சிறையில் உள்ள பலர் தமக்குப் போதிய சட்ட உதவி இல்லை என்று எனக்கு அறிவித்திருந்தார்கள். அது சம்பந்தமாக உதவி தரக்கூடிய சட்டத்தரணிகள் ஒன்று சேர்ந்து ஒரு சட்ட உதவிக்குழு ஒன்றை அமைக்க முன்வர வேண்டும். ஏதேனும் அரச சார்பற்ற நிறுவனங்களிடம் இருந்து இதற்கான நிதி உதவியினை நாம் பெற்றுக் கொள்ளலாம்.

வெறுமனே மாற்றங்களைக் குறைகூறி வாழ்வதில் பயனில்லை. சிந்தித்துச் செயலாற்ற எல்லோரும் முன்வர வேண்டும். பெண்களின் மேம்பாடு பெண்கள் கைகளில் மட்டும் உள்ளது என்று யாராவது நினைத்தால் அது மடமையாகும். நாம் யாவரும் அவர்கள் துயர் துடைக்க முன்வர வேண்டும்.

ஐ.நா. பாதுகாப்புச் சபைப் பிரேரணைகளின் அடிப்படையில் அவற்றை நடைமுறைப் படுத்தும் விதத்தில் மகளிர் விவகார அலகை, உருவாக்குவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளேன் என்பதை இத் தருணத்தில் கூறி வைக்கின்றேன்.

அடுத்த வருடம் மார்ச் மாதம் 8 ஆம் திகதி வரும்போது இவ்வாறான நற்செயல்களை பெண்கள் நல்வாழ்வு கருதிச் செய்தோம் என்று நாம் பெருமையுடன் பேசக் கூடியதாக நடவடிக்கைகளில் ஈடுபடுவோமாக என்று கூறி என்னை இன்றழைத்து இந்த மகளிர் தின நிகழ்ச்சியில் பங்குபற்ற இடமளித்த சகலருக்கும் முக்கியமாக சகோதரி சாந்தி சச்சிதானந்தனுக்கும் நன்றி கூறுகின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (2-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரை விமர்சனம்




நண்பனுக்காக விட்ட விளை யாட்டை நட்புக்காகத் தொட்டால்... அதுவே வல்லினம்!

நகுலன், திருச்சி கல்லூரியில் படிக்கும் கூடைப்பந்தாட்ட வீரர். ஒருமுறை மேட்ச் ஆடும்போது நகுலன் தூக்கிப்போடும் பந்தால், நண்பன் கிருஷ்ணா இறந்துவிடு கிறார். மனம் மாற சென்னைக்கு இடம் மாறுகிறார். சென்னைக் கல்லூரியில் நகுலனுக்கு அம்ஜத் நண்பனாகிறார். "கிரிக்கெட்டே கிரேட்' என்று நினைக்கும் கல் லூரி சேர்மனுக்கும் அம்ஜத்துக் கும் சண்டை நடக்கிறது. "மேட்ச்ல ஜெயிச்சுக் காட்டுங்கடா' என்று சேர்மன் சவால்விட, நண்பனுக் காக களம் இறங்குகிறார் நகுலன். சவாலில் நண்பர்கள் ஜெயித்தார் களா? என்பது மீதிக் கதை.

கூடைப்பந்து விளையாட்டை வைத்து தமிழில் வந்த முதல் படம் இதுவாகத்தான் இருக்கும். நட்பை மையப்படுத்தி, அதில் விளையாட் டைப் புகுத்தி விறுவிறுப்பாகப் படம் கொடுத்திருக்கிறார் இயக்கு நர் அறிவழகன். போட்டியைத் தடுத்து நிறுத்த விளையாட்டுத் துறை அமைச்சர் எடுக்கும் முடிவு கள் சின்னப்புள்ளத்தனம் என்றா லும், கிளைமாக்ஸில் இவர்களை எதிர்த்து ஆடும் அந்தப் புது அணி... டைரக்டர் டச்!

நாயகன் நகுலன் கவனிக்க வைக்கிறார். நட்பு, காதல், கோபம், வேகம், விவேகம் எல்லாம் இருக் கிற இளமையான ஹீரோ கரக்ட ருக்கு பக்கா ஃபிட். நண்பனுக்காக பேஸ்கட்பாலை ஷூட் செய்யும் போது வருகிற ஆக்ரோஷம்... அட்டகாசம். ஹீரோவைக் காதலிக் கிற சராசரி ஹீரோயினாக மிரு துளா. ஹீரோயினுக்கான எந்த அடையாளமோ, நடிப்போ இல்லா மல் காற்றைப் போல கடக்கிறார்.

நண்பன் கிருஷ்ணா, திருச்சி கோச் ஆதி, சென்னை கோச் அதுல் குல்கர்னி, கோடீஸ்வரர் ஜெயப்பிர காஷ், பிரின்சிபல் வை.ஜி.மகே ந்திரா ஆகியோர் கொஞ்ச நேரம் வந்தாலும் மனதில் நிற்கிறார்கள். ஒரு ஒன் டு ஒன் மேட்ச்சில் எதிரி யைக் கைக்கொடுத்துத் தூக்கிவிடும் நகுலனைப் பார்த்து, "அவன் ஒரு அண்ணா ஹஜாரேடா' என்று கலா ய்ப்பது, கெத்தாக கிரவுண்டில் இறங்கி, "நான் ஒரு அவுட்ஸ் டேண்டிங் பிளேயர்' என்று ரிட்டன் வருவது... என சீரியஸ் கதையில் ஆங்காங்கே சிரிக்கவைப்பது... நண்டு ஜெகன்தான்.

ராகிங், சரக்கு சலம்பல், சீனி யர்-ஜூனியர் சண்டை என வரும் முன்பாதி கல்லூரி காட்சிகள்... "பாத்தாச்சு பாத்தாச்சு' டைப். நகு லன் சீனியருடன் மேட்ச்சில் மோதும்போது, ஜெயிக்க வேண் டும் என பந்தை ஷூட் செய்யாமல், "சேர்ந்து ஜெயிக்கலாம் வா' என சொல்லும் இடம்.. ரசனை ஏரியா. கிரிக்கெட்டால் இந்தியாவில் எத்தனை விளையாட்டுகள் காணா மலே போய்விட்டன என்பதைச் சொல்ல நினைத்திருக்கி றார்கள். ஆனால், அதற்காக அவர்கள் எடுத்துவைக் கும் வாதமும் வார்த்தை களும் மெல்லினம் வகை யறா.

தமன் இசையில் பின் னணி இசை மட்டும் பாஸ் பண்ணுகி றது. பாஸ்க ரனின ் கமரா மைதா னங்களில் "லைவ் ரிலே' எஃபெக்ட் கொடு க்கிறது.

விளையாட்டுப் படங்களுக்கே என்று இருக்கும் ஃபார்மட்டில் ஒரு சினிமா. ஆனாலும் சுவா ரஸ்யம் கொடுத்த விதத்தில் பாக் கெட் பண்ண லாம்!





## 'நிமிர்ந்து நில்' நல்லா வந்திருக்கு!



"சிலையும் நீயே... சிற்பியும் நீயே! இதுதான் "நிமிர்ந்து நில்' படத்தின் ஒன்லைன். "அவன் தப்பு, இவன் தப்பு'னு சொல்லிச் சொல்லியே நாம பண்ற தப்பை நாம நியாயப்படுத் திக்கிறோம். "சிகரெட் பிடிக்கத் தடை செய்யப்பட்ட பகுதி'னு போட்டிருக்கும் இடத்தில் தான் ஒரு கும்பலே நின்னு சீரியஸா தம் போட்டுட்டு இருக்காங்க. சட்டத்தை யாரோ ஒரு சிலர் மட்டும் கடைப்பிடிச்சா, பத்தாது எல்லாருமே கடைப்பிடிக்கணும். அப்பத்தான் எல்லாம் சரியாகும். பிரார்த்தனை, பைபிள், சித்தாந்தம், வேதாந்தம்னு ஒழுக்கமா வளர்ந்தவன். அத னாலேயே அவனால் இந்தச் சமூகத்தோட சேர்ந்து வாழ முடியாது. எல்லாரும் எதையோ துரத்திட்டு ஓடுறதைப் பார்த்துட்டு, "ஏன் யாருமே சாந்தமா, சந்தோஷமா இல்லை?'னு ஏங்குவான். அப்படிப் பட்டவன், கோபத்துல வெடிச்சா எப்படி இருக்கும்? அதுதான் படம்! ரவிக்கு, இதில் ரெண்டு கரக்டர். ஒருத்தன் நல்லவன் இன்னொருத்தன் ரொம்ப நல் லவன். "தம்பி... இதான் உன் முதல் படம்னு நினைச்சு, மொத்த எனர்ஜியையும் போடு'னு சொன்னேன். என்ன சொன்னாலும் மறுபேச்சு பேசாம நடிச்சுக்கொடுக்கிறான். ஒரு காட்சிக்காக சாக்கடையில் விழச் சொன்னேன். சட்டுனு விழுந்தான்.

## தற்கொலைக்கு முயன்ற கன்னட நடிகைக்கு தீவிர சிகிச்சை



தற்கொலைக்கு முயன்ற கன்னட நடிகை விந்தியா தொடர்ந்து மயக்க நிலையில் இருக் கிறார். அவருக்கு டாக்டர்கள் தீவிர சிகிச்சை அளிக்கிறார்கள். விந்தியா பல கன்னட படங்க ளில் நடித்துள்ளார். இரு தினங்களுக்கு முன் மஞ்சுநாத் என்ற இளைஞருடன் சேர்ந்து சம்லாவுக்கு சுற்றுலா சென்று வந்தார். அங்கு இருவருக்கும் அடிக்கடி தகராறு ஏற் பட்டதாக கூறப் படுகிறது. 70 தூக்க மாத்திரைகளை அவர் சாப்பிட்டதாக தெரிகிறது.

அங்கு டாக்டர்கள் தொடர்ந்து சிகிச்சை அளித்து வருகிறார்கள். ஆனாலும் விந்தியாவின் உடல்நிலை கவலைக்கிடமான நிலையில் இருப்பதாக கூறப்ப டுகிறது. கோமாவிலேயே இருக்கிறார். அவர் உயிரை காப்பாற்ற டாக்டர் குழுவி னர் போராடுகிறார்கள். இதுகுறித்து பொலிசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்துகிறார்கள்.

மஞ்சுநாத்தை விசாரித்த போது அவர் விந்தியாவின் காதலர் என தெரிய வந்தது. இருவரும் ஒரு வருடமாக காதலித்து வந்துள்ளனர். சில தினங்க ளுக்கு முன் இருவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு சண்டை போட்டுள்ள னர். இதுவே வித்யாவை தற்கொலை முயற்சிக்கு தூண்டியுள்ளது.

## அந்த நாள் ஞாபகம்



நேருக்கு நேர் பார்க்கும் மர்மமென்ன?: 'தில்லானா மோகனாம்பாள்' படத்தில் எம்.சரோஜா, பத்மினி, தங்கவேலு, சிவாஜி கணேசன், ஏ.வி.எம்.ராஜன், டி.எஸ்.பாலையா...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத்தை தோற்கடிக்க ஆசிய நாடுகள் ஒன்றுபட வேண்டும்

## பிரதமர் ஜயரத்ன எடுத்துரைப்பு

(கொழும்பு)

**சர்வதேச பயங்கரவாதத்தினை தோற்கடிப்பதற்காக ஆசிய பிராந்திய நாடுகள் ஒற்றுமையாகச் செயற்படல் வேண்டும் என பிரதமர் தி.மு.ஜயரத்ன கூறியுள்ளார்.**

இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் க்வரிம் குரைஸி அண்மையில் பிரதமரைச் சந்தித்தார்.

இதன்போதே பிரதமர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

பயங்கரவாதத்தினால் ஒரு நாட்டுக்கு அழுத்தம் ஏற்படும்போது அது அந்த நாட்டை மட்டுமன்றி பிராந்தியத் திற்கே பாதிப்பினை ஏற்படுத்துவதாகவும் பிரதமர் சுட்டிக் காட்டினார்.

பயங்கரவாதம் காரணமாக பாதிப்புக்குட்பட்ட பல நாடுகளை சுட்டிக்காட்ட முடியுமெனவும் பயங்கரவாதத்தின் காரணமாக நாடுகள் எவ்வித அடிப்படைக் காரணங்களுமின்றி எதிரிகளாக மாறுவதாகவும் யுத்தம் காரணமாக ரஷ்யா பல துண்டுகளாக பிரிந்துவிட்டதாகவும் வெகுவிரைவில் ஆசியாவிலும் பயங்கரவாதம் காரணமாக நாடுகள் பிளவுபடுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுவதாகவும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

30 வருடங்களாக பயங்கரவாத யுத்தத்தினால் பாதிப்புக்குட்பட்டிருந்த இலங்கையில் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டாலும் பல மேற்கத்தேய நாடுகள் இலங்கையின் இறைமை மீது அழுத்தம் செலுத்துவதாகவும் கூறினார். அதனால் அந்த நாடுகளுக்கு இடமளிக்காத வகையில் பிராந்திய நாடுகள் ஒற்றுமையாக செயற்படுவதன் மூலம் சர்வதேச அழுத்தத்தை முறியடிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

இலங்கை - பாகிஸ்தான் நாடுகளுக்கிடையே நிலவும் முதலீடு, சுற்றுலாத்துறை போன்ற துறைகளை மேலும் பலப்படுத்திக் கொள்வதற்கு உத்தேசிப்பதாகவும் பிரதமர் சுட்டிக் காட்டினார்.

இதேவேளை இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் க்வாசீம் குரைஸி கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கையில் பணி புரிவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தமை மகிழ்ச்சி தரும் விடயமெனவும், இலங்கை - பாகிஸ்தான் நாடுகளுக்கிடையே இரு தரப்பு தொடர்புகளை மேலும் பலப்படுத்திக் கொள்வதற்கு தாம் உச்சளவில் தமது பங்களிப்பினை வழங்குவதாகவும், பயங்கர வாதத்தினால் பாகிஸ்தான் நிதமும் பாதிப்புக்குட்படு வதாகவும், பயங்கரவாதத்தினை பூண்டோடு ஒழிக்கும் விடயத்திற்கு பாகிஸ்தான் எப்போதும் துணை நிற்குமெனவும் கூறினார். (2)

# ஐ.தே.க.சமர்ப்பித்த பிரேரணை விவாதத்திற்கு எடுக்க ஆட்சேபம்

(கொழும்பு)

அரசாங்கத்துக்கு எதிராக ஐ.தே.க. சமர்ப்பித்துள்ள நம்பிக்கையில்லா பிரேரணையை இம்மாதம் விவாதத்திற்கு எடுப்பதற்கு சபை முதல்வர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா ஆட்சேபம் தெரிவித்தார்.

இது தொடர்பில் நேற்று முன் தினம் நடைபெற்ற கட்சித் தலைவர் கூட்டத்திலே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

கடந்த 28 ஆம் திகதி அரசாங்கத்திற்கு எதிராக ஐ.தே.க.நம்பிக்கையில்லா பிரேரணையொன்றை சபாநாயகரிடம் சமர்ப்பித்தது.

இது குறித்து விவாதம் நடத்த ஏப்ரல் மாதத்தில் தினமொன்றை ஒதுக்க முடியும் என சபை முதல்வர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

விவாதத்திற்காக ஒரு தினம் மட்டும் வழங்க முடியும் எனவும் அவர் கட்சி தலைவர் கூட்டத்தில் அறிவித்துள்ளார்.

ஜெனீவாவில் நடைபெறும் மனிதவுரிமை மாநாட்டில் அமைச்சர்கள் சிலர் பங்கேற்பதாலும் தேர்தல் பிரசார பணிகளில் மேலும் பலர் ஈடுபட்டுள்ளதாலும் இம்மாதம் நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்து விவாதிக்க தினமொன்றை ஒதுக்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார். (2)

# பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜெனீவா விரைவு

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக முறைப்பாடு செய்ய பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜெனீவா பயணம் செய்யவுள்ளனர்.

பிரிட்டனின் தமிழர்களுக்கான அனைத்து கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும், தமிழ்ப் பிரதிநிதிகளும் ஜெனீவா நோக்கிப் பயணம் செய்யவுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவை மாநாட்டில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டு சர்வதேச சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கவுள்ளனர்.

மாநாட்டில் பங்கேற்று இலங்கைத் தமிழர்களுக்காக குரல் கொடுக்கப் போவதாக பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர் லீஸ்கொட் ஊடக அறிக்கை ஒன்றின் மூலம் அறிவித்துள்ளார்.

இலங்கை தொடர்பில் சர்வதேச சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டும் என கோரிக்கை விடுக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இந்தக் கோரிக்கையை முன்னிலைப்படுத்தி தமிழர் அமைப்புக்களுடன் இணைந்து ஜெனீவாவில் எதிர்ப்பு போராட்டங்களை நடத்தவுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். (2)

# நீர்மின் உற்பத்தி சர்வதேச மாநாடு

நீர் மின் உற்பத்தி தொடர்பான சர்வதேச மாநாடு நாளை மறுதினம் கொழும்பில் ஆரம்பமாகிறது. 45 நாடுகள் பங்கேற்கும் குறித்த மாநாட்டில் நீர்மின் உற்பத்தியின் முக்கியத்துவம், நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி மின் உற்பத்தியை மேம்படுத்தல் போன்ற பல்வேறு விடயங்கள் குறித்து இங்கு ஆராயப்படவுள்ளது.

ஹைட்ரோ ஏசியா 2014 என்ற பெயரில் நடைபெறும் இந்த மாநாடு மின்சக்தி எரிசக்தி அமைச்சர் பவித்ரா வன்னி யாராச்சி, அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோரின் தலைமையில் நடைபெறும். (2)

## கொழும்பிலிருந்து பளைவரை

# விசேட சொகுசு ரயில் சேவை ஆரம்பம்

(கொழும்பு)

கொழும்பில் இருந்து பளை வரை முதல் குளிரூட்டப்பட்ட விசேட சொகுசு புகையிரத சேவையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்காக ஆயிரத்து 400 ரூபா கட்டணம் அறவிடப்படுகிறது.

இந்த சொகுசு புகையிரதம் பிற்பகல் 2.45 மணிக்கு புறப்பட்டு 6 மணி நேரத்தில் பளையை வந்தடையும் என புகையிரத திணை க்களம் தெரிவிக்கிறது.

கிளிநொச்சியில் இருந்து பளை வரையான புகையிரத சேவை கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பி க்கப்பட்டதையடுத்து தினமும் 3 புகையிரதம் கொழும்பில் இருந்து பளை வரை பயணிக்கிறது.

இதேவேளை நேற்று முன்தினம் முதல் விசேட சொகுசு புகையிரத சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை சனிக்கிழமைகளில் மாத்தறையில் இருந்து பளை வரைமற்று மொரு புகையிரதம் சேவை இடம்பெறவுள்ளது.

விசேட சொகுசு புகையிரத தினமும் பிற்பகல் 2.45 மணிக்குக் கொழும்பு கோட்டையில் இருந்து புறப்படுகிறது.

இதற்கான பயணச் சீட்டுக்களை பளை வரையான சகல புகையிரத நிலையங்களிலும் முன் பதிவு செய்து பெற முடியும் என அறிவிக் கப் படுகிறது.

இந்த புகையிரதம் மறு நாள் காலை 6.50 இற்கு பளையிலிருந்து கொழும்பு கோட்டை நோக்கிப் புறப்படுகிறது. (2)

## வலம்புரிச்சங்குடன் நால்வர் கைது

(கொழும்பு)

நவகமுவ பிரதேசத்தில் வலம்புரிச் சங்கு மற்றும் கையடகக தொலைபேசி கொள்ளையிட்ட சம்பவத்துடன் தொடர்புடைய நால்வர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொள்ளையிடப்பட்ட வலம்புரிச் சங்கின் பெறுமதி 25 இலட்சத்து 11 ஆயிரம் ரூபாவிற்கும் அதிகம் என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரிடமிருந்து வலம்புரிச் சங்கு, கையடக்க தொலைபேசி மற்றும் கொள்ளையிடுவதற்காக பயன்படுத்தப்பட்ட வான் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் கடுவெல மற்றும் தொம்பே பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் நேற்று கடுவெல நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். (2)

# ஜெனீவாவில் தமிழின அழிப்பிற்கு நீதி கேட்டு துண்டுப் பிரசுரங்கள்

(கொழும்பு)

இலங்கை அரசபடையினரால் மேற்கொள்ளப்பட்ட தமிழின அழி ப்பிற்கு நீதிகேட்டு இன அழிப்பு புகைப்பட கண்காட்சியுடன் மனி தநேய செயற்பாட்டாளர்கள் போராட்டத்தில் ஈடுபடவுள்ளார்கள்.

ஐ.நாவின் 25ஆவது மனித உரிமை கூட்டத்தொடர் கடந்த 3ஆம் திகதி தொடக்கம் இன அழிப்பிற்கு நீதிகேட்டு தமிழின அழிப்பு புகைப்பட கண்காட்சி தொடராக ஐ.நா முற்றத்தில் 28ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதில் ஐந்தாவது நாளாக மனித நேய செயற்பாட்டாளர் போராட் டத்தில் இணைந்து கொண்ட பெண்கள் அதில் பெண்கள் உரி மை தொடர்பிலும் இலங்கையில் நடந்த இன அழிப்புத் தொடர்பிலும் பெண்களுக்கு இலங்கையில் நடந்த அநீதிகள் தொடர்பிலும் தமது கோரிக்கைகள் அடங்கிய துண்டுப் பிரசுரங்களை வழங்கியதுடன் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்திருந்தனர். (2)



5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 1968.08.11 விண்ணில் 2009.03.09

அமரர் திருமதி. பூமிராசா லபிதா

பாசத்தின் பிறப்பிடமாய் பண்பின் உறைவிடமாய் அன்புக்கு இலக்கணமாய் வாழ்வின் வழிகாட்டியாய் வாழ்ந்த எம் குல விளக்கே நீங்காது உம் நினைவு என்றென்றும் எம்மனதில் உமது ஆத்மா சாந்தியடைய நாம் எப்போதும் பிரார்த்திப்போம்.

தகவல்:
கணவர் (பூமிராசா)
பிள்ளைகள் (கோபிநாத், கோகிலாத், லோஜனா)
பாலிநகர்
வவுனிக்குளம்-01

(5701)

## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனத்தின் ஆளுநர்சபை உறுப்பினர் திருமதி தர்சினி மகேந்திரன் அவர்களின் அன்புத் தந்தை

அமரர் சின்னத்துரை திலகராஜா



அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், ஆளுநர் சபை,
உத்தியோகத்தர்கள்,
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்,
யாழ்ப்பாணம்.

(சி-6698)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

742

## சிறந்த ஆயுதம்!

சக்கரவர்த்தி அக்பர் சில பிரமுகர்களுடன் நந்தவனத்தைச் சுற்றி வலம் வந்துகொண்டிருந்தார்.

அவருடன் பீர்பாலும் இருந்தார். நந்தவனத்தில் மலர்ந்திருந்த ரோஜாப்பூக்களைப் பார்த்துப் பரவசமான அக்பர், "ஆகா! பூமியில் ஒரு சொர்க்கம் உண்டு எனில் அது இந்த நந்தவனம் தான்!" என்றார்.

"ஆம், பிரபு! நீங்கள் கூறுவது சரி!" என்று அனைவரும் ஆமோதிக்க, பீர்பால் மட்டும் மௌனமாக இருந்தார்.

அதைக் கவனித்த அக்பர், "பீர்பால்! சற்றுமுன் நான் கூறியதில் உனக்கு உடன்பாடு இல்லையா?" என்று கேட்டார்.


"பிரபு! இந்த நந்தவனத்திற்கு அழகைத் தருவது இந்த ரோஜா மலர்கள்தான். ஆனால் அழகு எங்கே உள்ளதோ, அங்கே அபாயமும் உண்டு!" என்றார் பீர்பால்.

"ஓகோ! ரோஜாப்பூக்களில் உள்ள முட்களைக் குறிப்பிடுகிறாயா?" என்று அக்பர் கேட்டார்.

"இல்லை, பிரபு! நான் அவற்றைச் சொல்லவில்லை!" என்று பீர்பால் சொல்ல, "அப்படியானால், ரோஜாச் செடிகளின் உள்ளே மறைந்திருக்கும் பாம்புகளைக் குறிப்பிடுகிறாயா?" என்று அக்பர் கேட்டார்.

"மனிதனால்தான் பாம்புகளுக்கு அபாயம்! நம் காலடியோசையைக் கேட்டவுடனேயே அவை பயந்து ஓடி விடுகின்றன!" என்றார் பீர்பால்.







"பின் நீ எதைத்தான் அபாயம் என்று குறிப்பிடுகிறாய்?" என்று சலிப்புடன் அக்பர் கேட்க, "பிரபு! அபாயம் என்பது அழகை மட்டுமல்ல வலிமை, செல்வம், புகழ் ஆகிய அனைத்தையும் அபாயம் சூழ்ந்து உள்ளது.

தாங்கள் பாரதத்தின் மிக வலிமை பொருந்திய, மிகப் புகழ் பெற்ற, சகல செல்வங்களையும் ஒருங்கே பெற்ற சக்கரவர்த்தி!

ஆனால், மேற்கூறிய விடயங்களினால், அண்டை ராஜ்யத்து மன்னர்கள் தங்கள் மீது பொறாமை கொண்டுள்ளனர். தங்களை வீழ்த்தி வெற்றிவாகை சூட சதித்திட்டம் இட்டவாறு உள்ளனர்.

அதனால்தான், பூலோக சொர்க்கம் என்று ஒன்று இருப்பதாக நான் எண்ணவில்லை" என்றார்.

பீர்பாலின் சொற்கள் அக்பரை சிந்திக்கத் தூண்டின. மறுநாள் சபையில் அக்பர், "திடீரென்று ஒருவனை அபாயம் சூழ்ந்தால், அவனுடைய தற்காப்புக்காகப் பயன்படும் சிறந்த ஆயுதம் எது?" என்று சபையோர்களை நோக்கி ஒரு கேள்வி கேட்டார்.

"வாள்!" என்றார் ஒருவர்.

"இல்லை!" என்று மறுத்த பீர்பால், சில சமயங்களில் வாள் பிடித்த கரம் செயலற்றுப் போவதுண்டு!" என்றார்.

"எதிரி மீது தொலைவிலிருந்தே குறி பார்த்து ஈட்டியை வீசுவதன் மூலம் அபாயத்திலிருந்து தப்பலாம்!" என்றார் மற்றொருவர்.

"பதற்றத்தில் ஈட்டியின் குறி தவறினால், அது பயன்படாது!" என்றார் பீர்பால். "சரிதான்! வாள், ஈட்டி என்று எந்த ஆயுதமுமே சரியில்லை என்றால், எதுதான் ஆபத்தில் பயன்படும்?" என்று அக்பர் கேட்க,

"சூழ்நிலைக்கு ஏற்றவாறு சிந்தித்து செயற்படும் நமது அறிவே சிறந்த ஆயுதம் ஆகும்!" என்றார் பீர்பால்.............. (தொடரும்).

### யூரி ககாரின்



யூரி அலெக்சியேவிச் ககாரின், மாஸ்கோ மாநகருக்கு மேற்கே க்ஸாட்ஸ்க் பகுதியில் உள்ள குளூஷினோ எனனும் இடத்தில் 1934 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 9 ஆம் திகதி பிறந்தார்.

இவர் விண்வெளிக்கு வெற்றிகரமாகப் பயணித்த முதல் விண்வெளி வீரராவார். அத்துடன் பூமியை விண்ணில் வலம்வந்த முதல் மனிதரும் இவரே. ககாரின் ஏப்ரல் 12, 1961 அன்று சோவியத் ஒன்றியத்தின் வஸ்டொக் - 1 விண்கலத்தில் பயணித்து சுமார் 108 நிமிடங்கள் விண்ணில் சஞ்சரித்தார்.

இவரது பெற்றோர் கூட்டு விவசாயப் பண்ணை ஒன்றில் கடமையாற்றியவர்கள். சரடோவ் உயர் தொழில்நுட்பக் கல்லூரியில் தொழிற் பயிற்சி பெற்று அங்கு மென் விமான ஓட்டுநராக பகுதிநேரங்களில் பயிற்சி பெற்றார். 1955 இல் ஒரென்பூர்க் விமான ஓட்டுநர் பாடசாலையில் (Orenburg Pilot's School) இணைந்து மிக்-15 போர் விமான ஓட்டுநராக பயிற்சி பெற்று வெளியேறினார். அங்கு வலென்டினா கொர்யசோவா என்பவரை சந்தித்து 1957 இல் திருமணம் புரிந்தார். அவரது முதல் பணி நோர்வே எல்லையிலுள்ள மூர்மன்ஸ்க் பகுதியில் உள்ள இராணுவ விமானத்தளத்தில் ஆரம்பமானது.

1960 இல் மனிதனை விண்ணுக்கு அனுப்பும் சோவியத் விண்வெளித் திட்டத்தில் இணைந்துகொண்ட 20 விண்வெளி வீரர்களில் ஒருவ்ரானார் யூரி.

இவர்களுக்கு அங்கு உடலியல் ரீதியிலும் உளவியல் ரீதியிலும் மிகவும் கடுமையான பயிற்சி கொடுக்கப்பட்டது. கடும் பயிற்சிக்குப் பின்னர் ககாரின், கெர்மன் டீட்டோவ் ஆகிய இருவரும் விண்வெளிப் பயணத்திற்குத் தெரிவானார்கள். இவர்களில் ககாரின் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் உயர்பீடத்தால் விண்வெளியில் பயணிக்கும் முதல் மனிதராக அனுப்புவதற்காகத் தெரிவு செய்யப்பட்டார்.

ககாரின் ஏப்ரல் 12, 1961 இல் வஸ்தோக் 3KA-2 (வஸ்தோக் 1) விண்கலத்தில் பயணித்து விண்வெளிக்கு சென்ற முதல் மனிதன் என்ற பெயரைப் பெற்றுக்கொண்டார். விண்கலத்தில் முதன்முதல் பூமியை ஒரு முறை வலம் வந்தார்.

03.2014
09

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1847 - ஐக்கிய அமெரிக்காவின் படைகள் ஜெனரல் வின்ஃபீல்ட் ஸ்கொட் தலைமையில் மெக்சிக்கோவைத் தாக்கின.
- 1919- எகிப்தில் 1919 புரட்சி வெடித்தது.
- 1923 - விளாடிமிர் லெனினுக்கு மூன்றாம் தடவையாக மாரடைப்பு ஏற்பட்டது.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: அமெரிக்க பி-29 போர் விமானங்கள் டோக்கியோவில் குண்டுகளை வீசியதில் ஏற்பட்ட தீச்சூறாவளியினால் 100,000 பேர் கொல்லப்பட்டனர்.
- 1956 - ஜோர்ஜியாவில் இடம்பெற்ற மாபெரும் மக்கள் எதிர்ப்புப் போராட்டம் சோவியத் இராணுவத்தினரால் நசுக்கப்பட்டது.
- 1957 - அலாஸ்காவில் அண்ட்றியானொவ் தீவுகளில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் பலத்த சேதமும் ஆழிப் பேரலையும் ஏற்பட்டது.
- 1959 - பார்பி பொம்மை முதன் முதலாக விற்பனைக்கு வந்தது.
- 1967 - ஜோசப் ஸ்டாலினின் மகள் சிவெட்லானா அலிலுயேவா ஐக்கிய அமெரிக்காவுக்குத் தப்பிச் சென்றார்.
- 1986 - சலேஞ்சர் விண்ணோடத்தின் அழிந்த சிதைவுகளை ஐக்கிய அமெரிக்காவின் ஆழ்கடலோடிகள் கண்டுபிடித்தனர். இறந்த ஏழு விண்வெளி வீரர்களினதும் உடல்கள் உள்ளே இருந்தன.
- 2006 - சனியின் துணைக்கோளான என்செலாடசில் திரவ நிலையில் நீர் கண்டுபிடிக்கப்பட்டது.

பிறப்புக்கள்

- 1923 - வால்ட்டர் கோன், நோபல் பரிசு பெற்றவர்.
- 1934 - யூரி ககாரின், விண்வெளி சென்ற முதலாவது மனிதர் (இ. 1968)
- 1943 - பாபி ஃபிஷர், அமெரிக்க சதுரங்க மேதை (இ. 2008)
- 1954 - பொபி சாண்ட்ஸ், ஐரிஷ் குடியரசு இராணுவத்தைச் சேர்ந்த தன்னார்வலர் (இ. 1981)

இறப்புக்கள்

- 1974 - ஏர்ல் சதர்லாண்ட், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1915)
- 1983 - ஊல்ஃப்வொன் இயூலர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1905)
- 1992 - மெனாச்சிம் பெகின், இசுரேலியப் பிரதமர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1913)
- 1997 - [illegible] (பி. 1972)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்

...நமச்சிவாய வாழ்க
நாதன் தாள் வாழ்க
இமைப் பொழுதும்-என் நெஞ்சில்
நீங்காதான் தாள் வாழ்க

பால், தயிர், சந்தனம், பன்னீர், தேன், இளநீர், விபூதி என்று அபிஷேகங்கள் தொடர்கின்றன. மக்கள் கூட்டம் அதிகம் என்றாலும் மிக நிதானமாக அபிஷேகம் செய்யப்படுகிறது. பக்தர்களும் மற்றவர்களுக்கு மறைக்காத வண்ணம் அமர்ந்து அபிஷேகங்களைக் கண்குளிரக் காண்கின்றனர்.

இறுதியாக பக்தர்கள் எல்லோரும் சுந்தரமூர்த்தி சுவாமிக்கு அரோகரா என்று ஒருமித்த குரலில் கோஷமிடுகின்றனர். மனம் வெறுமையாகி கண்களில் கண்ணீர் துளிர்க்க பக்தியில் திளைத்து கற்பூர ஒளியில் சுந்தரரை வணங்குகிறோம்.

பெயருக்கேற்ற சுந்தர அலங்காரம், அலங்காரத்திற்கேற்ற திவ்விய தரிசனம்.

பக்தர்கள் எல்லோரும் எழுந்து விபூதி பிரசாதத்தைப் பெற்றுக்கொள்கின்றனர். கூடவே, பொங்கல் பிரசாதமும் வழங்கப்படுகிறது.

ஆகா ஆனந்தம்!


இந்த அபிஷேக ஆராதனைகளை நிறைய சாதுக்கள் சன்னதி முன் உள்ள மண்டபத்தில் அமர்ந்து தரிசித்துக்கொண்டிருந்தனர். விசேட நாட்களில் இந்த சாதுக்களுக்குத்தான் இங்கு முதல் மரியாதை தரப்படுமாம்.

ஆடி அமாவாசை, தை அமாவாசை, நவராத்திரி பூஜைகள் போன்ற சில குறிப்பிட்ட விசேட நாட்களில் வெளியூர்களிலிருந்து வரும் பக்தர்கள் இங்கு. பொங்கல், பிரியாணி போன்ற உணவுகளைத் தயாரித்து சுந்தரலிங்கத்திற்குப் படைத்து வணங்குவார்களாம்.

சுந்தரலிங்கம் சன்னதிக்கு அருகே பெரியதொரு ஓலைப்பாய் ஒன்றை விரித்து நம்ம ஊர் கும்பம் கொட்டுவது போன்று பக்தர்கள் தாங்கள் படைத்த உணவின் ஒரு பகுதியை அந்தப் பாயில் இடுவார்கள்.

பக்கவாட்டில் வைத்திருக்கும் அண்டாக்களில் சாம்பார், ரசம், பொரியல் எனத் தனித்தனியே இடப்படும். அதே ஓலைப் பாயின் ஒரு மூலையில் அசைவ உணவு வகையறாக்களும் இடப்படும். பாயில் பக்தர்களால் இடப்படும் அன்னம் மலை போல் சேர்ந்துகொண்டே இருக்கும்.

இந்தக் கும்ப அன்ன பிரசாதத்தை சாதுக்கள் அனைவரும் ஒன்றுகூடி அவற்றைத் தங்களுக்குள் பங்கு போட்டுப் பிரித்துக் கொள்வார்களாம். அப்படிப் பிரித்துக் கொள்ளும் அன்னத்தின் ஒரு பகுதியை பக்தர்களுக்கே பிரசாதமாக அந்தப் புனிதத் துறவிகள் விநியோகிப்பார்களாம்.


அகத்தியர் ஸ்தாபித்த லிங்கம், சுந்தரானந்தர் பூஜித்த லிங்கம்

ஏழை, பணக்காரர் என்ற வித்தியாசம் இல்லாமல் எல்லோருமே தம் கோரிக்கை நிறைவேற வேண்டும் என்பதற்காக இந்த உணவுப் பிரசாதத்தைப் பக்தியோடு வாங்கி உண்பார்களாம்.

நம்ம ஊரில் பல்லயம் படைத்தல் என்ற பெயரில் மாரியம்மன் கோயில்களில் திருவிழாவின் நிறைவு நாளின் பொழுதும், திரௌபதியம்மன் கோயில்களில் தீமிதிப்பு விழாவுக்கு முதல்நாள் பக்காசூரனுக்கு பீமன் சோறிடுதல் நிகழ்ச்சியினையும் நினைவுபடுத்தும் இந்த நிகழ்ச்சி இங்கே மடிப்பிச்சை என்ற பெயரில் நிகழ்த்தப்படுகிறது.

## ஆன்மீகம் 56

இந்த மடிப்பிச்சை வாங்குவதற்குப் பக்தர்கள் கூட்டம் முட்டிமோதுமாம். காரணம் இவ்விதம் பிரசாதம் வழங்கும் சாதுக்களில் எவரேனும் ஒரு சித்தர் இருக்கலாம் என்பது அவர்களின் நம்பிக்கை.

சித்தர் அருளாசியில் கிடைக்கும் பிரசாதத்தை வாங்கிச் சாப்பிட்டால் தங்களது பிரச்சினைகள் எல்லாம் நிச்சயம் தீரும் என்பது பக்தர்களின் நம்பிக்கை.

முக்கியமாக திருமணமாகாத கன்னிப் பெண்களும் குழந்தை இல்லாத பெண்களும் முதல் நாளிரவு தங்கி இந்த அருட்பிரசாதத்தை வாங்கிச் சாப்பிடுவார்களாம்.


இந்தச் சதுரகிரியில் கோயில் கொண்டிருக்கும் சுந்தர மகாலிங்கரைவிட, சந்தன மகாலிங்கரை விட இந்த சுந்தரலிங்கம் மிகவும் சக்தி வாய்ந்த கடவுளாக வணங்கப்படுகிறார்.

*(தொடரும்)*

டாக்டர். சி. எஸ். முருகேசன், எம்.ஏ., பி.எச்.டி




# பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆர்



68

...இந்திய- ஆப்பிரிக்கா கலாசார ஒற்றுமையை நிலை நிறுத்தும் இப்படத்தின் ஆரம்பத்தை சங்கர் அவர்களே சொன்னார்கள். அண்ணா சமாதி முன் அமைக்கப்பட்ட இரு பிரமாண்டமான யானைத் தந்தம் போல் இரண்டு கைகள் வானளாவ இருக்கும். அந்தக் கைகளே நடனமேடை. அதில் நாட்டியம், அரங்க அமைப்பு இயக்குநர் அங்கமுத்து ஸ்கெட்ச் போட்டு அரங்கச் செலவு நாலு லட்ச ரூபாய் என்று பட்ஜட்டும் கொடுத்தார். அச்செலவைப் பெரிதாக நினைக்கவில்லை செம்மல்.

கதை எழுதும் போது, ஒருநாள் செம்மல் என்னை முத்து மூலம் கூப்பிட்டனுப்பினார். நான் செய்த பாக்கியங்களில் பெரியது, தேவைப்படும் போது செம்மல் என்னை கூப்பிட்டனுப்புவது. போனேன். ரவீந்திரன் "இந்தக் கதையை பொறுத்தவரையிலே நான் யார் யோசனையையும் கேட்க விரும்பலே... ஏன்னா, மத்தவங்க செய்ற மாதிரி டிஸ்கஷன் வச்சுக்கலாம்னு மணியன் நாலு பேரைச் சொன்னாங்க. நான் வேணாம்னு சொல்லிட்டேன். கதைங்கறது ஒரு குழந்தை மாதிரி. அது ஒருவருக்குத்தான் பொறக்கணும். நாலு பேருக்குப் பொறக்கக் கூடாது. யாராவது என் பேரை சொல்லி உம்மை குழப்பாம பாத்துக்கும்" என்றார்.

அடுத்த நாள் மணியன், என்னை செம்மலின் அலுவலகத்தில் பார்த்தார். "என்னய்யா நீர்... என்ன பொடி



எங்க வீட்டுப் பிள்ளை எம்.ஜி.ஆர். அவர்களை [illegible]

கையிலே வச்சிருக்கிறீர்" என்றார். பொடி போடுற பழக்கமெல்லாம் எனக்கு இல்லையே என்றேன்.

மணியன் சிரித்தபடியே மூக்குபொடி இல்லையா சொக்குப்பொடி... தலை வரை மயக்கி வச்சிருக்கிறீரே... நேத்து டிஸ்கஷன் வச்சுக்கலாமே என்று என் ஆசிரியர் குழுவை சொன்னேன். அவுங்க என்ன சொன்னாங்க தெரியுமா? உங்க நாலு பேர் செய்ற வேலையை ரவீந்திரன் செய்வாரு. எனக்கு எப்படி எழுதணும்னு அந்த முட்டாள்...க்கு தெரியும். அவர் இஷ்டத்துக்கு விட்டுடுங்க என்றாங்க. அப்படி என்னையா உம்ம மேலே மதிப்பு. ஆமா.. உம்மை ஏன் அடிக்கடி முட்டாள்ன்னு சொல்றாங்க என்று கேட்டார். நான் மெல்ல சிரித்தேன்.

அப்பெயரிலும் எனக்குப் பெருமை இருந்தது. காரணம் பத்து முட்டாள்கள் சேர்ந்து ஒருவனை அறிவாளி என்பதைவிட ஒரு அறிவாளி, முட்டாள் என்று சொல்வதில் பெரிய விடயம் இருக்கிறது. இது ஜேர்மானியர் பிஸ்மார்க்கின் பெரும் சொல்.

### கடன்

ஒரு உருதுக் கவிதையை என் நண்பர் ஜலால் உடன் அழைத்து [illegible]ஒருவர் காட்டினார். ஜலால் நடிகைகளுக்கு இந்தி சொல்லி கொடுக்கும் முதியவர். அவர் அழைத்து வந்த நண்பர் ஆரிஃப். ஆற்காடு நவாபுக்கு உறவு. கலப்பு மணம் செய்து கொண்டதால் விரட்டப்பட்டார். அச்சுக்கோப்பவராக அன்புக் காதலியுடன் வாழ்ந்தார். ஒரே மகள். அவருக்கு பொழுதுபோக்கு ஆங்கிலத்திலும் உருதுவிலும் செம்மல் பேரில் கவிதைகள் எழுதி அச்சிட்டு இலவசமாகக் கொடுப்பது. இத்தனைக்கும் அவர் செம்மலை நேரில் பார்த்ததில்லை.

இப்போது வந்த காரணம் கேட்டேன். என் மகளுக்கு திருமணம். ஆயிரம் ரூபாய் இருந்தால் போதும், கொடுக்கச் சொல்லுங்கள் என்றார். தோட்டத்திற்குச் சென்று செம்மலிடம் சொன்னேன். அவர் அச்சிட்டிருந்த பல கவிதைகளையும் காட்டினேன்.

"அட இவ்வளது கஷ்டத்திலும் அவ ருக்கு இப்படி ஒரு வேலையா? சரி கொண்டுபோய் கொடும். அவரை நானும் பார்க்கிறேன்" என்றார் செம்மல். கொண்டு பேனேன். அவர் வரவில்லை. ஒரு வாரமாகியும் ஆளைக் காணோம்; அவரை அழைத்து வந்த ஜலால் மட்டும் வந்தார்.

எம்.ஜி.யாரிடம் பணம் கேட்கச் சொன்ன அன்றே அவரது பெரியம்மா மகன் வந்து கல்யாணச் செலவை ஏற்றுக் கொண்டு அவரை ஹைதராபாத் அழைத்துச் சென்று விட்டார் என்றார்.

அதனால் பணத்தைச் செம்மலிடமே கொடுத்துவிட்டேன்.

*(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு எதிரான அமெரிக்க பிரேரணையை சந்திக்க தயாராகவுள்ளோம்

## பசில் ராஜபக்ஷ உறுதி

**ஐ.நா.மனிதவுரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா பிரேரணை கொண்டு வந்துள்ள நிலையில் எந்தவிதமான சவாலையும் சந்திக்க இலங்கை தயாராக இருப்பதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.**

ரத்னபுரா பகுதியில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக கடந்த 2009ஆம் ஆண்டு நடந்த இறுதி கட்டப்போரில் சுமார் 40 ஆயிரத்துக்கும் அதிகமான அப்பாவி தமிழர்கள கொல்லப்பட்டனர்.

இந்தப் போரில் இலங்கை இராணுவ வீரர்கள் நடத்திய மனித உரிமை மீறல் சம்பவங்கள் மற்றும போர்க்குற்றங்கள் உலக நாடுகளை அதிர்ச்சிக்கு உள்ளாக்கின.

இது தொடர்பாக சர்வதேச விசார்ணை நடத்த வேண்டும் என்று பல்வேறு நாடுகள் கோரிக்கை விடுத்து வரும் நிலையில், ஐ.நா.வின் மனிதவுரிமை பேரவையின் கூட்டத்தில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா 2 முறை தீர்மானம் கொண்டு வந்தது. இந்த தீர்மானங்கள் இந்தியா உள்ளிட்ட நாடுகளின் ஆதரவுடன் நிறைவேறியது.

இந்நிலையில் ஐ.நா.வின் மனிதவுரிமை ஆணைய பேரவை கூட்டம் கடந்த சில நாட்களுக்கு முன் கூடியது. இந்த கூட்டத்தில் இலங்கையில ஆய்வு நடத்திய ஐ.நா.மனித உரிமை ஆணையர் நவிப்பிள்ளை, தனது அறிக்கையை சமர்ப் பித்தார். முன்னதாக இலங்கையின் போர்க்குற்றங்கள் குறித்து சர்வதேச விசாரணை நடத்த வேண்டும் என்று அவர் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

இதைத்தொடர்ந்து, இலங்கையில் நடந்த போர்க்குற்றங்கள் குறித்து சர்வதேச விசாரணை நடத்தும் வகையில், அமெரிக்கா 3ஆவதாக மீண்டும் ஒரு வரைவு தீர்மானம் கொண்டு வந்தது. பிரித்தானியா உள்ளிட்ட நாடுகளின் ஆதரவுடன் கொண்டுவரப்பட்ட இத் தீர்மானம் மீது இம் மாத இறுதியில் வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது.

இந்தத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டால், போர்க்குற்றம் குறித்து விசாரணை நடத்தாத இலங்கை மீது பொருளாதார தடை விதிக்க வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகிறது.

நிலையான அமைதியை போராடி பெற முடிந்த இலங்கை அரசால், நாட்டின் இறையாண்மையையும், சுதந்திரத்தையும், உணவு பாதுகாப்பையும் காக்கும் வகையில் எந்த விதமான சவாலையும் எதிர்கொள்ள முடியும். எனவே இலங்கைக்கு எதிரான எந்தவித சவாலையும் சந்திக்க தயாராக உள்ளோம் என்றார். (2)

### நீதி மோசடியில் ஈடுபட்டவருக்கு பிணை வழங்க நீதிமன்றம் மறுப்பு

சீன நிறுவனம்ஒன்றுடன் இணைந்து அமெரிக்காவில் பாரிய மோசடிகளை செய்து வந்த குற்றத்துக்காக கைது செய்யப்பட்டுள்ள இலங்கையர் ஒருவருக்கு பிணை வழங்க அமெரிக்க நீதிமன்றம் மறுத்துள்ளது. அமெரிக்காவை தளமாக கொண்ட நிறுவனம் ஒன்றின் உரிமையாளரான குறித்த நபர் ஐக்கிய நாடுகள் சபையால தடை செய்யப்பட்ட சீன நிறுவனம்ஒன்றுடன இணைந்து, அமெரிக்க முதலீட்டாளர்களை ஏமாற்றி பணம் ஈட்டியுள்ளார்.

இவ்வாறு அவர் 150 மில்லியன் டொலர்களை மோசடி செய்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த குற்றச்சாட்டின கீழ் அவர் கடந்த பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தார்.

அவருக்கு பிணை கோரி தொடரப்பட்டிருந்த வழக்கு நேற்று முன்தினம் அமெரிக்காவின் நீதிமன்றம் ஒன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன் போது அரசாங்க தரப்பில் வாதாடிய சட்டத்தரணி, தேர்ச்சி பெற்ற மோசடிக்காரர் என்றும் அவருக்கு பிணை வழங்கினால் அவர் நாட்டில் இருந்து தப்பி செல்வார் என்றும் தெரிவித்தார்.

இந் நிலையில் அவருக்கு பிணை கோரி விண்ணப்பிக்க முடியாதவாறு நீதிமன்றம் தடுப்பு காவலில் வைத்துள்ளது. (2)




வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட அரச, அரச சார்பற்ற மற்றும் பொது அமைப்புக்கள் ஒன்றிணைந்து நடத்திய புகைத்தல் எதிர்ப்புப் பேரணி நேற்று முன்தினம் காலை 9 மணிக்கு கரவெட்டி பிரதேச செயலகத்திற்கு முன்பாக ஆரம்பித்து மாலுசந்தியிலுள்ள கரவெட்டி பிரதேச சபைக்கு முன்பாக நிறைவடைந்தது.(படங்கள்:-கரவெட்டி, கரணவாய் செய்தியாளர்கள்)

# அரசியல் சாசனத்திற்கு முரணாக அமெரிக்காவின் உத்தேச தீர்மானம்

## ரவிநாத் ஆரியசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியல் சாசனத்திற்கு முரணான வகையில் அமெரிக்காவின் உத்தேச தீர்மானம் அமைந்துள்ளதாக அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவை அமர்வுகளில் அமெரிக்கா, பிரித்தானியா உள்ளிட்ட நாடுகள் இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்ற உள்ளன. இநத உத்தேச தீர்மானமானது அரசியல் சாசனத்திற்கு விரோதமான முறையில் அமைந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஜெனீவாவிற்கான இலங்கைப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை மக்களின் இறைமையை மீறும் வகையிலான விடயங்கள் இந்த தீர்மானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது என குறிப்பிட்டுள்ளார். உத்தேச தீர்மானமானது பிழையான முன்னுதாரணத்தை வழங்கும் வகையில் அமைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

அபிவிருத்தி அடைந்து வரும் உறுப்பு நாடுகளுக்கு குறுகிய மற்றும் நீண்ட கால அடிப்படையில் பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடிய வகையிலேயே இந்த உத்தேச தீர்மானம் அமைந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

உத்தேச தீர்மானமானது நாட்டின் நல்லிணக்க முனைப்புக்களை பெரிதும் பாதிக்கும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின அறிக்கையின் பரிந்துரைகளை நிராகரிப்பதாகவும் இந்த அறிக்கையில் பல்வேறு பிழைகள் காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அறிக்கையான அரசியல் மயப்படுத்தப்பட்ட அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.எனவே, உத்தேச தீர்மானமும், நவநீதம்பிள்ளையின் அறிக்கையும் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் அமைய வில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.(2)

# சிறைத்தண்டனை அனுபவித்துவரும் இலங்கையர்களுக்கு உதவிகள்

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்

(கொழும்பு)

மத்திய கிழக்கு நாடுகளில் 400 இலங்கையர்கள் சிறைத்தண்டனை அனுபவித்து வருகின்றனர் என இலங்கை வெளிநாட்டு வேலை வாயபுப் பணியகம் தெரிவித்துள்ளது.

சவுதி அரேபியா, ஐக்கிய அரபு இராச்சியம், குவைத், லெபனான், கட்டார் உள்ளிட்ட சில நாடுகளில் இலங்கையர்கள் சிறைத்தண்டனை அனுபவித்து வருகின்றனர்.

பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டமைக்காக இவ்வாறு சிறைகளில் தண்டனை அனுபவித்து வருகின்றனர்.

இதற்கு மேலதிகமாக 135 இலங்கையர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு விசாரணை செய்யப்பட்டு வருகின்றது.

சிறைத்தண்டனை அனுபவித்து வரும் மற்றும் வழக்குத் தொடரப்பட்டுள்ள இலங்கையர்களுக்கு தேவையான உதவிகள் வழங்கப்படும் என வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் அறிவித்துள்ளது.

(2)

### கடனட்டை மோசடியில் ஈடுபட்ட இலங்கையர்கள் கைது

(கொழும்பு)

மலேசியா - சா ஆலம் பகுதியில் போலியான வெளிநாட்டு கடன் அட்டைகளை வைத்திருந்த இரண்டு இலங்கைத் தமிழர்கள் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் இந்த அட்டைகளை பயன்படுத்தி 15 ஆயிரம் அமெரிக்க டொலர்களை மோசடி செய்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

கைதானவர்கள் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது, அவர்களுக்கு பிணை வழங்க மறுக்கப்பட்டது.

அத்துடன், அவர்களின் வழக்கின தீர்ப்பை எதிர்வரும் மே மாதம 14 ஆம திகதி வழங்குவதாகவும், அதற்கு முன்னர் அவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டது. (2)

# அமெரிக்காவினால் சமர்ப்பிக்கப்படும் தீர்மானத்தை ஜனாதிபதி நிராகரிப்பார்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையில் அமெரிக்காவினால் சமர்ப்பிக்கப்படவுள்ள தீர்மானத்தை நிராகரிப்பதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

நேரடி தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இலங்கை மனிதவுரிமை நிலைமைகள் குறித்து அமெரிக்கா, பிரித்தானியா உள்ளிட்ட நாடுகள் இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவை அமர்வுகளில் தீர்மானம் நிறைவேற்றவுள்ளன.

இந்த உத்தேச தீர்மானத்தின் வரைவு ஆவணம் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளது. இந்த உத்தேச தீர்மானத்தின் உள்ளடக்கங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் அமையவில்லை என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையில் நிறைவேற்றப்படவுள்ள தீர்மானம் அல்லது வாக்கெடுப்பு குறித்து அரசாங்கம் கவலை கொள்ளப் போவதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் புதிதல்ல எனவும் யுத்தம் நிறைவடைந்த காலம் முதல் இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கை தொடர்பில் கடுமையான அறிக்கை ஒன்றை வெளியிடுவார் எனவும், இது எதிர்பார்க்கப்பட்டதே எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதவுரிமை மீறல்களுக்கு குரல் கொடுப்போரை அரசு தேசத்துரோகிகளாக அடையாளப்படுத்துகிறது

## மங்கள சமரவீர எம்.பி.தெரிவிப்பு

**(கொழும்பு)**

**மனித உரிமை மீறல்களுக்கு எதிரான போராட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.**

அரசாங்கம் மனிதவுரிமை மீறல்களில் ஈடுபட்டு வருகின்றது. மனிதவுரிமைகளை பாதுகாத்துக் கொள்ள உலகின் எந்தவொரு இடத்திற்கும் செல்லத் தயார்.

மனிதவுரிமைகளை பாதுகாக்க வேண்டிய சர்வதேச பொறுப்பு காணப்படுகின்றது.

போர் இடம்பெற்ற நாடுகளில் இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுவது வழமையானது.

இராஜதந்திர அணுகுமுறைகளின் மூலம் இவ்வாறான சவால்களை சுலபமாக வெற்றி கொண்டிருக்க முடியும்.

மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் முறைப்பாடு செய்ய தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, கடந்த காலங்களில் ஜெனீவா சென்றிருக்கின்றார்.

காணாமற் போதல்கள் தொடர்பிலான ஐக்கிய நாடுகள் அமைப்பின் விசேட பிரதிநிதிகளை இலங்கைக்கு அனுப்பி விசாரணை நடத்தப்பட வேண்டுமென ஜனாதிபதி கோரியிருந்தார்.

நாடு என்ற ரீதியில் சர்வதேச சட்டங்களுக்கு மதிப்பளிக்க வேண்டுமெனத் தெரிவித்து நாடாளு மன்றில் முதல் தடவையாக சர்வ தேச தலையீட்டை வலியுறுத்திய இலங்கை அரசியல்வாதி மஹிந்த ராஜபக்ச என மங்கள சமரவீர குறிப்பிட்டுள்ளார்.

இன்று மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் குரல் கொடுப்போரை அரசாங்கம் தேசத் துரோகிகளாக அடையாளப்படுத்துகின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (2)

# இந்திய மீனவர்கள் 9 பேருக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது தலைமன்னார் கடற்புரப்பில் வைத்து கடந்த வியாழக்கிழமை காலை கைது செய்யப்பட்ட மேலும் 9 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 20 ஆம் திகதி வியாழக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து 2 படகுகளில் மீன்பிடித்துக்கொண்டிருந்த 9 இந்திய மீனவர்களையே கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட 9 இந்திய மீனவர்களையும் கடற்படையினர் உடனடியாக தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

தலைமன்னார் பொலிஸார் குறித்த மீனவர்களிடம் விசாரணைகளை மேற்கொண்ட நிலையில் அவர்களை மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

இதன்போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் குறித்த மீனவர்களை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (2)

# பொருளாதார தடைகளால் இலங்கையை வீழ்த்த முடியாது

## அமைச்சர் நிமால் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு தேவையான சகல அடிப்படை வளங்களும் நாட்டுக்குள் இருப்பதால் எப்படியான பொருளாதார தடைகளை விதித்தாலும் இலங்கையை எவராலும் வீழ்த்த முடியாது என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இரத்கம பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அமைச்சர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டுக்கு தேவையான அடிப்படை வளங்கள் உள்நாட்டில் இல்லாத நிலையிலேயே பொருளாதார தடைகளால் நாட்டை வீழ்த்த முடியும். ஆனால் இலங்கைக்குள் சகல வளங்களும் உள்ளன.

உலகில் பல நாடுகளில் வேலை வாய்ப்பு பிரச்சினைகள் உக்கிரமடைந்துள்ளன. வல்லரசான அமெரிக்காவில் வேலை வாய்ப்பு இல்லாதவர்களின் எண்ணிக்கை 12 வீதமாக அதிகரித்துள்ளது.

ஐரோப்பிய நாடுகளிலும் இந்த பிரச்சினை உக்கிரமடைந்துள்ளது. ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது வேலை வாய்ப்பு பிரச்சினைகள் இலங்கையில் குறைந்துள்ளன.



சில பிரச்சினைகள் இலங்கைக்கு மட்டுமே உரிய பிரச்சினைகள் அல்ல. முழு உலக சமூகமும் எதிர் நோக்கி வரும் பிரச்சினைகளாகும். அப்படி பார்க்கும் போது இலங்கை மிகவும் அதிர்ஷ்டமானது என்றார். (செ-11)

# அரசின் ஒத்துழைப்புடன் செயற்பட தீர்மானம்

## ஹசன் அலி தெரிவிப்பு

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தொடர்பாக அரசாங்கத்திற்குள் இருக்கும் தவறான புரிதலை திருத்தி அரசாங்கத்துடன், ஒத்துழைப்புடன் செயற்பட தீர்மானித்துள்ளதாக அக் கட்சியின் செயலாளர் நாயகம் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முக்கிய பேச்சுவார்த்தை ஒன்றின் போதே குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஐ.நா. மனிதவுரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கைக்கு விஜயம் செய்திருந்த போது, அமைச்சர் ரவூப் ஹக்கீமிடம் இலங்கை முஸ்லிம் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் குறித்து கேட்டிருந்தார்.

அப்போது, போர் காரணமாக 20 ஆயிரம் முஸ்லிம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளதாகவும் ஆயிரக்கணக்கான முஸ்லிம் மக்கள் கொல்லப்பட்டதாகவும் அமைச்சர் தெரிவித்திருந்தார்.

இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளதாகவும் அமைச்சர் ஹக்கீம், நவநீதம்பிள்ளையிடம் கூறியிருந்ததாகவும் ஹசன் அலி குறிப்பிட்டுள்ளார். (2)

# முஸ்லிம் நாடுகள் தொடர்ந்தும் இலங்கைக்கு ஆதரவளிக்கும்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கு எதிராக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஜாதிக ஹெல உறுமய கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

முஸ்லிம் காங்கிரஸ் கட்சி இனவாத அடிப்படையில் செயற்பட்டு வருவதாக ஜாதிக ஹெல உறுமய கட்சியின் ஊடகப் பேச்சாளர் நிசாந்த ஸ்ரீ வர்ணசிங்க தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்தில அங்கம் வகிக்கின்ற காரணத்தினால் முஸ்லிம் நாடுகள் அரசாங்கத்திற்கு ஆதரவளிக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச அரங்கில் முஸ்லிம் நாடுகள் தொடர்ந்தும் இலங்கைக்கு ஆதரவளிக்கும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை கூட்டணிக்குள் வைத்திருப்பதனால் அரசாங்கமோ மக்களோ நன்மை அடையப் போவதில்லை என அவர் தெரிவித்துள்ளார். (2)

# அதிபருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்த மாணவர்கள் தலைமறைவு

## தேடுதல் வேட்டையில் பொலிஸார்

கம்பஹா பண்டாரநாயக்க கல்லூரியின் 47 மாணவர்கள் தலைமறைவாகியுள்ளனர்.

கல்லூரியின் அதிபரை விலக்குமாறு கோரி பாரியளவில் போராட்டம் நடத்தி கலகம் ஏற்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள மாணவர்களே இவ்வாறு தலைமறைவாகியுள்ளனர்.

இந்த மாணவர்களை கைது செய்ய பொலிஸார் முயற்சித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. குறித்த மாணவர்கள் வீடுகளை விட்டு தப்பிச் சென்று தலைமறைவாகியுள்ளனர்.

மாணவர்களை கைது செய்ய தேடுதல் வேட்டைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சம்பவத்துடன் தொடர்புடைய மாணவர்களை கைது செய்து, சட்டத்தின் முன் நிறுத்தப் போவதாக பொலிஸார் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று மாணவர்கள் இதுவரையில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கலகம் இடம்பெற்ற போது பதிவு செய்யப்பட்ட வீடியோ காட்சிகளின் ஒத்துழைப்புடன் மாணவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (2)



வடமாகாண முகாமைத்துவப் பயிற்சி நிறுவனத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட அரச கணக்கியல் நியமம் எனும் தலைப்பிலான செயலமர்வு நேற்று முன்தினம் வடமாகாண அமைச்சு திணைக்களங்களில் கடமையாற்றும் கணக்காளர்களுக்கு நடத்தப்பட்டது. வடமாகாண பிரதம செயலாளர் ஆர். விஜயலட்சுமி உரையாற்றுவதையும் வளவாளர் கனகசபாபதி செயலமர்வு நடத்துவதையும் கலந்து கொண்ட வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ இளங்கோவன் உட்பட அமைச்சின் செயலாளர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: என்.குமார் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏமாற்றிவிட்டதா அமெரிக்கா?

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா முன்வைக்கும் பிரேரணையில் சர்வதேச விசாரணை வலியுறுத்தப்படும் என்று எதிர்பார்த்திருந்தவர்களுக்கு கடந்த திங்கட்கிழமை ஏமாற்றம்தான் ஏற்பட்டது.

அதுமட்டுமன்றி ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 25 ஆவது அமர்வின் ஆரம்ப நாளன்று, உயர்நிலைப் பிரதிநிதிகளின் உரை நிகழ்வில் ஐ.நாவுக்கான அமெரிக்க நிரந்தரப் பிரதிநிதி சமந்தா பவர் உரையாற்றுவதாக இருந்தது. அவரது உரையும் முக்கியமான எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தது.

இலங்கை தொடர்பான அமெரிக்காவின் நிலைப்பாட்டை அவர் வெளிப்படுத்துவார் என்று எதிர்பார்க்கப்பட்டபோதும், உக்ரேன் விவகாரம் அவரது ஜெனிவா பயணத்தை தடைப்படுத்தியிருந்தது.

இந்நிலையில் கடந்த திங்கட்கிழமை ஐரோப்பிய நேரப்படி மாலை 04 மணியளவில் அமெரிக்கா, பிரித்தானியா, மொன்ரனிக்ரோ, மசிடோனியா, மொறிசியஸ் ஆகிய நாடுகள் இணைந்து தயாரித்த வரைவை அமெரிக்கா, உறுப்பு நாடுகளிடம் சமர்ப்பித்தது.

அந்த தீர்மான வரைவு மறுநாள் காலையே இங்குள்ள ஊடகங்களில் பரபரப்பாகியது. ஆனால், அந்த வரைவில் கூறப்பட்டுள்ள விடயங்கள் குறித்த மயக்கம் ஊடகங்களைப் பெரிதும் குழப்பத்தில் ஆழ்த்திவிட்டன.

அதாவது, போர்க்குற்றங்கள் குறித்து சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் பரிந்துரையை வரவேற்றிருந்தபோதும், அதற்கான பொறிமுறையை உருவாக்குவதற்கான எந்தப் பரிந்துரையையும் அந்த வரைவு கொண்டிருக்கவில்லை.

ஒருபக்கத்தில் சர்வதேச விசாரணையை வலியுறுத்திய அதேவேளை, இன்னொரு பக்கத்தில் இலங்கை அரசாங்கத்தையும் உள்நாட்டு விசாரணைகளை முன்னெடுக்க அழைப்பு விடுத்திருந்தது.

இவற்றையெல்லாம் விசாரித்தும் உள்நாட்டுப் பொறிமுறைகளைக் கணிகாணித்தும், வரும் செப்டெம்பரில் நடக்கவுள்ள 27 ஆவது அமர்வில் வாய்மொழி அறிக்கையையும் அடுத்த வருடம் மார்ச் மாதம் 28 ஆவது அமர்வில் முழுமையான அறிக்கையையும் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பணியகம் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் தீர்மான வரைவு கோருகிறது.

உண்மையில், அமெரிக்கத் தீர்மானம் வலியுறுத்துவது எதனை என்ற குழப்பம் பலருக்கும் இருக்கிறது.

ஆனால், மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஐ.நா. மனித உரிமை ஆணையமே விசாரணை நடத்த வேண்டும் என்பதே அமெரிக்க நிலைப்பாடாக உள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை, ஜெனிவா கூட்டத் தொடரில் உரையாற்றிய அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பொதுமக்கள் பாதுகாப்பு, ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளுக்கான உதவி இராஜாங்கச் செயலர் சாரா சீவோல் இதனை உறுதிப்படுத்தியிருந்தார்.

அதாவது மீறல்கள் தொடர்பாக ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பணியகம், சுதந்திரமானதொரு விசாரணையை நடத்துவதும் இலங்கை நடத்தும் விசாரணைகளைக் கண்காணிப்பதும் குறித்தே அமெரிக்கத் தீர்மான வரைவு பேசுவதாகத் தெரிகிறது.

எவ்வாறாயினும் இதுவொரு முதலாவது தீர்மான வரைவு மட்டுமேயாகும். இறுதியானது அல்ல என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இதில் அடுக்கடுக்கான பல திருத்தங்கள் செய்யப்பட்டே இறுதியான வரைவு தயாரிக்கப்படும்.

அது இதைவிட வலுவற்றதாகவும் இருக்கலாம். சிலவேளைகளில் வலிமையானதாகவும் இருக்கலாம்.

அது அமெரிக்காவுடன் இந்த நகர்வில் இணைந்து கொள்ளும் நாடுகளின் ஆதரவை பொறுத்த விடயமேயன்றி புலம்பெயர் தமிழர்களோ, இங்குள்ள தமிழர்களோ, தமிழ்க்கட்சிகளோ அல்லது அரசாங்கமோ கொடுக்கும் அழுத்தங்களால் தீர்மானிக்கப்படுவதாக இருக்காது.


இந்த முதல் தீர்மான வரைவு உண்மையில் எதைக் கோருகிறது என்ற மயக்கம் ஏற்படுத்திய குழப்பத்தை விட இதில் சர்வதேச விசாரணைப் பொறிமுறை ஒன்றை உருவாக்குவதற்கான யோசனை உள்ளடக்கப்படவில்லை என்ற குழப்பமே தமிழர் தரப்பிடம் அதிகமாக உணரப்பட்டது.

அதற்குக் காரணம் இந்தமுறை அமெரிக்கா சர்வதேசப் போர்க்குற்ற விசாரணையை வலியுறுத்தும் தீர்மானத்தை முன்வைக்கும் என்று ஏற்படுத்தப்பட்ட ஒரு மாயைதான்.

சர்வதேசப் போர்க்குற்ற விசாரணைப் பொறிமுறை ஒன்றை உருவாக்குவதில் உள்ள சிக்கல்களைக் கருத்தில் எடுக்காமல் இத்தகையதொரு விசாரணைப் பொறிமுறை பற்றிய எதிர்பார்ப்பை தமிழர் தரப்பு தமக்குள் உருவாக்கிக் கொண்டது துரதிர்ஷ்டமே.

அரசாங்கமும்கூட தனது வசதி கருதி இந்த விவகாரத்தை வைத்து அரசியல் அனுகூலத்தை எட்டலாம் என்பதால் தமக்கெதிராக அமெரிக்கா சர்வதேச விசாரணைப் பொறிமுறையைக் கொண்டு வரப் போவதாகவும் அதற்குத் தாம் அஞ்சவில்லை என்றும் பிரசாரம் செய்தது.

இவையெல்லாம் தமிழர் தரப்பிடம் ஒரு மாய விம்பத்தை உருவாக்கிவிட்டது.



அந்த மாய விம்பம்தான் கடந்த திங்கட்கிழமை உடைந்து நொருங்கியது.

சர்வதேச போர்க்குற்ற விசாரணைக்கான தீர்மானத்தை ஜெனிவாவில் கொண்டு வருவதுமட்டும் முக்கியமல்ல. அதனைப் பெரும்பான்மை நாடுகளின் ஆதரவுடன் நிறைவேற்ற வேண்டும்.

அதற்கு அப்பால் அந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கான அதாவது சர்வதேச போர்க்குற்ற விசாரணையை நடத்துவதற்கான சூழலையும் உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

இவை ஏதும் சாத்தியப்படாத ஒரு சூழல் தென்படுமானால் எந்த நாடுமே ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து தமக்குத் தாமே நாமம் போட்டுக் கொள்ள முன்வராது.

2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்த சில நாட்களில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் சிறப்புக் கூட்டம் ஒன்று இலங்கையின் மனித உரிமைகள் நிலை குறித்து ஆராய்வதற்காக கூட்டப்பட்டது எவருக்கும் மறந்து போய் இருக்காது.

அதில் இலங்கைக்கு எதிராக ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட்டபோதும் அதுபெரும்பான்மை நாடுகளால் நிராகரிக்கப்பட்டது. அதுமட்டுமல்ல அந்தத் தீர்மானத்துக்கு எதிராக இலங்கை அரசின் முயற்சியால் பதிலடித் தீர்மானம் ஒன்றும் அந்த அமர்வில் கொண்டுவரப்பட்டது. அப்போது 29 நாடுகள் இலங்கைக்கு ஆதரவாக வாக்களித்தன.

போரின் போது ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டதாகவும் மனித உரிமைகள் மீறப்பட்டதாகவும் போர்க்குற்றங்கள் இழைக்கப்பட்டதாகவும் இப்போது இலங்கை மீது சர்வதேச விசாரணையைக் கோரும் பல நாடுகள் அப்போது போரில் அரசாங்கம் பெற்ற வெற்றியை வரவேற்று அந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்திருந்தன.

மீண்டும் அதுபோன்றதொரு நிலைஏற்படுவதைஅமெரிக்காவோ, அதனுடன் சேர்ந்துள்ள ஏனைய நாடுகளோ விரும்பாது. ஏன், பிரித்தானியா, கனடா போன்ற நாடுகள் சர்வதேச விசாரணையை வலியுறுத்தினாலும் அமெரிக்கா ஒருபோதும் அவ்வாறு கூறியதில்லை. எப்போதுமே அது உள்ளக பொறிமுறை குறித்தே பேசிவந்துள்ளதை எவரும் மறுக்க முடியாது.

இந்நிலையில் அமெரிக்காவிடம் இருந்து எந்தத் துணிச்சலில் சர்வதேச விசாரணைப் பொறிமுறை ஒன்றிற்கான அழைப்பை எதிர்பார்க்க முடியும்?

ஆனாலும் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பணியகத்தின் மூலம் விசாரணை நடத்தப்படவேண்டும் என்று வலியுறுத்தும் அளவுக்கு அமெரிக்கா வந்துள்ளதே மிகப் பெரிய விடயம்தான்.

ஏற்கனவே பொறுப்புக் கூறல் தொடர்பாக உள்நாட்டு விசாரணைப் பொறிமுறை அமைக்கப்பட வேண்டும் என்று கடந்தமுறை தீர்மானம் கோரிய போதே அதை நிராகரித்த அரசாங்கம், இந்தமுறை தீர்மானத்தை மதித்து அத்தகைய விசாரணைப் பொறிமுறையை உருவாக்கும் என்று எதிர்பார்க்க முடியாது.

அதேவேளை, அமெரிக்கா கூறுவதுபோன்று, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகம் விசாரணைகளை ஆரம்பித்தால்கூட, அதற்கு அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்கப்போவதுமில்லை.

இந்நிலையில் இந்த வரைவு இப்படியே நிறைவேற்றப்பட்டால் அடுத்த ஆண்டு மார்ச் மாதக் கூட்டத் தொடர்வரை ஒரு தெளிவற்ற மந்த நிலை நிலவலாம். அதை இலங்கைக்காக கொடுக்கப்பட்ட கால அவகாசமாக தமிழர் தரப்பில் பலரும் கருத முற்படுகின்றனர். அதைவிட, இந்த வருடம் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் பதவிக் காலம் முடிவடையவுள்ளது.

எனவே, புதிய ஆணையாளராகப் பதவியேற்பவர் இதில் எந்தளவுக்கு ஈடுபாடு காட்டுவார் என்ற சந்தேகமும் உள்ளது.

இவைதான் சர்வதேச விசாரணைப் பொறிமுறை குறித்து வலியுறுத்தப்படவில்லையே என்று கருதுவோருக்கு முன் உள்ள முக்கியமான கவலையாக உள்ளது.

இந்த வகையில் பார்ப்பதானால் தற்போதைய ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கை அரசுக்கு எதிராக பாரபட்சமாக செயற்படுகிறார், தமிழர்களின் பக்கம் சாய்கிறார் என்ற குற்றச்சாட்டுக்களும் வாதங்களும் நியாயமாகிவிடும்.

மனித உரிமை மீறல்கள் விவகாரத்தில் தமிழர்கள் பக்கம் நியாயம் உள்ளது என்ற நம்பிக்கை உள்ள எவரும் விசாரணை இன்னொரு ஆணையாளரால் முன்னெடுக்கப்படுவது குறித்து அச்சம் கொள்ள வேண்டியிருக்காது.

இலங்கையில் நடந்த மீறல்கள் குறித்து அரசாங்கம் விசாரிக்கவில்லை. விசாரிக்கப்போவதுமில்லை என்பது இப்போது உலகினால் ஏற்றுக்கொள்ளப்படும் நிலை வந்திருக்கிறது.

ஆனாலும், அத்தகைய விசாரணைகளை வெளியிலிருந்து முன்னெடுப்பதில் உள்ள சிக்கல்கள், சங்கடங்கள் குறித்தும் ஆராயப்படவேண்டும். அவை எதையும் கவனத்தில் கொள்ளாமல் தனியே சர்வதேச விசாரணை என்பதை மட்டும் முன்நிறுத்தி உருவாக்கப்பட்ட கற்பிதங்களே தற்போது உடைந்துள்ளது.

அதற்காகப் போர்க் குற்றங்களுக்கு நியாயம் கோருவது, அர்த்தமற்றது என்றோ, தவறானது என்றோ கருதுவதற்கிடமில்லை.

நீதியும் நியாயமும் எல்லா வேளைகளிலும் செயன்முறைக்கு வந்துவிடுவதில்லை. அவற்றை அடைவதற்கு பல படிமுறைகளைத் தாண்ட வேண்டியுள்ளது என்ற யதார்த்தம் உணரப்பட்டால்தான் இப்போது மட்டுமன்றி இனி வரக்கூடிய ஏமாற்றங்களையும் தவிர்க்க முடியும்.

-கே.சஞ்சயன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கண்டாவளை மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும் மாணவர்களின் உடற்பயிற்சி மற்றும் விநோதஉடை நிகழ்வுகளையும் படங்களில் காணலாம். (படங்கள் :- மானிப்பாய் செய்தியாளர்)



## நிகழ்வின் நிழல்கள்


யா/அளவெட்டி வடக்கு அ.மி.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் இடம்பெற்றது. இதன்போது, இலங்கை வங்கியின் ஓய்வுபெற்ற சிரேஷ்ட முகாமையாளர் எஸ்.விக்னராஜா மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் ஏனைய விருந்தினர்கள் நிற்பதையும் மாணவர்களின் அணிநடை நிகழ்வையும் படங்களில் காணலாம்.



யா/கற்கோவளம் மெ.மி.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் இடம்பெற்றது.இந் நிகழ்வில் பாடசாலை அதிபர் பொ.அரவிந்தன் மங்கல விளக்கேற்றுவதையும் மாணவர்களின் அணி வகுப்பு மரியாதையையும் மாணவனொருவனுக்கு விருந்தினராக கலந்து கொண்ட திருமதி ஸ்ரீ.நந்தினிதேவி பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- தும்பளைச் செய்தியாளர்)



யா/இளையதம்பி இந்து வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் மாணவர்களின் இடைவேளை நிகழ்வையும் யாழ்.வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ.அருணகிரிநாதன் வெற்றியீட்டிய இல்லத்திற்கான கேடயம் வழங்குவதையும் அருகில் வித்தியாலய அதிபர் வ.கதிரேசப்பிள்ளை உட்பட விருந்தினர்கள், ஆசிரியர்கள் நிற்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)




சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் இடம்பெற்றது. இதன்போது கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன் மங்கல விளக்கேற்றுவதையும் சாவகச்சேரி நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்குவதையும் அருகில் கல்லூரி உப அதிபர் திருமதி ராஜிறொகான் நிற்பதையும் தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ப.பாலசுப்பிரமணியம் வெற்றி பெற்ற இல்லத்திற்கான கேடயம் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-சாவகச்சேரி செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் அமைதியா இருக்கிறதென்றால் புயல் வரப்போகுதென்றே அர்த்தம்

ரணகளத்திலும் குதூகலமாக தன்னுடைய 63 ஆவது பிறந்தநாளை அமர்க்களமாகக் கொண்டாடி மதுரையை திக்குமுக்காட வைத்தார். தன் ஆதரவாளர்களின குடும்ப விழாக்களுக்கு நேரில் சென்று, திருச்சியில் நடந்தது தி.மு.க. மாநாடு அல்ல. ராமஜெயத்துக்கு நடந்த நினைவு அஞ்சலி கூட்டம் என்று கருத்தும் சொன்னார்.

**இப்போது என்ன செய்கிறார் அழகிரி?**

அண்ணன் ஒன்றும் சும்மா இல்லை . இந்த தேர்தலில் தன்னுடைய பவரை தலைமைக்குக் காட்டத்தயாராகிக்கொண்டு இருக்கிறார். கடல் அமைதியாக இருக்கின்றது என்றால் புயல்வரப்போகுதுஎன்று அர்த்தம். எங்கள் அண்ணனும் கடல் மாதிரிதான்.

கடந்த வாரத்தில் முன்னாள் மேயர் தேன்மொழி கோபிநாதன் வீட்டு விசேடத்துக்குப் போனபோது, இன்னும் மூன்று மாதம் பொறுத்துக்கொள்ளுங்கள், நல் லது நடக்கும் என்று சொல்லிவிட்டு வந்தார். திருச்சியில அவர்கள் மாநாடு நடத்திய அதே நாளில் மதுரை மதிச்சியம், காந்திநகர் பகுதிகளில் அண்ணனின் பிறந்தநாளுக்காக பிரியாணி வழங்கும் விழாவை துரை தயாநிதி நடத்தினார்.

அதன் பிறகு மறைந்த பி.டி.ஆர்.பழனிவேல்ராஜனின் பிறந்தநாளை முன்னிட்டு திடீர் என்று அவருடைய வீட்டுக்குப்போனார. பி.டி.ஆர். குடும்பத்துக்கே அண்ணன் வரும் தகவல் தெரியாது. வந்தவர், பி.டி.ஆர்.படத்துக்கு மாலை போட்டு வணங்கினார். பி.டி.ஆர்.மனைவி, மகனிடம் சிறிது நேரம் பேசினார். பி.டி.ஆர். மகனை அருகில் அழைத்து உட்கார வைத்துக் கொண்டு நீண்ட நேரம் பேசினார். அப்போது தொண்டர்கள் முண்டியடித்து, பி.டி.ஆர். மகனைத் தள்ளிவிட, அவர் கீழே விழப்பார்த்தார்.

பதறிப்போன அண்ணன், ஏனய்யா.. என்னைத்தான் அரசியலில் இருந்து தள்ளிவிட்டுவிட்டீர்கள். அவர்தான் அரசியலுக்கே வராம ல் ஒதுங்கித்தானே இருக்கிறார். அவரையும் எதற்காக தள்ளி விடுகிறீர்கள்... என்று கமென்ட் அடிக்க... அங்கிருந்த அத்தனை பேரும் சிரித்துவிட்டனர்.

தமிழ்நாடு முழுவதும் யாருடன் கூட்டணி வைக்க வேண்டும் என்பதை கலைஞரும், ஸ்டாலினும் முடிவுசெய்கிறார் கள். ஆனால், மதுரையில் யாருடன் கூட்டணி என்பதை எங்கள் அண்ணன்தான் முடிவு செய்வார். தென் மாவட்டங்கள் முழுக்க யார் ஜெயிக்கவேண்டும்.. யார்தோற்க வேண்டும் என்பதை முடிவுசெய்யும் சக்தியும் அதிகாரமும் எங்கள் அண்ணனுக்கு மட்டும் தான் இருக்கிறது என்று சிலாகித்தவர்கள் மேலும் சில தகவல்களைச் சொன்னார்கள்.



## அழகிரி ஆட்டம் ஆரம்பம்

இப்போது பெரும்பாலான நேரம் அண்ணன் வீட்டில் இருக்கிறதால் அத்தனை பத்திரிகைகளையும் வரிவிடாமல் படிக்கிறார். உடல் எடையைக் குறைக்க தினமும் ஒரு மணி நேரத்துக்கு மேல் வீட்டில் இருக்கும் ஜிம்மில் பயிற்சி எடுக்கிறார். அண்ணனுடைய தீவிர விசுவாசிகளான இசக்கிமுத்து, ராம்நாடு எம்.ஏ. ஷேக் முகம்மது, மன்னன், எஸ் ஸார் கோபி, மிசா' பாண்டியன், முபாரக் மந்திரி ஆகியோர்தான் தினசரி அண்ணனைப் பார்க்க வந்துவிடுவார்கள். அவர்களோடு மனம்விட்டுப் பேசி சிரித்துக்கொண்டிருக்கிறார்.

அண்ணன், ஸ்டாலின்தான் வேட்பாளரை தேர்வு செய்கிறாராம். கட்சிக்குத் துரோகம் செய்துவிட்டுப் போனவர்களுக்குத்தான் சீட் கொடுக்கிறார்கள் போல இருக்கிறது. ஸ்டாலினால்தான் வைகோ கட்சியை விட்டுப் போனார். அதனால் நாம இந்த தடவை வைகோவுக்கு வேலை செய்யலாம் அண்ணா என்று ஒருவர் சொன்னார். எல்லாம் எனக்குத் தெரியும். தலைவர் கூட்டணிப் பங்கீட்டை முடிக்கட்டும். கட்சித் தலைமையே என்னைத் தேடி வரும். அதுவரைக்கும் நடக்கிறதை மட்டும் வேடிக்கைப் பாருங்கப்பா. சுயநலமாக சம்பாதிக்கும் எண்ணத்தில் வந்தவர்கள் மட்டும்தான் என்னைவிட்டுப் போய்விட்டார்கள். ஏனைய எல்லோரும் என்னோடு தான் இருக்கிறார்கள்.

தான் வளர்த்துவிட்ட தங்கம் தென்னரசு மீதுதான் அண்ணன் அதிகமான வருத்தத்தில் இருக்கிறார். அவரை அரசியலுக்குக் கூட்டிக்கொண்டு வந்து ஜெயிக்க வைத்து மந்திரியாக்கியதே நான்தான்! இப்போது அந்தப் பக்கம் போய்விட்டார். அதுதான் வருத்தமாக இருக்கிறது என்று ஆதங்கப்பட்டார்.

திருவள்ளூரில் இருந்து குமரி மாவட்டம் வரை கட்சியில் உள்ள தனது ஆதரவாளர்கள் பட்டியலை அண்ணன் ரெடி பண்ண சொல்லியிருக்கிறார். அதற்கான வேலைகள் நடந்து கொண்டு இருக்கிறது. அது ரெடி யானதும், ஒவ்வொரு மாவட்டத்துக்கும் சென்று அவர்களை சந்திக்கவும் திட்டம் வைத்திருக்கிறார்! என்றும் சொல்கிறார்கள்.

சமீபத்தில் மதுரை தி.மு.க. புள்ளி ஒருவருக்கு போன் போட்டார் அழகிரி. போனை எடுத்தவர், வணக்கம் அணணா... என்று பதற்றத்துடன் இழுக்க... மதுரையில் நீங்கள்தான் நிற்கப்போவதாகச் சொல்கிறார்கள். சந்தோஷம். தாராளமாக நில்லுங்கள். நன்றாக செலவு பண்ணுங்கள். ஆனால், கண்டிப்பாக தோற்றுவிடுவீர்கள்... என்று சொல்லி போனை கட் செய்துவிட்டாராம் அழகிரி.

தனியார் பள்ளி நிர்வாகி ஒருவர் சில தினங்களுக்கு முன்பு அழகிரியை சந்தித்துள்ளார். உங்கள் எம்.பி. நிதியில் கட்டப்பட்ட கட்டட வேலை பாதியில நிற்கிறது. நீங்கள் மனது வைத்தால் அதை முடித்துக் கொடுக்கலாம்! என்று கேட்டிருக்கிறார். உடனே கலெக்டரைத் தொடர்புகொண்டு பேசிய அழகிரி, என்னுடைய எம்.பி. நிதியில் ஏதாவது ரிட்டன் ஆகியிருக்கிறதா! எனறு கேட்டிருக்கிறார். கலெக்டர், இல்லை என்று சொன்னதும், தனது ஆதரவாளரான கே.பி. ராமலிங்கத்துக்கு போன் செய்திருக்கிறார். நான் சொல்கிற பள்ளிக் கூடத்துக்கு உங்கள நிதியில இருந்து 5 இலட்சத்தைக்கொடுங்கள்! என்று சொல்ல... அவரும் சம்மதித்திருக்கறார்.

கடந்த 3 ஆம் திகதி மதுரையில் அ.தி.மு.க. வேட்பாளர் கோபாலகிருஷ்ணன் ஒத்தக்கடை நரசிங்கப்பெருமாள் கோயிலில் வழிபட்டு பிரசாரத்தைத் தொடக்கி உள்ளார். கடந்த தேர்தலில் அண்ணனும் இங்கிருந்துதான் பிரசாரத்தை தொடக்கினார். அவருடைய ஆலோசனைப்படி இது நடக்குதோ என்று அழகிரி ஆதரவாளர்களே சொல்ல ஆரம்பித்துள்ளார்கள்.

அழகிரி ஆட்டம் ஆரம்பித்துவிட்டது!

**ஜூனியர் விகடன்**

# நம்பிக்கையில்லா தீர்மானம் குறித்து நாடாளுமன்றத்தை புறக்கணிப்போம்

## ரவி கருணாநாயக்க எம்.பி.எச்சரிக்கை

(கொழும்பு)

நாடாளுமன்ற நடவடிக்கைகளை புறக்கணிக்க நேரிடும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அரசாங்கத்திற்கு எதிராக முன்வைக்கப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் குறித்த நாடாளுமன்ற விவாதத்தை அரசாங்கம் வேண்டுமென்றே காலம் தாழ்த்தி வருகின்றது.

இவ்வாறான விடயங்கள் குறித்து அரசாங்கம் முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

கடந்த மாதம் 21 ஆம் திகதி நம்பிக்கையில்லாத் தீர்மானம் சமர்ப்பிக்கப்பட்டது. எனினும், இது குறித்த விவாதம் நடத்த நேற்றைய தினத்தையும் இன்றைய தினத்தையும் அரசாங்கம் ஒதுக்கீடு செய்துள்ளது.

நாட்டின் முக்கியமான பிரச்சினை தொடர்பில் அரசாங்கம் உதாசீன போக்கை பின்பற்றி வருகின்றது. அரசாங்கம் நாடாளுமன்றத்தை, மலினப்படுத்தி வருகின்றது என ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஹெரோயின் போதைப்பொருள் கடத்தல் உள்ளிட்ட பல்வேறு போதைப்பொருள் கடத்தல் சம்பவங்களுடன் அரசாங்கத்திற்கு தொடர்பு இருப்பதாகத் தெரிவித்து ஐக்கிய தேசியக் கட்சி நம்பிக்கையில்லா தீர்மானத்தை சமர்ப்பித்துள்ளது. (2)

# சட்டத்தின் ஆட்சி சுட்டியில் இலங்கைக்கு 48 ஆவது இடம்

2014 ஆம் ஆண்டு சட்டத்தின் ஆட்சிச் சுட்டியில் 99 நாடுகளின் மத்தியில் உலகளாவிய ரீதியில் இலங்கை 48ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.உலக நீதித் திட்டம் 2014ஆம் ஆண்டுக்கான சட்டத்தின் ஆட்சிச் சுட்டியை கடந்த புதன்கிழமை வெளியிட்டிருந்தது.

உலகளாவிய ரீதியில் சட்டத்தின் ஆட்சி மக்கள் மத்தியில் எவ்வாறு அனுபவிக்கப்படுகின்றது என்பதை அடிப்படையாகக் கொண்டு இந்தச் சுட்டி கணிக்கப்பட்டுள்ளது.

உலகத்திலுள்ள 99 நாடுகளில் நாளாந்த வாழ்க்கையில் சட்டத்தின் ஆட்சி எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பதைக் கொண்டே இச்சுட்டி தயாரிக்கப்பட்டிருப்பதுடன், நாடுகள் தரப்படுத்தப்பட்டுள்ளன.


உலகளாவிய ரீதியில் ஒரு இலட்சம் வீட்டுடைமைகள் மற்றும் 2ஆயிரத்து400 நிபுணர்களை அடிப்படையாகக் கொண்டு இக்கணக்கெடுப்பு நடத்தப்பட்டுள்ளது.

இச்சுட்டிக்கு அமைய இலங்கை உலகளாவிய ரீதியில் 48ஆவது இடத்திலும், பிராந்திய ரீதியில் முன்னிலையிலும் இருப்பதாக அந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

தெற்காசிய நாடுகளில் இந்தியா 66 ஆவது இடத்திலும், பாகிஸ்தான் 96ஆவது இடத்திலும், பங்களாதேஷ் 92ஆவது இடத்திலும், நேபாளம் 57ஆவது இடத்திலும், ஆப்கானிஸ்தான் 98 ஆவது இடத்திலும் காணப்படுகின்றன.

சட்டத்தின் ஆட்சி சுட்டியின் அடிப்படையிலான நாடுகளின் தரப்படுத்தலில் டென்மார்க் முதலாவது இடத்திலும், அதனைத் தொடர்ந்து நோர்வே, சுவீடன், பின்லாந்து. நெதர்லாந்து ஆகிய நாடுகள் அடுத்தடுத்த இடங்களையும் பிடித்துள்ளன. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கவிதைக் கலசம்

## பிரியமுடன்

பிரியாவிடை தருகிறீர்கள்
பிரிந்திருக்க விருப்பமின்றி
பாரங்களாய் தருகிறீர்கள்- இனிய
பள்ளி நினைவுகளை
அகதி நிலை மாறியபோதும்
ஆறிவிடவில்லை அடிமனதின்
ஆழமான வலிகள்
புரிந்து கொள்ளுங்கள்
புன்னகை தொலைக்கும்
புதுயுகம் வேண்டாம்
பூரிப்போடு வாழும்
பழைமை யுகமே போதும்
ஏமாற்ற வேண்டாம்
ஏழைகள் எம்மை
என்றும் பிரியமுடன்
உங்களுடன்....

**ச.வராகி**
**குளவிசுட்டான்**

## வரம் தருவாயோ அம்மா

கருவாய் இருந்த என்னை
உருவாய் வடிவமைத்ததாயே
கண்ணுக்குள் எனை வைத்து
கண்மணி போல் காத்தாய் நீயே
என் உடலை ஆசனமாக்கி என்
குருதியால் உனைக் குளிப்பாட்டி
பலவர்ணப் பூப்பறித்து மாலை செய்து
மகராணியே உனைப் போற்றி
வணங்கிடினும் தீராதம்மா என்கடன்
பிள்ளைக்காய் உயிரைவிடும் உனைவிட
வேறென்ன வேண்டும் தாயே
உன் சேய் எந்தனுக்கு மீண்டும்
ஓர் பிறப்பிருப்பின் உன் கருவறையில்
நான் உருவாக வரம் தருவாயா அம்மா

**பி.சர்மி**
**காட்டுப்புலம்**

## நினைந்தும் நினையாமல்

எனக்கான மொழியே
உன்னோடு பழகிய நிமிடங்கள்
உயிரோடு வாழ்ந்ததாக
ஒரு ஞாபகம்
என் வாழ்க்கை அர்த்தப்பட்ட
அந்த நிமிடங்களின்
காத்திருப்புக்கள் சுகமே...
எல்லைகள் தாண்டாத
உன் தொல்லைகள் கூட
இன்னும் இனிக்கின்றன
உன் மொழியைப் போல...
மழைக்காக குடை தந்து
என் மனதை வேதனைகளால்
நனைந்து சுமக்க
விரும்புகின்றாயா...
பேசிப் பழகிய இடமெல்லாம்
தூசி படிந்து உன் வரவுக்காக
காத்திருக்க பாராமுகமாக
எதையோ வெறித்தபடி..

**பா.ஆருதி**
**உடுப்பிட்டி**

## இமயம் தொட...

அன்பில்லா ஒருவன்
உலகின் எல்லாம்
எனதென்றே எண்ணுவான்
எவனொருவன்
உலகை நேசிக்கிறானோ
அவன் தன்
உடலை உருக்கி
பிறர் நலன் காப்பான்
ஊரை நீ நேசி- ஊர்
உன்னை தோளில் வைக்கும்

மாவை.நா. கஜேந்திரன்

## புரியவில்லை

புன்னகை புரியும் பெண்ணே- நீ
பூவின் தோற்றமா? -நீ
மெல்லெனப் பேசும் வார்த்தை- என்
நெஞ்சினில் கீதமா?- உன்
ஒரு சொல்லினில் வாழும் வாழ்க்கை
காலத்தின் காதலா
சொல்லடி கண்ணே நம்
காதலெனும் மலர்
மலர்வதா? மடிவதா?

**எஸ்.மௌலதாஸ்**
**வட்டுக்கோட்டை**

---

# மௌனத்தின் தேடல் – 194



## சுமை

ஓட்டையான நவீனத்தை
மூட்டையாக சுமத்தினாரே!
ஓ உன்னத உழைப்பாளியே!
பாவம் செய்தார்
பாரம் சுமப்பார்
மறுபிறப்பினில்
மாடாய் மாறி,
நீயோ!
மானிடனாய்
மாறி வந்து
அவர் முதுகில்
சவாரி செய்வாய்!
இதுதான் மறுபிறவிக்
கோட்பாடு!

வாணி அழகன்
முரசுமோட்டை

## மாற்றம்

மெருகூட்டி,
அழகுபடுத்தி,
அபிவிருத்தியில்
கொண்ட மாற்றம்
நீ தான்
அதன் சுமையை
சுமக்க
வேண்டுமென்பதில்
இல்லையே மாற்றம்

ஜெயன்
பருத்தித்துறை

## மாறாத மாற்றம்

மாட்டுவண்டியில் ஏறி
காட்டுவழி போன
தடங்கள் மறைந்து போனாலும்
உடைந்த வாகனத்தை
குடைந்து அதிலே
மாட்டை பூட்டிவிட்டு
வேடிக்கையாக செல்லும்
மானிடரை என்னவென்று
சொல்வதையா...?

த.மோகனரூபன்
சுழிபுரம் கிழக்கு

## உழைப்பின் சின்னம்

விஞ்ஞான மாற்றமும்
காப்பெற் வீதியும்
காளையை ஓரம்
கட்டுகின்றதாம் என்று
மெய்ஞ்ஞானத்தில்
தெய்வீகம் எனப்
போற்றப்படும் எருது
உணவிற்காக வெட்டப்படும்
கொடுமையைத் தவிர்க்க
நான் உழைப்பின்
சின்னம் என புதிய
புரட்சி செய்கின்றார்

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

## அதிர்ஷ்டசாலி

மழைபடாது வெயில்படாது
மனிதர் கண்ணும் படாது
பாதுகாப்பான உனது மேலங்கியுடன்
மனதில் மட்டற்ற மகிழ்வுடனும்
ஒத்தையாய் போனாலும்
ஒய்யாரமான ஒரு பயணம்
தோழனே நீயொரு அதிர்ஷ்டசாலி

யு.சோபியா

## எல்லோரும் வாங்கோ

மினி வானில்
மிதிபலகையில்
பயணிப்போரே
பல்சரில் பறக்கும்
காளையர்களே
ஸ்கூட்டியில்
சுற்றித் திரியும்
மங்கையரே
இந்த மாட்டு
வண்டியில் ஒருமுறை
சவாரி செய்து
பாருங்கள் பயணத்தின்
சுகம் என்னவென்று புரியும்

யோ.காண்டீபன்
மானிப்பாய்

## மாறாத பழைமை

உலகில் நவீன வாகனங்கள்
பெருகிவிட்டாலும் பழைமை வாய்ந்த
இந்த வண்டிக்கு இன்னும்
மவுசு குறையவில்லை

சு.ஜெயரூபன்
பருத்தித்துறை

## வாழும் நியதி

ஓடியோடி உழைத்து
ஓய்ந்த இந்த வாகனம்
ஒதுங்கிப் போகையிலும்
உதவி புரிகின்றது
இறுதியில் பழைய இரும்பாகி
விலையாகி விடுதலைபெற்று
இனசனத்துடன் ஒன்றுகூடி
புதிய அவதாரமெடுத்து
உரிமையிழந்த மக்களுக்கு
ஒற்றுமையை வலியுறுத்தும்

க.நாகராசா, நுணாவில்

## விந்தைக் கலைஞன்

பழுதடைந்த வாகனத்தின்
இயந்திரத்தை கழற்றிவிட்டு
இரு சக்கரம் பொருத்தி நவீன
வண்டியாக்கி மாட்டைப்பூட்டி
ஓட்டிச் செல்கிறான் பெருமையாக
யாருமே சிந்திக்காததொரு
விந்தையான வாகனத்தை
உருவாக்கித் தந்த கலைஞன் வாழ்க

துரை, தென்மட்டுவில்

## வாழ்க உன் புதினம்

மெய்ஞ்ஞானம் என்று மனிதன்
மெய் உணர்ந்து வாழ்ந்தான்
விஞ்ஞானமென்று
இப்போ விண்ணில்
பறந்து வாழ்கின்றான்
தோழா நீயும் ஒரு
விஞ்ஞானிதான்
உன் விஞ்ஞானம் வளர
நான் மனதார வாழ்த்துகிறேன்

நா.தளையசிங்கம்
கொக்குவில்

---

# சங்குநாதம் மௌனத்தின் தேடல் –195



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 13.03.2014 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா வைத்தியசாலையில் பெண் நோயியல் பிரிவு

(பூந்தோட்டம்)

வவுனியா வைத்தியசாலையில் பெண் நோயியல் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலையின் அத்தியட்சகர் வைத்திய கலாநிதி குலலிங்கம் அகிலேந்திரன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் கருத்து தெரிவிக்கையில்,

வடமாகாண சுகாதார அமைச்சினால் அண்மையில் இப் பிரிவு திறந்து வைக்கப்பட்டு சகல வசதிகளையும் கொண்டு தற்போது இயங்கி வருகின்றது.

இதன் காரணமாக வடமாகாணத்தில் பெண்ணியல் நோய் தொடர்பான சிறந்த சேவையை எமது வைத்தியசாலையில் பெற்றுக் கொள்ளமுடியும்.

இதுவரை காலமும் வேறு பிரதேசத்தில் நோயாளர்கள் சிகிச்சையை பெற்று வந்தமையினால் பல அசௌகரியங்களை எதிர்நோக்கியிருந்தனர்.

ஆயினும் தற்போது வவுனியா பொது வைத்தியசாலையில் பெண் நோயியல் சிகிச்சையை அப்பிரதேச மக்கள் இலகுவாக பெற்றுக் கொள்ள முடியும்.

இதேவேளை வடமாகாணத்திற்கான இரத்த வங்கியையும் வவுனியா வைத்தியசாலையில் ஆரம்பிப்பதற்கான வேலைத்திட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இது மத்திய அரசாங்கத்தின் அனுசரணையுடன் நெதர்லாந்து நாட்டு அரசாங்கத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்டு வரும் நிலையில் இரத்த வங்கியும் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (2-9-266)

# சாரணர் நட்புறவு பாசறை; இறுதிநாள் நிகழ்வுகள் இன்று


(பூந்தோட்டம்)


வவுனியா வடக்கு கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலை சாரணர்களின் நட்புறவு பாசறை நேற்று முன்தினம் முதல் ஆரம்பமாகியுள்ளது.

இதன்படி இறுதி நாள் நிகழ்வுகள் இன்று காலை 9 மணிக்கு ஓமந்தை மத்திய கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளதுடன் இந்நிகழ்விற்கு முன்னாள் வவுனியா வடக்கு வலய கல்வி பணிப்பாளர் எஸ்.தண்டாயுதபாணி கலந்துகொள்ளவுள்ளார்.




மாலை இடம்பெறவுள்ள பரிசளிப்பு நிகழ்வில் இலங்கை சாரணர் இயக்கத்தின் பிரதான ஆணையாளர் பேராசிரியர் நிமால் டி சில்வாவும் சிறப்பு விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட நீர்ப்பாசன பிரதி பணிப்பாளர் என்.சிறிஸ்கந்தராஜாவும் கலந்து கொள்ளவுள்ளனர். (2-9-266)





டென்மார்க்கைச் சேர்ந்த தயக்குமார் செல்வராணியின் ஓராண்டு நினைவை முன்னிட்டு அன்னை அறக்கட்டளை நிதியத்தின் ஊடாக கிளிநொச்சி புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலய மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் வித்தியாலய முதல்வர் கண்ணபிரான் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் மாணவரொருவருக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்குவதையும் கலந்து கொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம்.

# கோவில் சூலத்தை பயன்படுத்தி திருட்டு

(குருமன்காடு)


வவுனியாதாண்டிக்குளம் பிரமண்டு வித்தியாலயத்தின் கோவிலில் வைக்கப்பட்டுள்ள சூலத்தை பயன்படுத்தி பாடசாலை ஜன்னல் உடைக்கப்பட்டு பொருட்கள் களவாடப்பட்டுள்ளன.

இச் சம்பவம் நேற்று முன்தினமிரவு இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

பாடசாலையின் ஜன்னலை சூலத்தினால் உடைத்து ஜன்னல் கம்பியை கழற்றி உள் இறங்கிய திருடர்கள் அங்கிருந்த கணனி ஒன்றினை களவாடிச் சென்றுள்ளனர்.

இந் நிலையில் நேற்று பாடசாலை நாள் என்பதால் பாடசாலை



சென்ற ஆசிரியர்கள் ஜன்னல் உடைக்கப்பட்டு இருந்ததைக் கண்டு வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதனையடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

இவ் ஆரம்ப கட்ட விசாரணைகளின் போது திருடர்களால் ஜன்னலை உடைப்பதற்காக பயன்படுத்தப்பட்ட கோவில் சூலம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

வேறு சிறிய சில தடயங்களும் கிடைக்கப் பெற்றுள்ளன.

இதேவேளை, குறித்த பாடசாலையில் இதற்கு முன்னரும் இரண்டு தடவைகள் கணனிகள் திருடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-9-250)

# அலுவலகம் திறந்து வைப்பு

(மன்னார்)

யுனிசெப் அமைப்பின் நிதி உதவியுடன் மடுவில் அமைக்கப்பட்ட மடு பிராந்திய சகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

யுனிசெப் அமைப்பின் நிதி உதவியுடன் சுமார் 27 மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட குறித்த அலுவலகம் வைபவ ரீதியாக திறந்து வைக்கும் நிகழ்வு மன்னார் மாவட்ட பிராந்திய சகாதார சேவைகள் பணிப்பாளர் என்.பரீட் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதன்போது வடமாகாண சுகாதார அமைச்சர் பா.சத்தியலிங்கம், வடமாகாண போக்குவரத்து மீன்பிடி அமைச்சர் பா.டெனிஸ்வரன், வடமாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி பிரிமூஸ் சிராய்வா ஆகியோர் கலந்து கொண்டு திறந்து வைத்தனர். (2-9-23)

# விவசாய உற்பத்தியை ஊக்குவிக்க உழவர் சந்தை அறிமுகம்

(குருமன்காடு)



வவுனியா விவசாய விரிவாக்கல் திணைக்களத்தினால் உள்ளூர் விவசாய உற்பத்திபொருட்களை ஊக்குவிக்கும் பொருட்டு, உழவர் சந்தை வவுனியா மாவட்ட செயலகத்தில் கடந்த வியாழக்கிழமை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

வவுனியாமாட்ட அரசாங்க அதிபரினால் திறந்து வைக்கப்பட்ட குறித்த சந்தையில் வவுனியா மாவட்டத்தை சேர்ந்த உள்ளூர் விவசாயிகள் தமது விவசாய உற்பத்தி பொருட்களை விற்பனைக்காக வைத்திருந்தனர்.

இவ் விவசாயிகளின் சிறந்த சந்தைப்படுத்தல் வசதியின்மையை கருத்திற்கொண்டு வவுனியா மாவட்ட விவசாய விரிவாக்கல் திணைக் களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ் உழவர் சந்தையை மாதாந்தம் நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாக வவுனியா விவசாய விரிவாக்கல் பிரிவின் மாகாண பிரதி பணிப்பாளர் திருமதி ஏ.சகிலாபானு தெரிவித்துள்ளார். (2-9-250)

# கழிவுகளால் துர்நாற்றம் வீசுவதால் மக்கள் அசௌகரியம்

(பூந்தோட்டம்)

வவுனியா நகர்ப் பகுதியில் காலை வேளையில் துர்நாற்றம் வீசுவதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

நகர்ப்பகுதியில் பேருந்து நிலையம் மற்றும் நவீன பொதுச் சந்தைப் பகுதியில் உள்ள மலசலகூடங்களை நகரசபையினர் காலை வேளையில் துப்புரவு செய்வதனாலேயே இவ்வாறு துர்நாற்றம் வீசுவதாக மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்துடன் நகர்ப் பகுதியில் உள்ள மீன் சந்தை கழிவுகள் காலை வேளையில் வெளியேற்றப்படுவதனால் துர்நாற்றம் வீசுவதாகவும் இதன் காரணமாக அருகிலுள்ள அலுவலகங்களில் பணியாற்றமுடியாத நிலை ஏற்படுவதாகவும் அலுவலக உத்தியோகத்தர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

எனவே, இக் கழிவுகளை இரவு வேளையில் அகற்றுவதற்கு நகர சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்களும் உத்தியோகத்தர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-9-266)

# நிர்வாகிகள் தெரிவு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டம் கரைச்சி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட இளைஞர் சேவைகள் மன்ற சம்மேளன நிர்வாகிகள் தெரிவு இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு 155 ஆம் கட்டையில் அமைந்துள்ள தேசிய இளைஞர் சேவைகள் மற்றத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு சம்மேளத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர், அமைப்பாளர் உட்பட அங்கத்தவர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதன்போது விளையாட்டுப் போட்டிகள் தொடர்பாக ஆராயப்படவுள்ளது.எனவே, இதில் அனைவரையும் பங்கு கொள்ளுமாறு கரைச்சிப் பிரதேச செயலக இளைஞர் சேவைகள் அலுவலர் எஸ்.மயூரன் அறிவித்துள்ளார். (2-9-254)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைப்புலிகளின் குரலாகவே நவநீதம்பிள்ளை செயற்படுகின்றார்

## உதய கம்மன்பில குற்றச்சாட்டு

விடுதலைப் புலிகளின் குரலாகவே நவநீதம்பிள்ளை ஜெனீவாவில் செயற்படுகின்றார். விடுதலைப்புலி தீவிரவாதிகளை ஆதரிபதற்காக இலங்கையை பழிவாங்க நினைப்பது அர்த்தமற்ற செயற்பாடாகும் என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் முன்னாள் மேல் மாகாண அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

மேலும் இலங்கை விடயத்தில் இந்தியா எதிரான தீர்மானங்களை மேற்கொள்ளாது. இலங்கையின் வளங்கள் இந்தியாவிற்கு தேவைப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

இலங்கை விடயத்தில் தொடர்ந்தும் முன்வைக்கப்படும் நவநீதம்பிள்ளையின் அறிக்கை மற்றும் இந்தியாவின் ஆதரவு தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு கருத்து தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இலங்கை தொடர்பில் சர்வதேச குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்ட போதிலும் ஜெனீவா தீர்மானம் இலங்கைக்கு சாதகமாகவே அமையும். உண்மையில் இலங்கையில் என்ன நடந்ததென்பதை ஐ.நா. விடம் தெரிவித்துள்ளோம்.

இருபக்க விசாரணையின்றி சர்வதேச அமைப்பினால் பக்கச் சார்பற்ற தீர்மானம் எடுக்க முடியாது. இன்று இலங்கையில் அமைதி நிலவுகின்றது. மக்களிடையே ஒற்றுமை காணப்படுகின்றது. இதனை பிரிக்கும் வகையில் சர்வதேச மனித வுரிமைகள் அமைப்பு செயற்படாது.

எனினும் ஜெனீவா மனிதவுரிமை பேரவையில் நவநீதம்பிள்ளை விடுதலைப்புலிகளுக்காகவே செயற்பட்டு வருகின்றார். யுத்தத்தில் உயிரிழந்த விடுதலைப் புலிகளை நியாயப்படுத்தி அரசாங்கத்தை பழிவாங்கும் இலக்கு மட்டுமே அவரிடம காணப்படுகின்றது. விடுதலைப்புலிகளின் குரலே நவநீதம்பிள்ளை என்பது உண்மையாகும். தமிழ தேசியக் கூட்டமைப்பும் புலம்பெயர் விடுதலைப்புலி அமைப்புகளும் அவரை தூண்டி விட்டு தமக்கு சார்பான முடிவினை ஏற்படுத்த முயற்சிக்கின்றது.

நாட்டில் தனித் தமிழ் ஈழம் உருவாக்கும் எண்ணம் இவர்களுக்கு இருக்குமாயின் அதனை இப்போதே மறந்து விட வேண்டும். இந்த அரசாங்கம் இருக்கும் வரையில் புலம்பெயர் தீவிரவாதிகளின் எண்ணம் நிறைவேறாது.

மேலும் ஜெனீவா மாநாட்டில் இலங்கைக்கு எதிராக இந்தியா செயற்படாது. எம்மை பகைத்துக் கொள்ளும் செயற்பாடுகளை இந்தியா மேற்கொள்ளுமாயின் அது இந்திய அரசுக்கே பாதகமாக அமையும். இந்தியாவிற்கு எம்மீது எவ்வித அக்கறையும் இல்லை.

இலங்கையில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தில் இந்தியாவும் பொறுப்புக் கூற வேண்டும். எனினும் இலங்கையின் வளங்கள் இந்தியாவிற்கு தேவை. எமது துறைமுகங்களும் மின் நிலையங்களுமே அவர்களின் குறிக்கோள்.

எனவே, அதற்கு வேண்டியேனும இந்தியா எமக்கே எதிராக வாக்களிக்க போவதில்லை.

சர்வதேச நாடுகளில் இலங்கை விடயத்தில் நல்லதொரு நிலைப்பாட்டினை வைத்திருந்தது. இன்றும் பல நாடுகள் எம்மை ஆதரிக்கின்றது. எனினும் இங்குள்ள தமிழ், முஸ்லிம் பிரிவினைவாதிகளும் எதிர்க்கட்சியுமே சர்வதேசத்தை எமக்கு எதிராக திருப்ப முயற்சிக்கின்றது. மேற்கத்தேய நாடுகளை கூட்டமைப்பினரும் முஸ்லிம் நாடுகளை முஸ்லிம் காங்கிரசும் குழப்பி தமது காரியங்களை சாதிக்க நினைக்கின்றனர். அவை இரண்டையும் தூண்டி விடும் சக்தியாக ஐக்கிய தேசிய கட்சி செயற்படுகின்றது.

எமது மக்கள் எவரேனும் தெளிவான கொள்கையில் செயற்பட வேண்டும். இலங்கையையும் அரசாங்கத்தையும் காப்பாற்றவே மக்கள் செயற்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (2)

# மன்னார் மனித புதைகுழி திடீர் என புதைக்கப்பட்டதேன்?

## பாஸ்கரா கேள்வி

மன்னார் திருக்கேதீஸ்வர மனித புதைகுழி விவகாரமானது பல திருப்பங்களையும் ஆச்சரியங்களையும் ஏற்படுத்தி பாரிய விவகாரமாக வந்து கொண்டிருந்தவேளை மேலும் அகலப்படுத்தப்பட்டு புதைகுழி தோண்டப்படும் என கூறியவேளை திடீர் என அது நிறுத்தப்பட்டு புதைகுழி தோண்டும் விவகாரமும் புதைகுழியில் போடப்பட்டதேன்? என ஜனநாயக மக்கள் முன்னணி ஊடகச் செயலாளரும், கொழும்பு மாநகர சபை உறுப்பினரும், வீடமைப்பு நிலையியல் குழு தலைவரும், தேர்தல் பரப்புரை ஒருங்கிணைப்பாளருமான சி. பாஸ்க்கரா கேள்வி எழுப்பியுள்ளார்

தொடர்ந்து எம்து தமிழ் சிறுபான்மை மக்களின் உரிமை, உணர்வுகளுக்காக குரல் கொடுக்கும் சக்திகளின் பலம் மேலும் மேலும் வலுப் பெறாத போது மலையக மக்களின் வாழ்வாதார உரிமை பிரச்சினைகள் மூடிமறைகப்படும் நிலையே வடகிழக்கு மத்திய மாகாணத்திலும் ஏற்படும் என்றார்.

வடகிழக்கு மாகாண மக்கள் ஆணித்தரமான ஆதரவு மூலம் வட மாகாண சபை வெற்றி பெறவைத்து அச்சபை மூலமும், பாராளுமன்ற உறுப்பினர்கள் மூலமும் உரத்து குரல் கொடுத்த காரணத்தினாலேயே மன்னார் புதை குழி விவகாரம் உடனடியாக புதைக்கப்படாமல் தோண்டப்பட்டது இப்படி இருந்தும் முக்கிய ஜெனிவா சம்பந்தமாக தமிழ் தலைவர்களின் கவனம் திரும்பிய நேரம் சத்தம் இல்லாமல் மன்னார் புதைகுழி தோண்டல் மூடிமறைக்கப்பட்டு கைவிடப்பட்டுள்ளதானது எவ்விதத்திலும் நியாயப்படுத்த முடியாததும் தமிழ் மக்கள் மேலும் பலம் பொருந்திய சக்தியாகவும் உரத்து குரல் கொடுக்கும் சக்தியாகவும் மேலும் மேலும் பரிணமிக்க வேண்டிய காலம் இது என மீண்டும் கட்டியம் கூறுவதாக உள்ளது.

மலையக மக்களின் தமிழ் உறுப்பினர்களின் எண்ணிக்கை கூடுதலாக இருந்தும் கூட அங்கு அரசு, அரசு சார்பான கட்சிகளாக உள்ள காரணத்தால் மலையக மக்களின் குரல் வெளிவருவதில்லை ஆனால் இங்கு நிலைமை அப்படி இல்லையாயினும் கூட அரசு தனது சதித்தனத்தை காட்டி மூடி மறைக்கும் செயலானது தமிழ் மக்கள் வடக்கு கிழக்கு, மத்தி மலையகம் என ஒன்று சேர்ந்து சோரம் போகாத தலைமைகளை ஆதரித்து உரிமைகள் உணர்வுகளை வென்றெடுக்க வேண்டும் என்பது காலத்தின் தேவை என தெரிவித்தார். (செ)

# பிரிவுத்துயர் பகிர்வு

## ஆறுமுகம் மகேந்திரம்



கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி Dorsten ஐ வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் மகேந்திரம் கடந்த 5 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 12 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு Kommun alfried hof, Gluck -Auf - StraBe 265 ,46284 Dorsten, Deutschland என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

## திருமதி விக்னேஸ்வரன் விஜிதா



வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் சுவிஸ் Basel ஐ வசிப்பிடமாகவும் கொண்ட விக்னேஸ்வரன் விஜிதா கடந்த 5 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு Friedhof am Hornli, Hornliallee 70 , 4125 , Riehen, Switzerland என்னும் முகவரியில் நடைபெறும்.

## திருமதி ஐயம்பிள்ளை தங்கம்



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் விசுவமடுவை வசிப்பிடமா கவும் கொண்ட ஐயம்பிள்ளை தங்கம் கடந்த 6 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்இன்று முற்பகல் 10 மணிக்கு சீர்க்கண்ணன் சீர்களம், முல்லை. வீதி விசுவமடு என்னும் முகவரியில் நடைபெறும்.

## பிலிப் செல்வநாயகம்



முல்லைத்தீவு கோவில் குடியிருப்பை பிறப்பிடமாகவும் முள்ளியவளையை வசிப்பிடமாகவும் கொண்ட பிலிப் செல்வநாயகம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று முல்லைத்தீவு சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

## திருமதி துரையப்பா மகேஸ்வரி



நுணாவில் கிழக்கு தாளையம் பதி வீதி சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட துரையப்பா மகேஸ்வரி கடந்த 5 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்இன்று நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கண்ணாடிபிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

## ஐயாத்துரை பாலசுந்தரம்



நாகர்கோவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் ,43B பாலாஜி நகர், அகவத்தூர் , திருச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை பாலசுந்தரம் கடந்த 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்இன்று நடைபெற்று பூதவுடல் திருச்சி பாலாஜிநகர் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

## நடராசா அற்புதராசா



அச்சுவேலி தோப்பைப் பிறப்பிடமாகவும் நவக்கிரியை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா அற்புதராசா நேற்று சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தோப்பு இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

## தாமோதரம்பிள்ளை இந்திராணி



காரைநகர் துறைமுகத்தைப் பிறப்பிடமாகவும் இல .7, பிரப்பங்குளம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை இந்திராணி (ஓய்வுநிலை ஆசிரியர்) நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்இன்று காலை 8 மணிக்கு அவரது தம்பியின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கீரிமலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

## திருமதி சிங்காரவேலு புஸ்பரோகினி



வடமராட்சி பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் நோர்வே Oslo ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சிங்காரவேலு புஸ்பரோகினி கடந்த 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு Furusetchurch , Ulsholtveien - 37 ,1053 Oslo என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

## பொன்னையா நாகராசா



இணுவில் கிழக்கு, இணுவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா நாகராசா கடந்த 6 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

## சண்முகராஜா பிரதீபன்



தங்கோடை காரைநகரைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகராஜா பிரதீபன் கடந்த 5 ஆம் திகதி புதன்கிழமை அகால மரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்இன்று காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

## சின்னத்துரை திலகராஜா



சுண்டுக்குளியை பிறப்பிடமாகவும் 3 ஆம் கட்டை, பலாலி வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை திலகராஜா நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**அன்பு வாசகர்களே!**

அரசியல், ஆன்மீகம், சினிமா, பொழுது போக்கு தொடர்பான உங்கள் கேள்விகளை

ஆசிரியர், வியாசர் பதில்கள்
இல. 3,2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

அ.சேவியர், சுன்னாகம்.

✉ வியாசர் ஐயா!

முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோரின் மரணதண்டனை இரத்துச் செய்யப்பட்டது மகிழ்ச்சியளிக்கிறதா? அவர்கள் விடுதலையடைய நாங்கள் என்ன செய்ய வேண்டும்?

✎ மிகவும் மகிழ்வளிக்கிறது. தம்பி சேவியர். சில இடங்களில் மௌனமாய் இருப்பது சாலச் சிறந்தது. ஏனென்றால் கோடி வார்த்தையிலும் பெறுமதியானது மௌனம்.

K.வாணி, புன்னாலைக்கட்டுவன்

✉ அன்பின் வியா அண்ணா!

என் அண்ணா ஒரு பெண்ணைக் காதலித்தார். ஆனால் அந்தப் பெண் அவரை ஏமாற்றி விட்டு வெளிநாடு சென்று விட்டார். அவரோ வேறு யாரையும் திருமணம் செய்து கொள்ளமாட்டேன் என்று இருக்கிறாரே?

✎ காதலில், தோற்றவர் எல்லாம் திருமணம் செய்யாமல் இருந்தால் இந்த உலகில் பாதிப்பேர் பிரமச்சாரியாய்த் தான் இருக்க வேண்டும்.

கடவுள் எனும் சக்தி இருக்கிற படியால்தான் மனிதருக்கு மனநோய் வராமல் இருக்கிறது. எல்லாம் அவன் செயல் என்று விட்டு உமது வாழ்வைப் பார்ப்பது நலம். இல்லையென்றால் பிற்காலத்தில் இதைவிட கஷ்டப்பட வேண்டிய நிலை ஏற்படும் கவனம்.

கு.ஆர்த்திகன், கரணவாய்.

✉ அன்பின் வியாசர் அண்ணா!

அண்ணா சிலரின் கை எழுத்து வடிவு என்கிறார்களே, ஆனால் அவரின் தலை எழுத்து கூடாது என்று கூறுகிறார்கள். அதற்கு நீங்கள் என்ன பதில் கூறுகிறீர்கள்?

✎ கை எழுத்து அழகானவர்களின் தலை எழுத்து கூடாமல் இருக்குமென்றால் சிறு வயதில் பாடசாலையில் உறுப்பெழுத்து எனும் திட்டமே இருக்காதே. ஒருவரின் தலை எழுத்து கை எழுத்தில் தங்கி இருக்காது அவர் நம்பிக்கையிலே தங்கியிருக்கும். புரிந்தால் சரி.

## நீங்கள் பிறருக்கு உதவி செய்த ஒன்றைக் கூற முடியுமா?

### கொஞ்சம் சிரிங்கப்பா...

"போர்க்களத்தில் வைத்து உன் தலையை சீவிடுவேன்'னு ஓலை அனுப்பியுள்ளான், எதிர்நாட்டு மன்னன்!"

"தலையை மொட்டை அடித்துக் கொண்டு வந்தால் என்ன செய்வாய்'னு கேட்டு பதில் ஓலை அனுப்புங்கள் அமைச்சரே!"



த.மோகனரூபன், சுழிபுரம்.

✉ **Hi வியா Brother!**

விளையாட்டு சோறு போடுமா? என கேட்பவர்களுக்கு உங்களின் பதில் ஏதுவாக இருக்கும்?

✎ சோறு மட்டுமல்ல மாட மாளிகைகள் கூட போடும். ஆனால் என்ன செய்ய! நாம் தான் தமிழினமாய்ப் பிறந்து விட்டோமே எல்லாவற்றிலும் ஓரங்கட்டப்படுகின்றோம்.

போர் முடிந்து எத்தனை வருடங்கள் ஆகின்றது. வடக்கு கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தி தேசிய அணிகளில் தமிழர் ஒருவர்...? விரல் காட்ட முடியுமா...? அந்த ஆதங்கம்தான் விளையாட்டு சோறு போடுமா என்பது.

## மக்களின் சொந்த நிலங்களை அபகரித்து கொள்வது பற்றி?

கிரு.செந்தூரன், பருத்தித்துறை

✉ அன்பின் வியாசரே!

காணி சுவீகரிப்பு என்ற பெயரில் மக்களின் சொந்த நிலங்களை அபகரித்து கொள்வது பற்றி உமது கருத்து என்ன?

✎ ஏழைத் தாயொருத்தி நெஞ்சில் அடித்து மண்ணை அள்ளித் திட்டும் திட்டு பொய்த்துப் போய்விடாது. திட்டமிட்டு தமிழர் நிலங்களை அபகரிப்போர் மனித நீதிக்கு முன் தவறினும் இறைவன் தீர்ப்பில் இருந்து தப்பிக்கவே முடியாது.

த.அனிற்றா, திருநெல்வேலி.

✉ அன்பின் வியாசருக்கு வணக்கம்

என் கேள்வியை கிண்டலாகவோ, நக்கலாகவோ எண்ணாது நல்ல பதிலைத்தாருங்கள். நடிகர் ரஜனி அங்கிளதும் விஜய் அண்ணாவினதும் விலாசத்தை தருவீர்களா?

✎ ரஜனிகாந், 18. ராகவா வீரா அவனியூ,
போஸ் கார்டின்,
சென்னை-86,

எஸ்.ஏ.சி. விஜய்,
64, காவேரி ஸ்றீற்,
சாலிகிராமம்,
சென்னை-600093

அபிரேக்கா.

✉ **Hi அண்ணா!**

நீங்கள் பிறருக்கு உதவி செய்த ஒன்றைக் கூற முடியுமா?

✎ ஒருநாள் எனது மோட்டார் சைக்கிளுக்கு பெற்றோல் முடிந்து விட்டது. மோட்டார் சைக்கிளை உருட்டிக் கொண்டு சென்று கொண்டிருந்தேன் . எனக்கு யாரும் உதவி செய்வார்களா எனும் கேள்வி என் முகத்தில் பரவ விட்டபடி. யாருமே உதவ முன் வரவில்லை. ஒரு பழைய சைக்கிளில் சிறுவன் ஒருவன் என்னை விலத்தும் போது என்னை பார்த்து பெற்றோல் இல்லையா? எனக் கேட்டு விட்டு சைக்கிளை மிதிக்கத் தொடங்கினான். சிறிது நேரத்தில் ஒரு போத்தலில் அரை லீற்றர் பெற்றோலை கொண்டு வந்து நீட்டினான்.

அப்போது அவன் எனக்கு தெய்வமாய் தெரிந்தான். நன்றி சொல்ல வார்த்தை வரவில்லை. அவன் என்னைப் பார்த்து என்னை நினைவிருக்கா என்னை ஒரு நாள் நீங்கள் மோட்டச் சைக்கிளில் ஏத்திக் கொண்டு போய் பள்ளிக் கூடத்தில் விட்டீர்களே? என்றான்.

என்னால் உதவி என்றே நினைத்துச் செய்யாத உதவிக்கு கிடைத்த வெகுமதியை நினைத்து சந்தோஷப்பட்டபடி மோட்டார் சைக்கிளை முறுக்கினேன்.

வே.அகிலேஸ்வரன், மருதங்கேணி

✉ அன்பின் வியாசரே!

நல்லவர்கள் நீண்டகாலம் ஒரு தொழிலில் நினைக்க முடியாமைக்கு காரணம் யாது?

✎ நல்ல இடத்தைத் தெரிவு செய்து வேலைக்கு செல்லாமையே.

சு.ஜெயரூபன், பருத்தித்துறை

✉ அன்பின் வியாசரே!

வேற்றுக் கிரகவாசிகள் பறக்கும் தட்டுகளில் நம் பூமிக்கு வந்து செல்வதாகக் சொல்கிறார்களே அது உண்மையா?

✎ முன்பெல்லாம் அரசன் தன் நாட்டின் நிலை அறிய மாறு வேடத்தில் வருவார். அப்படித்தான் இதுவுமோ.......?

**தேவை**

கட்டட நிர்மாணத்துறையில் மேசன் / தச்சு/ பெயின்டர்/ இலற்றீசியன் (12/=-1500/=) கையுதவியாளர் (1000/=- 1100/=) தேவை. உணவு+ தங்குமிடம் வழங்கப்படும். (யாழ்/ கொழும்பு/ கண்டி/ கம்பஹா/ அக்கரைப்பற்று/

உடன் தொடர்புகளுக்கு:-
0775561883, 0775561883

(ள-6701)

**நிரந்தர வேலைவாய்ப்பு**

கொழும்பை அண்மித்த பகுதிகளில் Tea, Paint, Tin, Plastic Bag, கோழிறைச்சி, Battery, Brush போன்ற தொழிற்சாலைகளில் உற்பத்தி லேபல் பொதியிடல் போன்ற பிரிவுகளில் 18-48 வரையான ஆண். பெண் இருபாலாருக்கும் 18000/=-25000/= சம்பளத்துடன் உணவு தங்குமிட வசதியுடன் நிரந்த வேலைவாய்ப்பு.

தொடர்புகளுக்கு: 0766991993

(5785)


**தேவை**

உங்கள் வீடுகளில் உள்ள பழைய புத்தகங்கள், கொப்பிகள், பத்திரிகைகள் மற்றும் காட்போட் ஆகியவற்றை வீடுகளுக்கு வந்து பணம் தந்து பெற்றுக் கொள்கின்றோம்.

தொடர்பு:
0770789476

(5783)

# மரண அறிவித்தல்



## அமரர் பிலிப்பு யோசேப் செல்வநாயகம்
## (ஓய்வுபெற்ற தபால் ஊழியர்)

கோயில் குடியிருப்பு முல்லைத்தீவை பிறப்பிடமாகவும், 4ஆம் வட்டாரம், முள்ளியவளையை வதிவிடமாகவும் கொண்ட பிலிப்பு யோசேப் செல்வநாயகம் (ஓய்வுபெற்ற தபால் ஊழியர்) 07-03-2014 அன்று காலமானார்.

அன்னார் சரஸ்வதியம்மாவின் அன்புக் கணவரும், காலஞ் சென்ற பிலிப்பு றோசம்மா ஆகியோரின் அன்பு மகனும், அமரர் மார்க்குப்பிள்ளை, அமரர் திருச்செல்வம், அமரர் இராசநாயகம், அமரர் மரியநாயகம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், வலன்ரையின் (லண்டன்), மேரி தயானி (லண்டன்), கொன்சன்ரைன் (பிரான்ஸ்), மேரி சலாக்கினி (முள்ளியவளை) ஆகியோரின் அன்புத் தந்தையும் தியாகலிங்கம் (கண்ணன்) (லண்டன்), யசோதினி (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், ஹர்சன், துஷான், ஜெமிஷன், றபோன், விண்ணிலா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 09-03-2014 (ஞாயிற்றுக்கிழமை) இன்று பிற்பகல் 3.00மணியளவில் நல்லடக்கத்திற்காக உண்ணாப்பிலவு சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் எற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

4 ஆம் வட்டாரம், முள்ளியவளை. (5780) தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஒருவன் எப்போதும் வீரனாகவே வாழ முடியாது. ஆனால் என்றைக்கும் மனிதனாக வாழ முடியும். – யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## உண்மையை நிராகரிக்க உலக மேடையில் ஏறி நிற்பதோ!

சண்டித்தனங்கள் நின்று நிலைபெற்றதான வரலாறுகள் இந்தப் பூமியில் கிடையாது. அன்பு, அகிம்சை, மற்றவர்களை மதிக்கும் பண்பு என்பனவே மனிதனை வாழ வைக்கும் பெரு மருந்து.

எனினும் பதவியும் அதிகாரமும் கிடைத்தவுடன் அனைத்தையும் மறந்து நாம் இட்டதே சட்டம் என்று சிலர் நடக்கின்றனர்.

ஆனால் இத்தகையவர்களின் இறுதிக் காலங்கள் எப்படி முடிந்து போனது என்பதை சிந்திக்க இத்தகையவர்கள் தயாரில்லை.

இதற்கு இலங்கை நல்ல உதாரணம். வன்னிப் போருக்குப் பின்னரான தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்த்து வைத்தல் என்பதை மறந்து வன்னியில் நடந்த பேரழிவை–இன அழிவை நியாயப்படுத்த நினைப்பது மிகப் பெரும் அநீதியாகும்.

ஒரு நாட்டில் இன அழிப்பு நடைபெற்றது என்ற குற்றச்சாட்டு எழுந்தால் அது பற்றி பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தி உண்மையைக் கண்டறிவதே நல்லாட்சியின் பண்பாகும். இதை விடுத்து இதோ! பார் உண்மையைப் புதைகுழி தோண்டிப் புதைக்கிறேன் என்றால் நிலைமை மோசமாகும்.

உண்மைகள் மறைந்து போனால் அஃது உண்மையை மறைத்தவருக்குக் கூட பேராபத்தாக அமையும் என்பது இங்கு நினைவில் கொள்ளத்தக்கது.

அதேநேரம் ஒரு உண்மையை மறைப்பதற்காகப் பல பொய்களைச் சொல்ல வேண்டியிருக்கும். அத்தகைய பொய்யை உள்நாட்டில் மட்டும் அல்ல, உலகத்தலைவர்கள் கூடியிருக்கின்ற இடங்களிலும் கூற வேண்டியிருக்கும். இது மிகவும் அருவருப்பான விடயம்.

ஜெனிவா மாநாட்டில் அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் ஆக்ரோஷமாகப் பேசிய போதிலும் அது பற்றி மாநாட்டில் இருந்தவர்கள் பொருட்படுத்தவில்லை என்ற செய்தி இதைத்தான் தெளிவுபடுத்துகின்றது.

கற்றறிந்த ஒரு பேராசிரியர் வெளிவிவகார அமைச்சர் என்ற பதவியில் இருந்து கொண்டு உலகத் தலைவர்கள் மத்தியில் உண்மையை நிராகரிப்பது கல்விக்கு அழகல்ல.

கல்வி அழகு என்றால் என்ன? என்ற கேள்விக்கு "...நெஞ்சத்து நல்லம் யாம் எனும் நடுவு நிலைமையால் கல்வி அழகே அழகு" என்கிறது நாலடியார்.

நாட்டைக் காப்பாற்றுவதற்காக ஐ.நா விலும் பொய் உரைத்தோம் என்று நியாயப்படுத்தினால், அந்த நியாயப்பாடு எந்த நோக்கத்திற்கானதோ அந்த நோக்கத்தை தகர்த்தெறியும் என்ற பேருண்மையை மறந்து விடுவது மடமைத்தனம்.

விடுதலைப் புலிகளுடனான போரில் இத்தனை ஆயிரம் தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். இராணுவத்தில் சரணடைந்தவர்களுக்கு நடந்தது இதுதான் என்பதை வெளிப்படுத்த வேண்டும்.

அதுவே நாட்டைக் காப்பாற்றுவதற்கான வழிமுறையாகும். இதை விடுத்து நாட்டைக் காப்பாற்றுதல் என்ற நினைப்பில் இனவாத சிந்தனையுடன் செயற்படுவது பேரழிவைத் தரவல்லது.

உண்மைகளை மறைக்கின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நேர்மையானவர்களை பொய்யர்கள் என்று கூறும் துர்ப்பாக்கிய நிலை ஏற்படுகின்றதல்வா?

நவநீதம்பிள்ளை ஒரு பொய்யர் என்று இலங்கை அரசு கூறும் போது, அவர் இலங்கை அரசுக்குச் சார்புடைய நியாயங்களைக் கூறுகின்றபோது அதுவும் பிழைத்து விடும் அல்லவா?

ஆக, உண்மைகளை மறைப்பதற்காக விழுந்திருப்பதை விட கடுமையாகத் தூங்குவது மேல்.

# கந்தவேளின் பெருமையை உலகறிய வைத்த கச்சியப்ப சிவாச்சாரியார்

கச்சியந்தலத்தில் ஆதிசைவ மரபில் வந்த காளத்தியப்ப சிவாச்சாரியார் நீண்ட காலம் மகப்பேறு இன்றி குமரக் கடவுளை வேண்டி **கச்சியப்பர்** என்னும் புதல்வரைப் பெற்றார்.

ஏழு வயதில் உபநயனம் பெற்று வேதம் ஓதி இலக்கண இலக்கியம் கற்று நிர்வாண தீட்சை ஆச்சாரிய அபிஷேகம் பெற்றார்.

முருகன் இவரது கனவில் தோன்றி சிவரகசிய காண்டத்தில் உள்ள நமது சரிதத்தை கந்தபுராணம் எனப் பெயரிட்டு தமிழில் பெரும் காப்பியமாக பாடக்கடவாய் எனக்கூறி திகடசக்கர என அடி எடுத்துக்கொடுத்தார்.

கனவு தெளிந்ததும் ஆனந்தக் கூத்தாடி குமரக்கோட்டம் சென்று முருகனை வழிபட்டு நாள்தோறும் 100 செய்யுள் பாடினார். எழுதிய ஏட்டையும் எழுத்தாணியையும் அந்தர்யாம பூசை முடிந்த பின் இறைவன் இணையடியில் வைத்துவிட்டுக் கதவைத் தாளிட்டுவிட்டு வீட்டுக்கு செல்வார். மறுநாள் கோயிலுக்குச் சென்று ஏட்டை எடுத்துப் பார்ப்பார். சில இடங்களில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டிருக்கும். கந்தவேளின் அற்புதத்தை எண்ணிக் கண்ணீர் சொரிவார்.

### இவரது குருபூசை தினம் இன்று

பின் இந்நூலை அரங்கேற்ற காஞ்சி மாநகரமே விழாக்கோலம் பூண்டது. அப்போது சான்றோர்கள் ஒன்றுகூடினர். அதில் தமிழ்ப்புலவர் ஒருவர் திகழ் தசம் என்பது திகடசம் என புணர்வதற்கு விதி தொல்காப்பியம் முதலான நூல்கள் எதிலும் இல்லை என முரண்பாடு தோன்ற புலவர் வடிவில் முருகன் தோன்றி வீரசோழியம் எனும் நூலை எடுத்து சந்திப்படலத்தை ஆதாரம் காட்டினார்.


வீரசோழியத்தை கச்சியப்பர் கையில் கொடுத்துவிட்டு மறைந்தருளினார். சபை அடங்கியது. முருகனது திருவிளையாடலை எண்ணிக் கண்ணீர் சொரிந்து புலவர்கள் கச்சியப்பர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினர். பின்னர் கந்த புராணத்தையும்; கச்சியப்பரையும் சிவிகையர் வைத்து வீதிகளில் திருவிழா கொண்டு சென்றனர்.

கந்தபுராணத்தில் போரில் இறந்தவரை உயிர் கொடுக்கும் உத்தி, ...த்த காண்டத்திலும் கணித நூல் பற்...ய அறிவு அசுர காண்ட அண்ட கோச...லத்திலும் அதைவிட மார்க்கண்...யர் பிறப்பு அசுர குருவான சுக்கிரனும் தேவ குருவான வியாழனும் உச்சம் பெற்று பிறந்ததாக கந்தபுராணம் கூறுகிறது.

இரசவாதம் அதாவது இரசாயன நிலைமாற்றம் பற்றியும் உலோகங்களால் இரும்பில் உள் ளதை பொன்னாக மாற்றும் வித்தை போன்றனவும் கந்தபுராணத்தில் காணலாம்.

கு.கோபிராஜ்
சண்டிலிப்பாய் வடக்கு

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை



### வந்தனை செய்திடடா தம்பி

உண்டில்லை யென்றுசொல்லி யுரையாட வேண்டாமடா
கண்டு களித்திடடா– தம்பி!
கருணைவெள்ளம் பெருகுமடா
பண்டுசெய்த வல்வினைநோய் பாரிற் பறக்குமடா
நன்றென்றுந் தீதென்றுந்– தம்பி!
நடுவாக நின்றிடடா
கொன்றொன்றும் புசியாதே குருவாக்கை மறவாதே
அன்றுமின்று மென்றுந்– தம்பி!
அப்படியே யுள்ளதடா

# நம்மைச் சுற்றி புதியனவற்றை உருவாக்க தவக்காலத்தை பயன்படுத்துவோம்

இன்று நாம் தவக்காலத்தின் தொடக்க ஞாயிற்றுக்கிழமையில் கால் பதிக்கின்றோம். இக்காலத்தில் இயேசுவின் பாடுகள், மரணம் மற்றும் உயிர்ப்பு எனும் மீட்பு மறையுண்மைகளை கொண் டாடுவதற்கு தயாரிப்பாக, ஒறுத்தல், செபம் மற்றும் மனமாற்றத்தை உள்ளடக்கிய தவக்காலத் திருப்பயணத்தில் நாம்பயணிக்கின்றோம்.

இன்று நமக்குத்தரப்படும் பைபிள் பகுதியில் இயேசு பாலைவனத்தில் மூன்று சோதனைகளை சந்தித்ததைக் விளக்கிக் காட்டுகின்றது. இதன்மூலம் இயேசு சாத்தானிடம்சரணடைய வேண்டும்என்பது சாத்தானின் விருப்பம். இயேசு அதை திட்டவட்டமாக மறுத்தார். இயேசு இறைவனிடமே சரணடைகின்றார். இறைசித்தத்திற்கு தன்னை அர்ப்பணிக்கின்றார்.

சோதனை என்பது எல்லோருடைய வாழ்விலும் நடக்கின்ற ஒன்று. அதிலும் குறிப்பாக, நன்மை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடு, கடவுளின் இறையாட்சி இந்த மண்ணில் வர உழைக்கிற ஒவ்வொருவருடைய வாழ்விலும் சோதனைகள் நிச்சயமாக இருக்கும் என்பதை இந்த நிகழ்ச்சி நமக்குத் தெளிவாகக்காட்டுகிறது. அத்தகைய சோதனையைக்கண்டு பயப்படாமல், துணிவோடு, இறைவனின் துணையை நாம் நாடினால் நம்மால் சோதனைகளை வெல்லமுடியும் என்பது இயேசு கற்றுத் தருகிற பாடம்.

இயேசு பலவீனமாக இருக்கிறார். உடலால், உள்ளத்தால் சோர்ந்து இருககிறார். ஆனாலும், அவர் தெளிவாக, துணிவோடு இருக்கிறார். ஒவ்வொரு முறையும் சாத்தான் அவரைச் சோதிக்கிற பொழுது, இறைவார்த்தையின் வழி யாக இறைவனின் வல்லமை அவரிடமிருந்து வெளிப்படுகிறது. இறைவார்த் தையின் இறைபிரசன்னம் அவருக்கு உறுதுணையாக இருந்து அவரை வழிநடத்துகி றது. [illegible] களை வெல்ல இயேசு கையாண்ட ஆயுதம இறைவார்த்தை தான். மூன்று சோதனைகளிலும் அவர் பைபிளை மேற்கோள் காட்டினார். அந்த வார்த்தைகளைச் செயற பாடாக்கி னாா. இவ்வாறு, இறைவன்மீது அவருக்குள்ள நம்பிக்கையை வெளிப் படுத்தினார். நாமும் நமது சோதனைகளை வெல்ல இந்த மூன்று உத்திகளையும் பயன்படுத்து வோம். இறைவார்த்தையைக் கொண்டும், இறைநம்பிக்கையைக் கொண்டும் நம் சோதனைகளை வெல்வோம். நன்மை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடு வாழ்வை அணுகும் போது, நமக்கு ஏற்படுகின்ற தடைக்கற்கள் ஏராளம், ஏராளம். அதைவிட நமக்கு வருகிற சவால்கள் நம்மை பாதாளத்திற்கு இழுத்துச்செல்லும் வலிமை படைத்தவை. ஆனால், எவற்றுக்கும் அஞ்சாமல் துணிவோடு, இறைபிரசன்னத்தை நாடி அவற்றை எதிர்கொண்டால், நாம் வெற்றி பெறுவோம்.

## பரமபிதா காட்டிய பாதை

நாம் ஏன் இறைவனிடம் திரும்பிச் செல்லவேண்டும்? ஏனெனில், நமக்குள், நாம் வாழும் உலகில், நமது சமுதாயத்தில், அனைத்தும் நலமாக இல்லாததால், மாற்றங்களைத் தேடி, மனமாறங்களைத் தேடி நாம் இறைவனிடம் திரும்ப வேண்டும். பயனுள்ள வகை யில் உற்பத்தியைப் பெருக்குவது ஒன்றே முக்கியம் என்பதை முன்னிறுத்தும் இவ்வுலகில், கடவுள் ஒதுக்கப்படுகிறார் மீண்டும் அவரை வாழ்வின்மையத்திற்குக் கொண்டு வர தவக்காலம் எமக்கு உதவுகிறது.

செபம், உண்ணாநோன்பு, தர்மம்என்ற மூன்று செயற்பாடுகள் தவக்காலத்தின் முக்கிய முயற்சிகள். உணவைக் குறைப்பது, நம் உடல் நலனைக் கூட்டும் என்ற மனநிலையுடன் மேற்கொள்ளப்படும் உண்ணாநோன்பு, தவமுயற்சி அல்ல, மாறாக அடிப்படைத்தேவைகளுடன் வாழப் பழகுவது, அடுத்தவரோடு பகிர்ந்து கொள்வது என்பவையும் உண்ணா நோன பில் அடங்கியுள்ள அம்சங்கள். உலகில் மேற கொள்ளப்படும் ஒவ்வொரு செயலும், பதிலுக்கு எதையோ எதிர்பார்த்து செய்யப்படுகின்றது. எதையும் எதிர் பாராமல் அடுத்தவருக்கு வழங்குவதே தர்மம்.



இயேசுவின் பாதச்சுவடுகளில் இடம்பெறும் இந்த ஆன்மீகப் புதுப்பித்தல் பயணமானது, இன்று நம மிடையே காணப்படும் ஆனமீக மற்றும் பொருளாதார வறுமை வளர்ந்து வருவதை உணரவும், அதற்கு பதிலுரைக்கவும் நமக்கு அழைப்புவிடுக்கிறது.

கடவுளின்றிச் செயற்படமுடியும் என்ற எண்ணமுடைய கலாசாரத்தின், பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்குச் செபிக்கக் கற்றுத்தராத ஒரு கலாசாரத்தின், வன்முறைகளையும் ஏழ்மையையும், சமுதாய அழிவுகளையும் சாதாரணமாக எடுத்துக்கொள்ளும் ஒரு கலாசாரத்தின், அழுத்தங்களை நாம் முறறிலும் உணர்ந்தவர்களாக, அவைகளை எதிர்த்து நிற்க வேண்டும் என

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

எதிர்பார்க்கப்படுகின்றோம். தனியார்களாகவும் சமுதாயமாகவும் நற்செய்தியின் வார்த்தைகளுக்குச் செவிமடுக்கவும் நம விசுவாசத்தின் மறையுண்மைகளை ஆழ்ந்து தியானி க்கவும், ஒறுத்தல் மற்றும் பிறரன்பு நடவ டிக்கைகளைக் கடைப்பிடிக்கவும், நம் இதயங்களை இறை அருளுக்கும் நம் அடுத்தவரின் தேவைகளுக்கும் முழுமையாகத் திறக்கவும், இந்த தவக்காலம் நமக்கு உதவட்டும்.

நமக்குள்ளும், நம்மைச் சுற்றிலும் மீண்டும் புதியனவற்றை உருவாக்க நமக்குத் தரப்பட்டுள்ள தவக்காலத்தில், நம்மை முற்றிலும் மன்னித்து, மீண்டும் ஒருமுறை நாம் வாழ்வைப் புதுப்பிக்க இறைவன் நம்மைத் தூண்டுகிறார், எனவே, அவரை நோக்கி நாம் பயணத்தைத் தொடக்குவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய போட்டி



உடுவில் பிரதேச இளைஞர் கழக சம் மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்க்ளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் இடம்பெற்று வருகின்றன.

இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 முதல் பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டிகள் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள தாகவும் பங்குபற்றும் கழகங்கள் உரிய நேரத்திற்கு சமுகம் தருமாறும் உடுவில் பிர தேச இளைஞர் சேவை அதிகாரி ஆர்.அனு ஷன் கேட்டுள்ளார். (க-23)

(கும்பளை)

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக த்துக்கு உட்பட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றுவருகின்றன.

இதன் ஓர் அங்கமான ஆண், பெண் இருபாலாருக்குமான எல்லேப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு குடத்தனை உதய சூரியன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளதாக வடமராட்சி கிழக்கு இளைஞர் சேவைகள் மன்ற உத்தியோகஸ்தர் என்.கோகுலராஜா அறிவித்துள்ளார். (க-19)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# சம்பியன்ஸ் கிண்ண உதைபந்து; இலங்கை இராணுவப்படை சம்பியன்





சம்பியன்ஸ் ஒஃப் சம்பியன்ஸ் உதை பந்தாட்டப் போட்டியில் இலங்கை இராணு வப்படை அணி சம்பியனாகியது.

இப் போட்டி துரையப்பா விளையாட்டரங் கில் அண்மையில் இடம்பெற்றது. இலங்கை விமானப் படை அணியும் இலங்கை இராணுவப் படை அணியும் இப் போட்டியில் மோதியது.

இரு அணிகளும் தமக்கு கிடைத்த சந்தர் ப்பங்களைத் தவற விட்டமையால் போட்டி சமநிலையில் நிறைவு பெற்றது.

சமநிலை உடைப்பு உதை வழங்கப்பட்ட போது 4:3 கோல்கள் அடிப்படையில் இல ங்கை இராணுவப்படை அணி போட்டியில் வெற்றியீட்டி சம்பியன்ஸ் ஒஃப் சம்பியன்ஸ் கிண்ணத்தை தமதாக்கியது. (க-23)

## உடுவில் பிரதேச இ.கழக பெண்களுக்கான கபடி;
# கந்தையா மன்றம் வெற்றி





உடுவில் பிரதேச இளைஞர் கழக சம் மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான விளையாட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகியுள்ளன.

இதில் பெண்களுக்கான கபடிப் போட்டி அண்மையில் இடம்பெற்றது. இதில் கந் தையா மன்றம் இளைஞர் கழக அணியும் உடுவில் முருகமூர்த்தி இளைஞர் கழக அணியும் மோதியது.

இதில் 19:12 என்னும் புள்ளிகள் கணக் கில் கந்தையா மன்றம் இளைஞர் கழக அணி வெற்றி பெற்றது. (க-23)

# கரவெட்டி பி.இளைஞர் கழக விளையாட்டு நிகழ்வுகள்



கரவெட்டி பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்திற்குட்பட்ட இளைஞர் கழகங் களுக்கிடையிலான விளையாட்டு நிகழ்வு களின் இறுதி நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 2.00மணிக்கு இமையா ணன் மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

கரவெட்டி பிரதேச இளைஞர் கழக சம்மேளன தலைவர் ஆர்.நிரோஜன் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ் மாவட்ட உதவிப்பணிப்பாளர் ஐ.தவேந்திரன் கலந்து கொள்வார்.

கௌரவ விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் எஸ்.சுகிர்தன், கரவெட்டி பிரதேச இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிவச்செல்வம் ஆகியோர் கலந்து கொள்வார்கள். சிறப்பு விருந்தினராக யாழ் மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத் தலைவர் எஸ்.லக்ஷன் கலந்து கொள்வார்.

இந் நிகழ்வின் சிறப்பு அங்கமாக உடுப்பிட்டி நவஜீவன்ஸ் இளைஞர் கழக அணியும் கருணாகரன் இளைஞர் கழக அணியும் மோதும் கரப்பந்தாட்ட இறுதிப் போட்டி இடம்பெற வுள்ளது.

உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் அல்வாய் மனோகரா இளைஞர் கழக அணியும் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் இளைஞர் கழக அணியும் மோதவுள்ளன.

பெண்களுக்கான வலைப்பந்தாட்ட இறுதியாட்டத்தில் அல்வாய் மனோகரா இளைஞர் கழக அணியும் கலைமதி இளைஞர் கழக அணியும் மோதவுள்ளன. (க-23)


## கும்பலை பாரதி வி.கழகத்தின் தாச்சி இறுதிப் போட்டி

அளவெட்டி கும்பலை பாரதி விளையாட்டுக கழகம் மாவட்ட மட்டத்தில் தாச்சி போட்டி களை நடத்தி வருகின்றது. இப் போட்டிகளின் இறுதிப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணி முதல் அளவெட்டி கும் பலை பாரதி விளையாட்டுக் கழக மைதா னத்தில் இடம்பெறவுள்ளன.

முதலாவது இறுதிப் போட்டி மாவட்ட மட்ட அணிகளுக்கிடையிலான போட்டிகளின் வெற்றியாளரை தீர்மானிக்கும் போட்டியா கும். இப் போட்டியில் பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக் கழக அணியும் பண்டத்தரி ப்பு சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழக அணியும் மோதவுள்ளன. அழைக்கப்பட்ட அணிகளுக்கிடையே நடைபெற்ற போட்டிக ளின் இறுதிப் போட்டியில் கோண்டாவில் மறுமலர்ச்சி அணியும் தையிட்டி வள்ளுவர் அணியும் மோதவுள்ளன. (க-23)







நவாலி ஸ்ரேசன் அ.மி.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் மாணவர் களின் அணிவகுப்பு நிகழ்வையும் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட முன்னாள் வலிகாம கல்விப்பணிப்பாளர் ஆர்.இருதயநாதன் சான்றிதழ் வழங்கியபின் மாணவர்களுடன் அதிபர் கே.விஜயகுமார் நிற்பதையும் படத்தில் காணலாம்.

(படங்கள் :- என் குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆட்ட நாயகன் லசித் மலிங்க

மலிங்க திரிமன்னே அபாரம்

# ஆசிய கிண்ணம் இலங்கை வசமானது

**திரிமன்னேவின் அபார சதமும், வேகப் புயல் மலிங்கவின் பந்துவீச்சும் இணைசேர இலங்கை அணி 22 பந்துகள் மீதமிருக்கையில் 5 விக்கெட்டுக்களால் பாகிஸ்தான் அணியைத் தோற்கடித்து 5-வது தடவையாக ஆசிய கிண்ணத்தை கைப்பற்றிச் சாதனை படைத்தது.**






தொடர் நாயகன் திரிமன்னே

5 அணிகளின் பங்குபற்றுதலுடன் 12-வது ஆசிய கிண்ணத்துக்கான போட்டித் தொடர் பங்களாதேஷில் நடைபெற்று வந்தது.

இத்தொடரின் இறுதிப் போட்டி நேற்றைய தினம் நடைபெற்றது. இதில் இலங்கை - பாகிஸ்தான் அணிகள் மிர்பூரில் ஒன்றையொன்று சந்தித்தன.

போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாட முடிவு செய்தது.

இதன்படி முதலில் துடுப்பாட்டத்தை ஆரம்பித்த பாகிஸ்தான் அணிக்கு, இலங்கையின் வேகப் புயல் மலிங்க அசிர்ச்சி கொடுத்தார்.

அவரின் பந்துகளுக்கு முகம் கொடுக்க முடியாமல் பாகிஸ்தான் அணியின் முன்கள வீரர்களான சர்ஜில் கான் 8, ஷெசாட் 5, ஹபீஸ் 3 என விரைவாக வெளியேற,

4.3 ஓவர்களில் 3 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 18 ஓட்டங்கள் என்று தத்தளித்துக் கொண்டிருந்த பாகிஸ்தான் அணியை, அணித் தலைவர் மிஷ்பா - பவாட் அலாம் இணையின் 4-வது விக்கெட் இணைப்பாட்டமும்,

அதன் பின் இணை சேர்ந்த பவாட் அலாம் - உமர் அக்மல் இணையின் 5-வது விக்கெட் இணைப்பாட்டமும் பாகிஸ்தான் அணியை வலுவான இலக்கை நோக்கி கரை சேர்த்தது.

பாகிஸ்தான் அணி 50 ஓவர்களின் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 260 ஓட்டங்களை எடுத்தது.

துடுப்பாட்டத்தில் பாகிஸ்தான் அணி சார்பாக பவாட் அலாம் ஆட்டமிழக்காமல் 114, அணித் தலைவர் மிஷ்பா 65, உமர் அக்மல் 59 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் வேகப் புயல் லசித் மலிங்க 56 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களை சாய்த்தார்.

261 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு தமது துடுப்பாட்டத்தை ஆரம்பித்த இலங்கை அணிக்கு குசல் பெரேரா - திரிமன்னே இணை ஆரம்பம் வழங்கியது.

இவ்இணையில் குசல் பெரேரா அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவித்துக் கொண்டிருக்க மறுபுறத்தில் திரிமன்னே நிதானமாக ஆடிக் கொண்டிருந்தார்.

இவர்கள் தமக்கிடையில் 56 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்திருந்த போது குசல் பெரேரா 41 ஓட்டங்களுடன் அஜ்மலின் பந்தில் ஸ்ரம்ப் செய்யப்பட்டு ஆட்மிழந்தார்.

தொடர்ந்து துடுப்பாட வந்த நட்சத்திர வீரர் சங்கக்கார, தான் சந்தித்த முதலாவது பந்திலேயே டக் அவுட்டாகி அதிர்ச்சி கொடுத்தார்.

தொடர்ந்து களமிறங்கிய மஹேல, திரிமன்னேவுடன் இணை சேர்ந்தார்.

கடந்த பல போட்டிகளாக துடுப்பாட்டத்தில் சொதப்பிய மஹேல இந்தப் போட்டியில் திரிமன்னேயுடன் இணைந்து அற்புதமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

இவர்கள் இருவரும் இணைந்து 3-வது விக்கெட்டுக்காக பெறுமதிமிக்க 156 ஓட்டங்களைபகிர்ந்து இலங்கை அணியின் வெற்றியை உறுதிப்படுத்தினர்.

இறுதியில் இலங்கை அணிதனது வெற்றியிலக்கை 46.2 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை மட்டுமே இழந்து அடைந்தது.

துடுப்பாட்டத்தில் ஆரம்ப வீரர் திரிமன்னே 101, மஹேல 75 ஓட்டங்களை எடுத்தனர்.

பாகிஸ்தானின்பந்துவீச்சில் அஜ்மல் சிறப்பாக பந்துவீசி 26 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

போட்டியின் ஆட்ட நாயகனாக மலிங்கவும், தொடரின் சிறப்பாட்டக்காரராக திரிமன்னேயும் தெரிவாகினர். (கு)

## மலேசியன் ...

படையினர் தேடுதல் நடவடிக்கையினை மேற்கொண்ட போது, வியட்நாமின் பூகுவாக் தீவிலிருந்து 153 கடல்மைல் தொலைவில் குறித்த விமானம் விபத்துக்குள்ளானதை ரேடரில் அவதானித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதில் விமானத்தில் பயணித்த அனைவரும் உயிரிழந்திருக்கலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளன. எனினும் சேத விபரங்கள் நேற்று இரவு வரை உத்தியோகபூர்வமாக வெளியிடப்படவில்லை. (செ-11)

## மும்மொழி...

80.24 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட உள்ளது.

கல்வி அமைச்சின் ஊடாக செயற்படுத்தப்படும் இந்த திட்டத்தின் கீழ் மாகாண மற்றும் பிரதேச மட்டத்தில் ஆசிரியர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்பட உள்ளது.

இந்தத் திட்டத்தின் மூலம் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளை கற்பிகும் 54 ஆயிரத்து 150 ஆசிரியர்கள் பயன் அடைவார்கள் என இலங்கைக்கான ஜப்பானிய தூதரகம் தெரிவித்துள்ளது.

இதனைத்தவிர 4 மில்லியன் பாடசாலை மாணவர்கள் மற்றும் 1.3 மில்லியன் பொது ஊழியர்களுக்கும் மும்மொழிகள் கற்பிக்க தேவையான வசதிகள் இதன் மூலம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட உள்ளது. (செ-11)

## அமெரிக்க தீர்மானத்திற்கு...

நாங்கள் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை" என்று கூறினார்.

ஐ.நா. மனித உரிமை ஆணையத்தில் அமெரிக்காவால் கொண்டு வரப்பட்டுள்ள தீர்மானம் தொடர்பாக கருத்து தெரிவித்த ராஜபக்ஷ, "கியூபா, இஸ்ரேல் போன்ற நாடுகளுக்கு எதிராகவும், இதைப்போன்ற தீர்மானங்கள் ஏற்கெனவே கொண்டு வரப்பட்டுள்ளன.

இலங்கை மட்டுமல்ல, மேலும் சில நாடுகளும் இதைப் போன்ற தீர்மானங்களை சந்தித்துள்ளன. அதைப்பற்றி நாம்கவலைப்பட ஏதுமில்லை. எனக்கு அதைப் பற்றி கவலையே கிடையாது" என்று கூறினார். (செ-11)

## தேர்தலில் வசந்...

மீண்டும் துணைவேந்தராகும் வாய்ப்பினை பெற்றுள்ளார்.

நேற்றையதினம் யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற துணைவேந்தர் பதவிக்கான தேர்தலில் தற்போதைய துணைவேந்தர், பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் 24 வாக்குகளையும், தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி குணபாலன் 16 வாக்குகளையும், யாழ். பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீட பேராசிரியர் விக்னேஸ்வரன் 13 வாக்குகளையும் பெற்றுள்ளனர்.

இவ்வாறு துணைவேந்தர் பதவிக்கு போட்டியிட்டவர்களில் அதிகூடிய வாக்குகளை பெற்ற மூவரின் பெயர்களை பல்கலைக்கழக பேரவையானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவிற்கு அறிவிக்கும்.

அதன்பின்னர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஜனாதிபதிக்கு அறிவிக்கும். இதில் ஒருவரை ஜனாதிபதி, யாழ். பல்கலைக்கழகத்தின் அடுத்த துணைவேந்தராக நியமிப்பார் .

அதேவேளை யாழ்.பல்கலைக்கழகத்தின் அடுத்த துணைவேந்தராக பேராசிரியர் வசந்தி அரசரட்ணமே தெரிவாகும் வாய்ப்பு அதிகமாகவுள்ளது.

இதேவேளை, இம்முறை இடம்பெற்ற யாழ்.பல்கலைக் கழக துணைவேந்தர் பதவிக்கு பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி குணபாலன், பேராசிரியர் விக்னேஸ்வரன், பேராசிரியர் ரட்ண-ஜீவன்கல், கலாநிதி ஆழ்வாபிள்ளை ஆகியோர் போட்டியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-4,6)

## இராணுவ மயமாக்...

இணைக்கப்படுகின்றார்கள். வீடு வீடாக இராணுவத்தினர சென்று யுவதிகளை இராணுவத்தில் இணையுமாறு வற்புறுத்துகின்றமையை நான் அறிகின்றேன். ஏன் இவர்கள் பெண்களை மட்டும் இராணுவத்தில் இணைத்துக் கொள்கிறார்கள. ஆணகளை இணைத்துக் கொள்ள முனையவில்லை.

எனவே பெண்களின் பாதுகாப்பு என்பது மிகவும் கேள்விக்கிடமாகியுள்ளது. இந்நிலையில் பெண்கள் வாழ்வாதார பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். அத்தோடு அரச வேலைகளில் வயதெல்லைப் பிரச்சினையையும் இவர்கள் முகங்கொடுக்க வேண்டியுள்ளது.

சமூக, கலாசார முறைகளில் பெண்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். இளம் தாய் விதவைகளின் சமூகப்பாதை மாற்றப்பட வேண்டும். யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு ஒதுக்கப்பட்ட எம் சகோதரிகள் சமூகத்தில் முன்னுக்கு வர வேண்டும். விதவைகள் வாழ்வாதாரம் சீர்செய்யப்பட வேண்டும்.

காணாமற்போன உறவுகளில் பெண்களின் நிலையினை பற்றி சொற்களில் அடக்கிவிடமுடியாது. தடுப்புச் சிறையில் உள்ள பெண்கள் தாம் எதிர்கொள்ளும் பாதுகாப்பு பிரச்சினை தொடர்பாக எனக்குத் தெரியப்படுத்தியுள்ளனர். எம் சகோதரிகளுக்குத் தேவையான உதவிகளை நாம் செய்வோம் என்று கூறினார்.

வட மாகாணத்திலும் இந்நாளை விழாவாகக் கொண்டாட முடியும். ஆனால் அண்மையில் எமக்கு ஏற்பட்டுள்ள அனர்த்தங்களைக் கருத்தில் எடுத்து இந்தத் தினத்தை வெறும் விழாவாகக் கருதாமல் எமக்குப் பயனுள்ளதாக மாற்றி அமைப்பது தலையாய கடமையாக மாறியுள்ளது.

எமது வட மாகாணமானது கிழக்கு மாகாணத்துடன் சேர்ந்து போரில் இருந்து அண்மையில் விடுபட்டு வந்துள்ளது. போரினால் பெரிதும் பாதிக்கப்பட்ட வர்கள்பெண்களே. எமது அபிவிருத்தி நடவடிக்கைகள் அடிப்படை உட்கட்டுமானங்களைப் பற்றியே இதுவரைகாலமும் பொதுவாகச் சிந்தித்து வந்துள்ளனர்.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் மேம்பாட்டை வலியுறுத்தும் திட்டங்கள் குறைவாகவே நடை முறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அந்நிலையைக் கருத்தில் எடுத்து எமது தமிழ்ப் பேசும் பெண்களின் வருங்காலம் பற்றி ஆராய வேண்டியது எமது கடப்பாடாக இன்று மாறியுள்ளது.

பெண்கள் பலரின் தேர்தல் காலப் பெரும் பங்காற்றலே எமது வட மாகாணசபை வெற்றி என்பதில் எமக்கு ஐயமேதுமில்லை. போரினால் பாதிக்கப்பட்ட பெண்களின் வாழ்க்கையை மேம்படுத்து வது எமது தலையாய கடன் என்பதை நாங்கள் உணர்ந்தே வைத்துள்ளோம். பல நிதி மூலங்கள் அவர்கள் வாழ்வாதாரங்களை முன்னின்று மேம்படுத்த முயற்சிகளில் ஈடுபட்டுள்ளன. பெற வேண்டியவற்றைப் புறத்தலையீடுகள் இன்றிப் பெற்றுக் கொள்ள முடியுமோ என்பதில் தற்பொழுது கரிசனையாக உள்ளோம். முயன்று முன்னேறுவோம் என்ற திடநம்பிக்கை எமக்குண்டு. எமது திட்டங்களை உங்களுக்கு எடுத்துரைப்பது அவசியம்என்றுகருதுகின்றேன்.

பெண்கள் தமக்குத் தாமே ஆற்றலளிக்கப் பழகிக் கொள்ள வேண்டும். அவற்றை மனதில் வைத்தே கடந்த இடர்க் காலங்களில் சுழற்சி முறைக்கடன், சுயதொழில் உற்பத்தி போன்றவற்றை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் நடைமுறைப்படுத்தி வெற்றியுங் கண்டுள்ளன. சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச் சங்கங்களில் பெண்களை மட்டுமே வைத்து இயங்கி அங்கும் வெற்றியை நாம் கண்டுள்ளதாக அறிகின்றேன்.

அதே நேரத்தில் எங்கள் பெண்களின் சேமிப்புப் பழக்கத்தைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் வகையில் தென்னிலங்கையைச் சேர்ந்த கூட்டுறவுச் சங்கங்கள் வட மாகாணத்திலும் உதவிக்கரம் நீட்டுவது போல் உள்நுழைந்து வெளிநாட்டு நிதி உதவிகளைப் பெற்று அதேநேரம் அந்த நிதி வாய்ப்புக்களை தம்வசப்படுத்த எத்தணிப்பதாகவும் எமக்கு அறியத்தரப்பட்டுள்ளது.

இதுபற்றி எமது பெண்கள் விழிப்பாக இருக்க வேண்டும். அதேநேரம் வட மாகாணப் பெண்கள் அனைவரும் ஒன்றிணைந்து தமக்கென ஒரு கூட்டுறவுச் சங்கத்தை அவர்களே உருவாக்கிக்கொள்ள வேண்டிய காலம் இப்பொழுது கனிந்துள்ளது. எமது வட மாகாண சபை இதற்கான முழு ஒத்துழைப்பையும் உங்களுக்குத் தர உறுதி பூண்டுள்ளது. என் பரிபாலனத்தின் கீழ்வரும் கூட்டுறவு சம்பந்தமாக எமது சபையில் கடமையாற்றும் செயலாளர்கள் பெண்களே என்பதையும் இத்தருணத்தில் சொல்லி வைக்கின்றேன் என்றார் முதலமைச்சர். (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CAMBRIDGE ENGLISH
Language Assessment
Part of the University of Cambridge

FCE & IELTS
FIRST CERTIFICATE IN ENGLISH

AN INNOVATIVE, APPROACH TO IELTS

நீங்கள் ஒரே தடவையில் IELTS இல் Band 7 ற்கு மேல் எடுக்க இலகுவான வழி எமது FCE வகுப்பில் சேர்ந்து IELTS பாடநெறியையும் ஒரே நேரத்தில் படியுங்கள்.

* இது ஓர் Upper Intermediate B2, Level பரீட்சையாகும். U.K இல் எல்லாக் கல்லூரிகளும் பல்கலைக்கழகங்களும் FCE யை IELTS க்குப் பதிலாக இதனை ஏற்றுக்கொள்கின்றன
* Every year, thousands of people who want to use English to improve their work, study and travel prospects prepare for Cambridge First Certificate in English
* FCE is an upper intermediate level exam.It tests the ability to deal confidently with a range of written and spoken communication.
* Get a certificate that is a accepted globally
* The exam is accepted by thousands of leading businesses and educational institutions worldwide.
* நீங்கள் IELTS பரீட்சை எடுப்பதற்கு விரும்புவீர்களானல், போதிய ஆங்கில அறிவு உங்களிடம் இல்லையேல் முதலில் FCE யையும் IELTS யையும் ஒரே நேரத்தில் படியுங்கள்.

Subjects : Reading,Writing,Listening,Speaking & Use of English நீங்கள் ஆங்கிலத்தில் வாழ்நாள் முழுவதும் எழுத, வாசிக்க,பேச இந்த சர்வதேச தரம் வாய்ந்த பாட நெறி உதவும்.

புதிய பிரிவுகள் 10.03.2014 ஆரம்பம்



Course Schedule
Duaration 12 Weeks ILTES / FCE
Mon, Tues, Wed, Thur
Time 07.00 a.m - 08.30 8.30 - 10.30

BRITISH COLLEGE OF ENGLISH
No. 192, Navalar Road, Jaffna (பெருமாள் கோவிலுக்குச் சமீபமாக) Tel: 0778803887
(C-6683)

SPEED LANKA EXPRESS

வெளிநாடுகளுக்கான
தபால் பொதிகள் சேவை



- உள்நாட்டு, வெளிநாட்டு துரித தபால் பொதிகள் சேவை
- உங்கள் இல்லங்களில் இருந்தவாறே அனுப்பும் வசதி
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்
- சர்வதேச விமான பயண சீட்டுகளை பெற்றுக்கொள்ளலாம்

ஸ்பீட் லங்கா எக்ஸ்பிரஸ் கொரியர் & ரவல்ஸ்
135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே - 0772931062, 0776217926 www.speedlanka.net
(C-6620)


## யாழ்தேவி...

விபத்தில் உயிரிழந்துள்ளனர்.

நெடுங்கேணியில் உள்ளஅவர்களின்உறவினர்கள் வீட்டுக் குச் சென்று விட்டு திரும்பும் வழியில் பாதுகாப்பற்ற ரயில் கடவையைக் கடக்க முற்பட்ட போது இவ் விபத் துச் சம்பவம்ஏற்பட்டுள்ளது.

இதன்போது விபத்துக்குள்ளாகியவர்கள் உடல் பலத்த காயங்களிற்கு உள்ளாகி மரணமடைந்ததாகவும் மோட்டார் சைக்கிள் உருக்குலைந்த நிலையில் காணப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (செ-4, 15 250, 266)

## இந்தியா...

மெனவும் அவர் கோரியுள்ளார்.

அமெரிக்கா, பிரித்தானியா உள்ளிட்ட நாடுகள் இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையால் நிறை வேற்றப்பட உள்ள தீர்மானமானது இனிப்பு சுவையூட்டப்பட்ட விசம் என அவர் தெரிவித்துள்ளார்.

யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் சர்வதேச சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டுமெனக் கோரி இந்தியா தனியான தீர்மானம் ஒன்றை நிறைவேற்றவேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை அரசாங்கத்தை பாதுகாக்கும் நோக்கில் தீர்மானம் தயாரிக்கப்பட்டுள்ளதாகவே கருத தோன்றுகின்றது என தெரிவித்த வைகோ,

தனிஈழம்அமைப்பது தொடர்பில் உள்நாட்டு மற்றும் புலம்பெயர் தமிழர்களின் வாக்களிப்புடன் கூடிய சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமெனவும் கோரியுள்ளார்.


GERMAN LANGUAGE ACADEMY
(ஜேர்மன் கல்லூரி)
ஜேர்மன், சுவிஸ், டொச் மொழிகள் இலகுவான வழியில் ஜேர்மனியில் வசித்து வந்த ஆசிரியரால் ஜேர்மன் தூதரகம் நடத்தும் A பரீட்சைக்கு ஏற்றவாறு பல வருடங்கள் எமது நிறுவனத்தின் ஊடாக பல மாணவர்களை முதற் தடவையிலேயே சித்தி
புதிய பிரிவுகள் ஆரம்பம்:-12.03.2014 (புதன்கிழமை)
German Languge Academy
யாழ்.ரெக்,
Tel:-0779707322
(5781)

கணனி உலகில் நம்பகமான சேவையில்
10 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
northern PC PARK
(C-6704)




TOWN SHOW ROOM
10-14, STANLY ROAD
JAFFNA
021 222 2050

TECHNICAL DIVISION
288, PALALY ROAD,
KANTHARMADAM, JAFFNA.
021 222 9581

MAIN SHOW ROOM
269E, PALALY ROAD,
KANTHARMADAM, JAFFNA
021 222 0388

SPOKEN ENGLISH
புதிய பிரிவுகள் ஆரம்பம்
கிழமைநாட்களின் மாலை நேர பாடநெறி
10.03.2014 @ 4.00 P.M (3 months)
(திங்கள் - வியாழன் வரை 4.00 - 6.00 P.M வரை)
சனி/ஞாயிறு பாடநெறி (12.00 -3.00 P.M)
15.03.2014 @ 12.00 P.M
நீங்கள் ஆங்கிலம் பேசுவதை உறுதிப்படுத்துங்கள்
A1, B1,B2(Course & Registration)
IELTS Registration Centre
வடமாகாணத்தின் முதன்மை ஆங்கிலக் கல்லூரியில் இன்றே இணைந்திடுங்கள்
E-CITY COLLEGE
372,பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்.
0212217106 / 0774924166/0775400418
(C-6710)

உடனடியான தொழில் வாய்ப்பு
இவ் விலக்கத்தை அழைத்தவுடன் உடனடியான தொழில் வாய்ப்பு. பிரதான தொழிற்சாலைகளான தேயிலை/டொபி/சொலட்/டின்/பெயின்/கிளவுஸ்/ஆடை/ டயில்/ ஜேம்/ கோடியல்/ பிஸ்கட் போன்ற தயாரிப்புக்களுக்கு.
+ உற்பத்தி + லேபல் + தரம்பிரித்தல் களஞ்சிய பிரிவு 18-50 வயது ஆண்- பெண் தேவை. உணவு + தங்குமிடம் குறைந்த விலைகளில் வரு கை அன்றே வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்படும்.
சம்பளம் 18000/=, 25000/=, 32000/=
தொடர்பு. 0776838231
(சி-6699)

புதிய ஆண்டில் சிங்கர் தரும் விசேட சலுகைகள்
* மடிக்கணனிகளுக்கு 3 வருட இலவச உத்தரவாதம் மற்றும் வட்டி இன்றிய இலகுதவணைக் கொடுப்பனவு முறைகள்
* தொலைக்காட்சிப்பெட்டிகளுக்கு மாற்றுமுறை விலைக்கழிவுடன் கூடிய வட்டியின்றிய இலகுதவணைக் கொடுப்பனவு முறை.
* Smart தொலைக்காட்சிப்பெட்டிகளுக்கு Blu Ray DVD Player இலவசம்
* சலவை இயந்திரங்களுக்கு வட்டி இன்றிய இலகு தவணைக் கொடுப்பனவுமுறை மற்றும் மாற்றுமுறை விலைக்கழிவு (4 வருட உத்தரவாதம்)
* குளிர்சாதன பெட்டிகளுக்கு pureit water Filter இலவசம் ( 10 வருட உத்தரவாதம் )
* Air Conditioner களுக்கு (inverter type அடங்கலாக) மாற்றுமுறை விலைக்கழிவு அல்லது 15% விசேட விலைக்கழிவு, மேலும் 6 மாத வட்டி இன்றிய இலகு தவணை கொடுப்பனவு.
* Sofa Set களுக்கு 20% வரை விலைக்கழிவு, மேலும் விசேட சலுகைகள்
* நீர்ப் பம்பிகளுக்கு 5 வருட உத்தரவாதத்துடன் விசேட இலகு தவணை கொடுப்பனவு முறை, மேலும் விசேட விலைக்கழிவுகள்
(C-6696)
SINGER SAMSUNG lenovo FOR THOSE WHO DO HITACHI Inspire the Next SISIL Whirlpool GRUNDIG
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் 021 222 5408 | சுன்னாகம். 021 224 0555 | மானிப்பாய். 021 225 5343 | சங்கானை 021 225 1100 | சாவகச்சேரி 021 227 0197 | கொடிகாமம் 0776433888 | நெல்லியடி. 021 226 4937 | பருத்தித்துறை 021 226 3411 | கிளிநொச்சி 021 228 0199 | முல்லைத்தீவு 021 229 0180


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.03.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org